413
44255
413

தமிழரும்
தமிழ் நாட்டு எல்லையும்

ஆசிரியர்

ஏ. கே. சந்திரசேகரன்

கிடைக்குமிடம் :

ஸ்பார்டன் & கம்பெனி

எண் 10, பிராட்வே, சென்னை

சென்னை,
மார்ச், 1947

Y73(P31)
N47
108774

தமிழரும்
தமிழ் நாட்டு எல்லையும்

ஆசிரியர்

ஏ. கே. சந்திரசேகரன்

கிடைக்குமிடம் :

ஸ்பார்டன் & கம்பெனி

எண் 10, பிராட்வே, சென்னை.

உரிமை
பெற்றது

சென்னை,
மார்ச், 1947

ஓரியண்டல் பிரின்ட்டிங் ஒர்க்ஸ்
5, சுங்குராம செட்டி தெரு,
ஜி. டி. மதராஸ்.

திரு. ஏ. கே. சந்திரசேகரனுக்காக
Quota No. Q.H. M.S. 221-C

விலை ரூபா 2

அட்டவணை

எண்	பொருள்	பக்கம்
i.	சிறப்புரை	
ii.	என் ஆசை	
1.	பண்டைத் தமிழ் நாட்டு எல்லையாது? ...	1
2.	நாட்டுப் பிரிவினையில் தமிழரும் ஆந்திரரும்	6
3.	நெல்லூரும் சித்தூரும் தமிழ் நாட்டின் பகுதிகளே	9
4.	தமிழ் நாட்டுத் தெலுங்கர் பட்டபாடு ...	12
5.	ஆதாரம் தரட்டுமே!	18
6.	காட்டைத் திருத்தி நாடாக்கினவர் யார்?	21
7.	அமைதிண்யக் குலைக்கும் ஆந்திரரின் அருந் தொண்டு	23
8.	பட்டப் பெயர்களே ஜாதிகளான விந்தை	25
9.	தமிழ் மன்னர்களின் பரந்த நோக்கம் ...	28
10.	எவரையும் மனமுவந்து வரவேற்போர் தமிழர்	30
11.	தமிழர்கள் ஆட்சி	32
12.	பகைவனேயும் உறவு கொள்ளும் தகைமை	34
13.	வேங்கி நாடு யாருடையது?	35
14.	எம்மதமும் சம்மதமே	38
15.	தமிழர்களின் தேர்தல் முறை ...	41
16.	தமிழ் நாட்டுக் கோட்டங்களுள் வேங்கடமும் ஒன்றே	47
17.	இன்றுள்ள ஆந்திர நாட்டுச் செழுமைக்கு ஆதி காரணம் யார்?	51

18. கலிங்க நாட்டையும் கேட்க உரிமையுண்டு 55
19. ஆந்திர நாடு சிதறுண்டமை ... 59
20. முன்னர் பிரிக்கப்பட்ட ஜில்லாக்களை ஒன்று சேர்க்கவேண்டும் ... 62
21. இருந்த நாட்டை விட்டனர், வந்த நாடு வேண்டுமாம் 66
22. ஜனத் தொகைக் கணக்குத் தந்திரம் ... 69
23. புலுசுசாம்ப மூர்த்தியின் புது யோசனை 74
24. கன்னடம் பற்றிக் கருத்து மாறுவானேன்? 78
25. ஆந்திர நாட்டில் குழப்பம் 82
26. எல்லையை மாற்ற எவரால் ஆகும்? ... 85
27. கலிங்கம் கொண்ட தமிழ் மன்னன் ... 88
28. தமிழரும் ஆந்திரரும் 91
29. மேலும் இரண்டு ஜில்லாக்களை வேண்டுவது நியாயமே 96
30. தமிழ்நாடு மீள அணிவகுப்போம் ... 99

சிறப்புரை

தமிழ் நாட்டில் வந்து குடியேறிய ஆந்திரர்கள் தங்களுக்குச் சென்னையில் மூன்றில் ஒரு பாகம் வேண்டுமென்று கூச்சல் போட்டனர். இவர்கள் கூச்சலுக்கு ஆதாரமுண்டா வென்று சென்னை வாசிகள் ஆர அமர யோசித்தனர். 1939-ம் ஆண்டு, அக்டோபர் மாதக் கடைசி வாரத்தில் தமிழர்கள் சைதாப்பேட்டையில் ஒரு கூட்டம் கூட்டினர். ஸ்ரீ. சி. என். முத்துரங்க முதலியார் மேற்படி கூட்டத்துக்குத் தலைமைவகித்தார். பலர் ஆந்திரர் களின் கூச்சலைக் கண்டித்துப் பேசினர். அதன் சம்பந்தமாக ஸ்ரீ. ஏ. கே. சந்திரசேகர முதலியார் 'தினமணி'ப் பத்திரிகையில் 1939-ம் ஆண்டு, டிசம்பர் மாதம் முதல், தொடர்ச்சியாக வாரா வாரம் சுமார் ஓர் ஆண்டு காலம் வரை கட்டுரை எழுதி வந்தார். அக கட்டுரைகளின் சாராம்சமே இப்போது இந்நூலாக வெளிவந்துள்ளது. தமிழ் நாட்டின் எல்லையை ஆராய்ச்சி செய்து, யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய நிலைமையில் ஆசிரியர் எழுதியுள்ளது பாராட்டத்தக்கது. அரசியல் நிர்ணய சபை ஆரம்பித்து, வெள்ளையர்கள் வெளியேறும் நாளை 1948-ம் ஆண்டு, ஜூன் மாதம் என்று சமீபத்தில் பார்லிமெண்டில் பிரதமர் ஆட்லி குறிப்

பிட்ட பின்னர், நாம் கண்மூடி மௌனிகளாக இருக்க முடியாது, இருக்கவும் கூடாது. ஆகவே, ஒவ்வொரு தமிழரும், தமிழ்நாட்டிலுள்ளவர்கள் யாவரும் இந் நூலினைப் படிக்கவேண்டுவது அவசியமாகும். எல்லை கமிஷன் வரும்பொழுது ஆராய்ச்சி செய்து, எல்லை வகுக்க இந்நூல் பயன்படும். ஒவ்வொரு தமிழ் நாட்டுப் பள்ளிக்கூடங்களிலும், வாசகசாலைகளி லும் இதனை வாங்கி வைத்தல் வேண்டும்.

மேலெழுந்தவாரியாக ஆராயாமல் பல ஆண்டு களாக பெருமுயற்சி செய்து, கல்வெட்டுகள், புரா ணங்கள், இலக்கண நூல்கள், இதிகாசங்கள், சரித் திரங்கள் மூலம் தாம் கண்டுதெளிந்த உண்மையைத் தெளிவான நடையில் ஸ்ரீ. ஏ. கே. சந்திரசேகர முதலியார் எழுதியுள்ளார். ஸ்ரீ. முதலியாரைத் தமிழ்நாட்டாருக்கு அறிமுகப்படுத்த வேண்டுவ தில்லை. பன்முறை சிறை சென்ற தேசபக்தர்; நாட்டுப் பற்று, மொழிப் பற்று கொண்டு சளைப் பின்றி உழைக்கும் உத்தமர். இத்தகையோரை யாங்கள் மனமுவந்து பாராட்டுகிறோம்.

இந்நூலை அச்சிடுங்கால் பிழை திருத்தம் முதலியன செய்து தந்த ஸ்ரீ. கதலூர் பழனி-பாலசுந்தரம் அவர்களுக்கும் காலத்தில் அச்சிட்டுக் கொடுத்த ஓரியண்டல் பிரின்ட்டிங் ஒர்க்ஸ் சொந்தக்காரருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

சென்னை,
20-3-47

எஸ். பார்த்தசாரதி முதலியார்,
உரிமையாளர், ஸ்பார்டன் கம்பெனி.



தென் இந்தியா
50 0 50 100 150 மைல்கள்
1911 வது ஆண்டில்
ஜில்லாக்களிருந்தவிதம்.
கோதாவரி
கிருஷ்ணா
கர்நூல்
பல்லாரி
அனந்தபூர்
கடப்பை
நெல்லூர்
மைசூர்
வட-ஆர்க்காடு
மதராஸ்
சேலம்
தென் ஆர்க்காடு
புதுச்சேரி
மலையாளம்
கோயமுத்தூர்
திருச்சி
தஞ்சை
காரைக்கால்
மதுரை
திருநெல் வேலி

சித்தூர் ஜில்லா எங்கே?

என் ஆசை

—:o:—

1939-ம் ஆண்டு, டிசம்பர் மாதம் முதல் யான் ஓர் ஆண்டு காலம் வரையில் தொடர்ச்சியாக 'தினமணி'யில் எழுதிவந்த கட்டுரைகளின் சாராம்சத்தை வெளியிட உதவிய ஸ்ரீ. எஸ். பார்த்தசாரதி முதலியார் அவர்களைப் பாராட்டுகிறேன். இந்நூல் சமயத்துக்கேற்ற சஞ்சீவி என்பதில் ஐயமில்லை. பிரிட்டிஷ் சர்க்கார் வெளியேறும் காலத்தை நிச்சயித்துவிட்டார்கள். ஆந்திரர்கள்பேராசை கொண்டுள்ளனர். பாஷாவாரி மாகாணங்கள் ஏற்பட்டு, அவரவர்களுக்குகந்த முறையில் ஆங்காங்கு ஆட்சி நடைபெறப்போகிறது. ஆகவே, அவ்வாட்சிக்குரிய எல்லையை நாம் வகுத்து ஆளவேண்டுமென்பதைத் தமிழர்களுக்குச் சொல்லத் தேவையில்லை.

தமிழர்களுக்கு ஆக்கிரமிக்கும் நோக்கம் என்றுமே இருந்ததில்லை. இனிவருமோ? நமக்குரிய எல்லை யாது என்பதே இவ் ஆராய்ச்சி. அடையப்போகும் அருந் தமிழ் நாட்டுக்கு எல்லை கோலுதல் நமது முதற் கடன். அஃது உறுதிபெற்ற பின்னர் தான் தமிழர் நாடு, தமிழர் வாழ்வு யாவும். தமிழர்களின் உள்ளம், இனி இந்நூலால் ஒருமுகப்பட்டு ஒரு சிறிது வீறுகொண்டெழுமானல், அதுவே தமிழர்கள் எனக்குச் செய்த கைம்மாறு என மதிப்பேன்.

வாழ்க தமிழர்!

ஏ. கே. சந்திரசேகரன்,
ஆசிரியன்.

சென்னை,
20—3—47.

தமிழரும், தமிழ்நாட்டு எல்லையும்

1. பண்டைத் தமிழ்நாட்டு எல்லை யாது?

பல ஆண்டுகளாக ஆந்திரர்கள் தங்களுக்குத் தனி மாகாணம் வேண்டுமென்று பிரசாரம் செய்து வருகிறார்கள். ஆந்திரர்களுக்குள் இந்தப் பிரசார விஷயத்தில் அபிப்பிராய பேதமே இல்லை. எல்லாக் கட்சியினரும் ஒன்றுசேர்ந்தே தனி மாகாணம் அமைக்க வேண்டும் என்றும் தமிழ் நாட்டாரைக் கேட்கின்றனர். ஆந்திரர்கள் பிரிந்து போவதைத் தடுப்பார் எவரும் இலர். ஆனால், அவர்கள் சென்னையைத் தங்கள் மாகாணத்துடன் சேர்த்துக் கொள்ள முயற்சிக்கும் பொழுதுதான், நாம் ஆட்சேபிக்க வேண்டுவது இன்றியமையாததாகின்றது. நமது ஆட்சேபணை சமய சந்தர்ப்பத்தை யொட்டியதல்ல! ஆக்கிரமிப்புக் கொள்கையுமல்ல! அக்கிரமமுமல்ல! நமது முன்னோர்கள், முன்னோருக்கு முன்னோர்கள், கவிஞர்கள், இலக்கண இலக்கிய ஆசிரியர்கள், தமிழ்ப் புலவர்கள், மன்னர்கள் வகுத்துச் சென்ற எல்லைவரை நாம் ஆள்வதற்கு உரிமை உண்டு. அந்த எல்லை எங்குப்போய் நிற்கின்றது, எதுவரையில் நமக்கு உரிமை உண்டு என்பதை ஆராய்வோம். ஆனால், ஆந்திரர்கள் சிருஷ்டித்திருக்கும் எல்லையோ அற்புதமான சிருஷ்டியாகும்.

சாதாரணமாகப் பொதுக்கூட்டங்களில் நாம் பேசும்பொழுது கவைக்கு உதவாத கட்சிகளை, ஆட்டுக்குப் பிரயோசனமில்லாமல் தாடையில் வளர்ந்து தொங்கும் இரண்டு தசைகளுக்கு ஒப்பிடுவது வழக்கம். உதவாத கட்சிகளுக்கு உவமை கூறுமுகத்தான் பிரயோசனமின்றித் தொங்கும் ஆட்டின் தாடைத் தசைகளுக்கும் சிறிது கௌரவம் ஏற்படுகிறதல்லவா? அதைப் போலவே சென்னையில் "நறுநாற்ற ஜீவநதி"யாக விளங்கும் கூவம் நதிக்கு மகத்தான கௌரவத்தை உண்டு பண்ண சில ஆந்திர சகோதரர்கள் இப்போது தீர்த்த யாத்திரை செய்யக் கிளம்பிவிட்டார்கள்! கூவம் நதிக்குத் தெற்குப் பாகம் தமிழ்நாட்டு எல்லை என்றும், வடக்குப் பாகம் ஆந்திர எல்லை என்றும் இருக்கவேண்டுமாம்! ஆகவே நாற்றம் வீசிக்கொண்டிருக்கும் கூவம் நதி, இப்பொழுது ஆந்திர தேசத்திற்கும், தமிழ் நாட்டிற்கும் எல்லைப்புறமாக விளங்க வேண்டுமாம். எப்படி எல்லை நிர்ணயம் பாருங்கள்?

திருவொற்றியூர், செம்பியம், அயன்புரம் முதலிய கிராமங்கள் செங்கல்பட்டு ஜில்லாவைச் சேர்ந்தனவாயிற்றே. முதலில் ஆந்திர எல்லைக்குப் பக்கத்திலுள்ள சித்தூர் ஜில்லாவை ஆந்திர தேசத்துடன் சேர்த்துக்கொண்ட பிறகல்லவா சென்னைக்கு வரவேண்டுமென்று தமிழர்கள் நினைக்கலாம்? இதுதான் தமிழர்களுக்கும் ஆந்திரர்களுக்குமுள்ள வித்தியாசம்.

பசு மாட்டை இழுத்துக் கட்டவேண்டுமானல், தும்பைப் பிடிப்பார்கள் தமிழர்கள். ஆனல், ஆந்திர சகோதரர்களோ, தும்பைவிட்டு வாலைப் பிடிப்பார்

கள். மகா தைரியசாலியான ஹிட்லர்கூட போலந்தைப் பிடிக்க டான்ஸிக்கைத்தான் கேட்டான். டான்ஸிக்கைக் கொடுக்கும்பொழுது அதைச் சேர்ந்த "காரிடார்" என்று சொல்லப்படும் சுற்றுப்புறங்களையும் கேட்டான். அதைப் போலவே சென்னையைக் கேட்டு வாங்கிக் கொண்டால், அதைச் சேர்ந்த "காரிடார்" என்று கூறப்படும் சுற்றுப்புறக் கிராமங்களையும் கைப்பற்றலாமல்லவா? ஆக்கிரமிப்புக்குச் சர்வாதிகாரியாக ஹிட்லர் அன்று விளங்கினன். அதற்குத் தகுந்த ஆயுத பலமும் இருந்தது அவனுக்கு. சென்னையில் சர்வாதிகாரி ஏது என்று நினைக்க வேண்டாம். ஆந்திரர்களுக்கும் ஆயுதபலமிருக்கிறது. அதுதான் வோட்டு.

சென்ற 1941-ம் ஆண்டு எடுத்த சென்ஸஸ் (ஜனசங்கியை) கணக்கில் சிரமப்பட்டு எல்லாரையும் ஆந்திரர்களாக்கிவிட்டால், போதுமென்று சில ஆந்திர நண்பர்கள் நினைத்தார்கள். சில நண்பர்கள் பத்தாயிரம் ரூபா வசூலித்து நாமே கணக்கெடுத்துச் சென்னையிலுள்ள 7 லட்சம் பேர்களில் ஆந்திரர்கள் 5 லட்சமென்று அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் சமர்ப்பித்து விட்டால் போதுமென்று கருதினர்களாம்! இவைகளெல்லாம் மேனாட்டு யுத்த தந்திர முறைகள். மற்ற நாடுகளைக் கைப்பற்ற வேண்டுமானல், மேனாடுகளில் சில நாடுகள், தங்கள் நாட்டிலுள்ளவர்களில் கொஞ்சம் பேர்களை அங்கு ஏற்றுமதி செய்து விட்டுப், பிறகு ஏற்றுமதியானவர்களின் குறைகளைக் கவனிக்கவில்லையே என்ற கூச்சலைக் கிளப்பிக் கொண்டு, பீரங்கிகளுடன் வந்து ஆட்களைச் சம்ஹாரம்

செய்து, நாட்டை ஆக்கிரமித்தன, ஆக்கிரமிக்கின்றன. இவ்வாறு ஏற்றுமதிகூட வேண்டாம், இங்கிருக்கிறவர்களையே ஆந்திரர்களென்று கணக்கெடுத்து விடலாமென்று நினைக்கிறார்கள். அது வரைக்கும் நாம் ஆந்திரர்களுக்கு வந்தனம் செலுத்த வேண்டும். .

ஹிட்லருக்காவது டான்ஸிக் வேண்டுமென்று கேட்டதற்கு ஏதோ ஒரு நொண்டிச் சமாதானம் கூற இடமிருந்தது. ஆனால் ஆந்திரர்கள் சென்னை மட்டுமல்ல, சித்தூர் ஜில்லா வரையில் கேட்பதற்கு அணுவளவேனும் சமாதானம் கூற முடியாது. மேனாட்டார் எப்படி இந்தியாவை ஆக்ரமிக்காதபடி வடக்கே இமய மலையும், மற்ற மூன்று பக்கங்களைக் கடல்களும் சூழ்ந்திருக்கின்றனவோ, அதைப் போலவே தமிழ் நாட்டு எல்லையை யாரும் ஆக்ரமிக்காதபடி முன்னர்த் தமிழர்கள் வகுத்து விட்டார்கள். பிற் காலத்தில் யாராவது நம் தமிழ் நாட்டை ஆக்கிரமித்தால் என்ன செய்வதென்று தான் இடைச் சங்கப் புலவரும் தமிழ் இலக்கண ஆசிரியருமான தொல்காப்பிய முனிவர் இயற்றியருளிய தொல்காப்பியத்துக்குச் சிறப்புப் பாயிரம் தந்த பனம்பாரனார் என்னும் புலவர்,

'வடவேங்கடந் தென்குமரி ஆயிடை
தமிழ்கூறு நல்லுலகத்து,
வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளு நாடி''

என்று எச்சரிக்கையோடு எல்லை கோலியுள்ளார் என்பது புலனாகிறது. இந்தச் சிறப்புப் பாயி

ரத்திலிருந்தே வடவேங்கட மென்று கூறப்படும் திருப்பதி வரை தமிழ் நாட்டு எல்லை யாகுமென்று நன்கு விளங்குகின்றது அன்ருே? இவருக்குப் பிறகு வந்த கம்பர், தொல்காப்பியத்தில் கூறப் பட்ட எல்லையை உறுதிப் படுத்த சேர, சோழ, பாண்டிய, தொண்டை நாடுகள் ஒவ்வொன்றுக்கும் எல்லை தனித் தனியாக உண்டு என்று பாடியிருக் கிருர். அதில் தொண்டைநாட்டுக்கு நாற்புற எல்லை யையும் விஸ்தீரணத்தையும் வெகு அழகாகப் பாடி யுள்ளார்.

"மேற்குப் பவளமலை, வேங்கடம் நேர்வடக்காம்
ஆர்க்கு முவரி யணிகிழக்கு-பார்க்குளுயர்
தெற்குப் பிணுகி திகழிரு பதின் காதம்
நற்ருெண்டை நாடெனவே நாட்டு"

ஆகவே, இவருடைய வெண்பாவைப் பார்த் தாலே திருப்பதிவரை தமிழ் நாடென்பது தெற் றென விளங்கும் அன்ருே?

இலக்கண இலக்கியங்களுக்கு ஒப்பிலா மணி விளக்குகளாய் விளங்கும் தொல்காப்பியமும், கம்ப நாட்டாழ்வாரும் சொல்லிவிட்ட பிறகு, தமிழ்நாட்டு எல்லையை யாரால் மாற்றி அமைக்கமுடியும்? அடா வடித்தனமாக இலக்கணமாவது, இலக்கியமாவது தூக்கித் தள்ளுங்களென்று ஆந்திரர்கள் கூறலாம். எல்லாவற்றிற்கும் எல்லை யிருப்பதுபோல, அடா வடித்தனத்துக்கும் எல்லையுண்டு. காட்டில் வாழும் மிருகங்களை யெல்லாம் கொன்று தின்னும் வழக்கம் புலிக்கு உண்டு. அந்தப் புலிகூட மிருகங்களை அடித்துக் கொன்று தின்னும் போது, இடப்பக் கம் விழும் விலங்குகளை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை.

ஆகவே, கொடிய மிருகமான புலிகூட தன் கொடும் செயலுக்கு ஒரு எல்லையை வகுத்துக்கொண்டிருக்கின்றது. அதுபோல, ஆந்திரர்களும் ஒரு எல்லையை நியாயமாக வகுத்துக் கொள்வார்களென்று நம்புவோமாக.

2. நாட்டுப் பிரிவினையில் தமிழரும் ஆந்திரரும்

முஸ்லிம் லீக் தலைவர்கள், நாங்கள்தான் பல்லாண்டு காலம் ராஜ்யத்தை ஆண்டுவந்தோம். இனிமேலும் நாங்களே ஆளவேண்டுமெனச் சொல்வது போல ஆந்திரர்களும் ஆவல் கொள்ளலாமல்லவா? ஆசைக்கு அளவில்லை என்பார்கள். அவ்வாறு ஆந்திரர்களும் சென்னை வரையில் தாங்கள் ஆள வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள்! பாவம்! ஒரு காலத்தில் விஜயநகர அரசன் ஆளுகைக்குட்பட்டிருந்ததால், சென்னையை ஆள எங்களுக்குத்தான் உரிமையுண்டென்று ஆந்திரர்கள் கூச்சல்போடலாம். அதற்காகப் பணம் சேர்க்கலாம். ஆர்ப்பாட்டங்கள் நடத்தலாம். இதிலிருந்தே ஆந்திரர்களுக்குச் சென்னைப் பட்டணத்தைப்பெற உரிமையில்லை என்பது நன்கு விளங்கவில்லையா? ஒரு சம்பவம். ஏலேல சிங்கரிடம் பொன் இருந்தது. திருவள்ளுவர் "இது உன்னுடைய பொன்னா"? என்று அவரைக் கேட்டார். "ஆமாம்" என்று ஏலேல சிங்கர் சொன்னார். "சரி! இந்தப் பொன் உங்களுடையதாக இருக்குமானால், கொண்டு போய்க் கடலில் வீசி விடுங்கள்" என்றார் வள்ளுவர். சொன்ன உடனேயே ஏலேல சிங்கர் பொன்னைக் கொண்டுபோய்க் கடலில் எறிந்துவிட்டார். சில மாதங்கள் சென்ற பின்னர், எறிந்துவிட்ட பொன்

பாசி பிடித்து, ஏலேல சிங்கர் வாசலில் விழுந்து கிடந்ததாக வள்ளுவர் சரித்திரம் கூறுகின்றது. எனவே, உண்மையாகவும், சரித்திர பூர்வமாகவும் சென்னை ஆந்திரர்களுக்கே உரியதென்ருல், சான்றுகள் தரட்டுமே! ஆர்ப்பாட்டங்களுக்கு அவசியமேயில்லை.

"அக் காடு வெட்டிப் பருத்தி முளைத்தால்" என்று தாத்தா சொன்னராம். இதற்குள் பே:ன் "எனக்கு ஒரு துப்பட்டி வேண்டும்" என்று தேம்பித் தேம்பி அழுதானும். அழுகிறதைப் பார்த்துக் கொண்டிருந்த தகப்பன் "போடா முட்டாள், அதைக் காலில் மாட்டிக் கிழித்து விடுகிறதற்காகவா?" என்ருனும். காட்டை வெட்டி, உழுது பருத்தி விதைத்துப் பயிரான பின்னர், பஞ்சு எடுத்து அடித்து, நூல் நூற்று, துப்பட்டி நெய்த பின்னரல்லவா எனக்கு இத்தனை முழம், உனக்கு இத்தனை முழமென்று விவகாரம் பேச வேண்டும்? துப்பட்டி என்று சொன்ன மாத்திரத்திலேயே, ஆந்திரர்கள் கையை நீட்டுகிருர்கள்; எதற்கு? துப்பட்டியை முழம் போடத்தான். துப்பட்டி கிடைத்த பின்னர் அல்லவா முழம்போட வேண்டுமென்று ஸ்ரீ. ராஜாஜி சொன்னர். "அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. இப்பொழுது நீங்கள் துப்பட்டியென்று சொன்னதுண்டா? இல்லையா? உண்டென்ருல் நீட்டுங்கள் கையை. முழம் போடுவோம். இல்லாவிட்டால் எங்கள் தேசத்துக்கு வந்தால் மேல்வேஷ்டி 'அபேஸாகி' விடும்" என்கிருர்கள் ஆந்திர சகோதரர்கள்.

"இந்தியா சுயேச்சை நாடான பிறகு ஆந்திர மாகாணம், தமிழ் மாகாணம் என்று பிரிக்கலாம். அது வரையில் கேட்காதீர்கள்" என்று அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கண்டிப்பான உத்தரவு போட்டிருக்கிறது. காங்கிரஸ் ஆணைக்கு மக்கள் கட்டுப்பட்டு நடக்கவேண்டும். ஆனால் சாமிக்கு?

ஆகவே, சமீபத்தில் ஸ்ரீ. சாமி வெங்கடாசலம் செட்டியார் கிளம்பிவிட்டார். சென்னை பூராவையும் ஆந்திர மாகாணத்துடன் இணைக்க வேண்டுமென்றார் செட்டியார். ராமதாஸ் பந்துலு துப்பட்டி காலில் மாட்டிக் கிழிக்கிறதற்காகவா என்றது போலக் கூவம் நதிக்கு வடக்குப் பாகம் ஆந்திர நாடு என்றும், தெற்குப் பாகம் தமிழ் நாடென்றும் எழுதிக் கூவம் நதிக்கரையோரத்தில் பிரதிஷ்டை செய்ய வேண்டுமென்கிறார். சென்னையில் ஒவ்வொரு வட்டத்திலும் ஆந்திர காங்கிரஸ் சபையை ஸ்தாபித்துப் பட்டா செய்துவிட வேண்டுமென்று பறக்கிறார் பட்டாபி.

பாகப் பிரிவினை வேண்டுமென்று பிள்ளைகள் தகப்பனைக் கேட்பது வழக்கம். அதற்காகப் பிள்ளைகள் மீது தகப்பன் கோபித்துக் கொள்கின்றனா? இல்லை. நியாயமாகவும், சரித்திர பூர்வமாகவும், ஆராய்ச்சி வாயிலாகவும் ஆந்திரர்களுக்குரிய பங்கைத் தமிழர்கள் தடையின்றிக் கொடுக்கத் தவறமாட்டார்கள். "தொண்டை நன்னாடு சான்றோருடைத்து" என்ற சிறப்பினைக் கொண்ட தொண்டை நாட்டினரா வஞ்சிப்பார்கள்? ஆகவே, எத்தகைய சந்தேகமும் கொள்ளாமலிருக்கும்படி ஆந்திரர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம். ஆந்திர

தேச சரித்திர ஆசிரியர்கள், தங்கள் எல்லையைச் சிறிதாக ஒரு வேளை தவறுதலாக வகுத்துவிட்டனரோ என எண்ணித் தமிழ் நாட்டை ஆக்கிரமிக்கலாமென்று இப்போது எண்ணுகிறார்கள் போலும்!

ஆதியில் காடாக இருந்த ஆந்திர தேசத்தைத் திருத்தி, முதல்தர நன்செய் நிலங்களாகச் செய்து கொடுத்தவர்கள் தமிழர்கள். எவ்வித ஆதாரமுமின்றி மேலோட்டாகச் சொன்னால் ஆந்திரர்கள் ஒப்புக்கொள்ளுவார்களா? ஒருக்காலும் அவர்கள் ஒப்புக்கொள்ளவே மாட்டார்கள். ஆந்திரர்கள் ஒப்புக்கொண்டாலும் சரி, ஒப்புக்கொள்ளாவிட்டாலும் சரி. நம்மைப் பொறுத்த வரையில் தமிழர்களுக்குப் போதுமான ஆதாரம் காட்ட வேண்டுவது அவசியமென்று கருதுகிறோம்.

3. நெல்லூரும், சித்தூரும் தமிழ்நாட்டின் பகுதிகளே

சென்னைக்குக் கிழக்கே கடல்; மற்ற வடக்கு, தெற்கு, மேற்கு ஆகிய மூன்று எல்லைகளிலும் செங்கற்பட்டு ஜில்லா சூழ்ந்து கொண்டிருக்கிறது. செங்கற்பட்டு ஜில்லா தமிழ் நாடாக இருந்த போதிலும் சென்னையை ஆந்திரர்கள் கேட்பதனால் செங்கற்பட்டு ஜில்லாவில் ஒரு பாகத்தைக் கேட்காமலே ஆக்கிரமித்துக்கொள்ளலாமென்பது ஆந்திரர்கள் நினைப்பு. செங்கற்பட்டு ஜில்லாவின் வட மேற்கில் சித்தூர் ஜில்லாவும், வடக்கே நெல்லூர் ஜில்லாவும் இருக்கின்றன. சித்தூர் ஜில்லாவிலுள்ள வட வேங்கடம் என்று கூறப்படும் திருப்

பதியே தமிழ் நாட்டின் எல்லை என்று மூதறிஞர்கள் முன்னரே கூறியுள்ளார்கள். அடுத்தபடி ஆந்திர தேசமான நெல்லூரை எடுத்துக்கொள்வோம். "ஏமண்டி! நெல்லூர் ஆந்திர பாஷனு? அரவ பாஷனு?" வென்று ஆந்திரர்களைக் கேட்டால் கூட, அது தமிழ்ப் பெயரென்று கூறி விடுவார்கள். ஒன்றுமில்லை! கார்ப்பொரேஷனில் மூன்று ஆண்டுகளுக்கு அங்கத்தினராக இருக்கும் பொழுதே பொதுஜன வரிப்பணத்தில் போடும் பாதைக்கும், நந்தவனங்களுக்கும் 'என் பெயரைப்போடு; அந்தப் பாதைக்கு இவர் பெயரை வையுங்கள்' எனச் சொல்லும் ஆந்திர சகோதரர்கள், நெல்லூர் என்று அந்த ஜில்லாவுக்குத் தமிழ்ப் பெயரை வைக்க ஒப்புக்கொள்ளுவார்களா? ஆகவே, தமிழர்களே அந்த ஜில்லாவை சீர்திருத்தித் தமிழ்ப் பெயரை வைத்துவிட்டுத் தங்கள் தாய்நாடு திரும்பி விட்டார்கள்.

ஜில்லாவின் பெயரை மாத்திரம் எடுத்துக் கொண்டால் போதுமா என்று கேட்கலாம். வேண்டாம்! அங்கு ஓடும் நதியையே எடுத்துக் கொள்ளுங்கள். அந்நதிக்கு வடபெண்ணை என்று பெயர். தென் ஆற்காடு ஜில்லாவில் ஓடும் நதிக்குத் தென் பெண்ணை என்று பெயர். ஆகவே, தமிழர்கள் நெல்லூருக்குப் போய்ச் சேவை செய்யாதிருக்கும் பட்சத்தில் நெல்லூருக்குப் பதில் தெலுங்குப் பெயரான "வட்லூர்" என்று ஆந்திரர்கள் வைத்திருப்பார்களல்லவா? மேலும் நதிகளெல்லாம் இயற்கையாகவே உற்பத்தியாகின்றன. ஏதோ தப்பித் தவறித் தமிழ்ப் பெயர் அமைந்துவிட்டால், எப்படித் தமிழர்கள் அந்த நாட்

டைச் சேர்ப்படுத்தினர்களென்று நீங்கள் நினைக்கலாம். ஏரி இயற்கையாக உண்டானதல்ல என்பதை எவரும் ஒப்புக்கொள்ளுவார்கள். அந்த ஏரிக்கு அசல் தமிழ்ப் பெயரான "பழவேற்காடு ஏரி" என்று பெயரிட்டுள்ளார்கள். ஆந்திரர்களின் முயற்சியால் இந்த ஏரி உண்டாயிருக்கும் பட்சத்தில் கட்டாயம் தெலுங்குப் பெயரே வைத்திருப்பார்களென்பதில் சந்தேகமில்லை. கீழ்க் கோதாவரியிலுள்ள ஒரு ஏரிக்குப் பெயர் "கொல்லேறு" என்று தெலுங்குப் பெயர் வைத்திருக்கும் பொழுது, இங்கு மட்டும் தெலுங்குப் பெயர் வைக்க மறந்து விட்டார்களென்று கூற இயலாது.

நெல்லூரே இந்தப் பாடு படுகிறதென்றால், சித்தூரைப்பற்றிச் சிந்திப்பானேன்? சித்தூரிலுள்ள வைஷ்ணவ ஸ்தலமான திருப்பதியே தமிழ் நாட்டின் எல்லை என்பது உறுதியாயிற்று. கண்ணப்ப நாயனர் சொர்ணமுகி நதிக்கரையிலுள்ள திருக்காளத்தியப்பரை பூசித்திருக்கிறார். இந்த க்ஷேத்திரம் தொண்டை நாட்டிலுள்ளதென்பது யாவருக்கும் தெரியும். சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த படிக்காசுப் புலவர்கூட,

"கயிலையுங் கச்சியும் விற்கோலமு நற் கழுக்குன்றமும்
பயில் வலிதாயமும் பாச்சூரும் அச்சிறு பாக்கமும் நல்
லயிலையும் வல்லந் திருவொற்றியூரு மாரசி லியு
மயிலையு மீசன் மகிழ்ந்த தன்றேதொண்டைமண்டலமே"

என்று ஐயந்திரிபறப் பாடியிருக்கிறார். கயிலை என்பது சீகாளத்தி. இதுமுதல் காஞ்சிபுரம்வரை, தமிழ் நாடென்று கூறியிருக்கும்போது ஆந்திரர்கள் எங்கே சென்னையைப் பிடிப்பது? ஆகவே, சித்தூர்

ஜில்லா வரையில் தமிழ்நாடென்பது திருமலைநாய்க்கர் காலத்திலேயே உறுதியாக்கப் பட்டுள்ளது. இதெல்லாம் புராணக் குப்பை என்று ஆந்திரர்கள் சொல்லுவார்களென்று நினைக்கலாம்.

சரி இதை விட்டுவிடுவோம். நாம் ஒரு பொருளை இழந்து விடுகிறோம் என்று வைத்துக்கொள்வோம். போலீஸ்சேவகன் இழந்துபோன பொருளைக் கைப்பற்றி ஸ்டேஷனில் ஒப்புவித்துவிடுகிறான். நாம் போய் இது என்னுடைய பொருள் என்பதற்குப் போதுமான ஆதாரம் காட்டவேண்டும். இதைவிட நம்மிட மிருந்து கொண்டுபோனவனே பொருள் நம்முடையதுதானென்று கூறிவிட்டால், பொருள் நமக்குக் கட்டாயம் கிடைத்து விடுமன்றோ? அது போல் ஆந்திரர்கள் உண்மையில் சித்தூர் தமிழ் நாடு என்று ஒப்புக்கொண்டு விட்டார்கள்.

4. தமிழ் நாட்டுத் தெலுங்கர் பட்டபாடு

சமீபத்தில் பெஜவாடா ஜில்லாவிலுள்ள முனிசிபல் ஹைஸ்கூலுக்கு நரசிம்மலு நாயுடு என்பவரைத் தலைமை உபாத்தியாயராக நியமித்தார்கள். இவருடைய ஜாதிப் பட்டத்தைப் படித்தவுடன் இவர் ஆந்திரர் என்று நினைக்கலாம். ஆந்திர கோஷ்டிகள் அப்படி நினைக்காமல், "இவர் அசல் தமிழர். எங்களுக்கு இவர் வேண்டவே வேண்டாம்" என்று கூறிவிட்டன. பேசுவதும் தெலுங்கு, பிறவியிலும் தெலுங்கர். ஆனால், பிறந்த நாடு தமிழ் நாடு; சித்தூர் ஜில்லாவாம். இந்தக் காரணத்தால் இந்தத் தமிழர் எமக்கு வேண்டாமென்று கூறிவிட்டார்கள். இந்த ஓர் உதாரணத்திலிருந்தே சித்தூர்

தமிழ் நாடென்பதை ஆந்திரர்கள் காண்பித்து விட்டார்கள் அல்லவா?

சென்னை ராஜதானியில் ஆங்கிலம் பேசும் ஆங்கிலோ இந்தியர்களிருக்கிறார்கள். இவர்களை உங்கள் தாய் மொழி என்னவென்று கேட்டால், இங்கிலீஷ் என்று ஒரே போடு போடுவார்கள். அடுத்தபடி "உங்கள் தாய் நாடான இங்கிலாந்தில் எந்த விலாசத்திலிருக்கிறீர்கள்" என்று கேட்டால், மிரள மிரள என்று விழிப்பார்கள். ஆகவே, தெலுங்கை மட்டும் பேசினால் ஆந்திரர்களாக ஆகிவிட முடியாதென்பதை ஆந்திரர்களே நிரூபித்துவிட்டபடியால், சென்னையில் வசிக்கும் தெலுங்கர்களோ அன்றிச் சித்தூர்வாசிகளோ தங்களைத் தமிழ் நாட்டினரென்று தாராளமாகச் சொல்லிக்கொள்ளலாம். அடுத்த 'சென்ஸஸ்'ஜனத் தொகை கணக்கெடுக்கும்போது திருப்பதிக்கு வடக்கே சொத்து, சுதந்திர மில்லாதவர்கள் தங்களைத் தமிழ் நாட்டினரென்று பதிவு செய்து கொள்ளுவார்களென்பதில் ஐயமில்லை.

நெல்லூர் ஜில்லா மட்டும் தமிழ்ப் பெயரென்று நினைக்கவேண்டாம். அந்த ஜில்லாவிலுள்ள பல தாலூகாக்களிலும் கூடத் தமிழ்ப் பெயர்களே வழங்கி வருகின்றன. கூடூர், போலூர், காணிகிரி, வேங்கடகிரி, உதயகிரி என்பன போன்றவை தமிழ்ப் பெயர்களாகும். உண்மையாக இந்த தாலூகாக்கள் ஆந்திரர்கள் ஆதிக்கத்தில் ஆதியிலிருந்திருக்குமானால், கட்டாயம் தெலுங்குப் பெயர்கள் வைத்திருப்பார்களல்லவா? "கிரி" என்று முடியும் தாலூகாக்களுக்குப் பின்னர்க் "கொண்டா" என்ற

தெலுங்குச் சொல்லை இணைத்திருப்பார்கள். தமிழ் நாட்டில் நீலகிரி, கோத்தகிரி, வேதகிரி, புவனகிரி, என வழங்குவது போல நெல்லூர் ஜில்லாவிலும் "கிரி" என வழங்குவதால், அந்த நெல்லூர் ஜில்லாவைத் தமிழர்கள் முன்னொருகால் நாடாக்கினர்களென்பது திண்ணம்.

சித்தூர் ஜில்லாவை எடுத்துக்கொள்வோம். இந்த ஜில்லாவிலுள்ள பல தாலூகாக்களும் தமிழ்ப் பெயர்களே. திருத்தணிகை, திருப்பதி, சீகாளத்தி, புங்கனூர், புத்தூர் முதலிய தாலூகாக்கள் எதைக் குறிக்கின்றன? இன்னொரு விசேஷம், இந்த சித்தூர் ஜில்லாவுக்குக் கிடைத்திருக்கிறது. சுமார் 36 ஆண்டுகளுக்கு முன்னர் சித்தூர் ஜில்லாவே கிடையாது. சித்தூர் தாலூகாவே பின்னர் சித்தூர் ஜில்லாவாக மாறியது.

பழைய வட ஆற்காடு ஜில்லாவுடன் சேர்ந்திருந்த சித்தூர், பல்மனேர், சந்திரகிரீ முதலிய மூன்று தாலூகாக்களையும், கடப்பை ஜில்லாவுடன் சேர்ந்திருந்த மதனபள்ளி, வாயல் பாடு என்ற இரண்டு தாலூகாக்களையும், ஜமீன் பிரதேசமான காளஸ்தி கார்வேட் நகர் முதலிய தாலூகாக்களையும் ஒன்று சேர்த்து, 1911-வது ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதி சித்தூர் ஜில்லா வென்று சிருஷ்டிக்கப்பட்டது. இப்படி யெல்லாம் சேர்த்தும் சிதைத்தும் தமிழ் நாட்டை ஒரு சிலர் ஆக்கிரமிப்பார்களென்று எண்ணித்தான் 700 ஆண்டுகளுக்கு முன்னர் பவணந்தி முனிவர்செய்த நன்னூலில் ஜில்லாவை எல்லையாக்காமல், 'குணகடல் குமரி குடகம் வேங்கடம் எனும் நான்கெல்லையில் இருந்

தமிழ்க் கடவுள்" என்றும் வடக்கே வேங்கடமென்னும் திருப்பதி மலை எல்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

என்றென்றும் இந்தியாவை ஆட்சிபுரிய வேண்டுமென்றிருக்கிற வெள்ளைக்காரர்கள் வெளியிட்ட பூகோள சாஸ்திரத்தைத் தான் பாருங்களேன்! சென்னைராஜதானியைப் பல தொகுதிகளாகப் பிரித்திருக்கிறார்கள். மற்றவைகளை நீக்கிவிட்டு, முக்கியமாக நமக்கு அவசியமான பாகத்தை மட்டும் எடுத்துக் கொள்ளுவோம். மத்திய ஜில்லாக்களெனப்படும் வட ஆற்காடு, சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, நீலகிரி ஆகிய இவற்றோடு சித்தூரைச்சேர்த்திருக்கிறார்கள். சென்னைப் பட்டணம், செங்கற்பட்டு, தென் ஆற்காட்டோடு நெல்லூரைச் சேர்த்துவிட்டு, இதற்குக் 'கர்நாடக ஜில்லாக்கள்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். நெல்லூரையும், சித்தூரையும் தமிழ் நாட்டோடு சேர்த்திருக்கிறார்களே யன்றி, ஆந்திர தேசத்தோடு சேர்க்கவில்லையென்பதை ஆந்திரர்கள் அறிதல் வேண்டும். ஆந்திரர்கள் இனியேனும் அமைதியோடு பூகோள படத்தைக் கூர்ந்து நோக்கட்டும்.

மறந்துபோன பூகோள சாஸ்திரத்தைத்தான் பெஜவாடா ஹைஸ்கூல்களின் மாணவர்கள் ஞாபகப்படுத்தினார்கள். தமிழ் நாடான சித்தூரை மத்திய ஜில்லாவோடு இணைத்திருப்பதைப் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்கள்எப்படிமறப்பார்கள்? அதனால்தான் "சித்தூர் ஜில்லா வாசியான நரசிம்மலு நாயுடுவை நாங்கள் உபாத்தியாயராக ஏற்றுக்

கொள்ள முடியாது" என்று மறுத்துவிட்டார்கள். தமிழர்களாகட்டும் ஆந்திரர்களாகட்டும், இவை ஞாபகமில்லை என்று சொல்லிவிடலாம். இது மக்களுக்குள்ள இயற்கை குணங்களில் ஒன்றுதான். ஆனாலும் ஒரு முறை நன்றாக ஞாகப்படுத்திவிட்டால் போதும் என்றுதான் நினைக்கிறோம். ஞாபகமில்லையென்று சுலபமாகக் கூறிவிடலாம். ஆனால் ஞானமில்லை யென்று ஒருவரும் கூறமாட்டார்கள். ஞானத்தையும், ஞாபகத்தையும் ஊட்டின பெஜவாடா ஹைஸ்கூல் மாணவர்களுக்கு நமது நன்றி. ஸ்ரீமான்கள் சாமி வெங்கடாசலம் செட்டியார், ராமதாஸ் பந்தலு, பட்டாபி சீதாராமைய்யா முதலிய தலைவர்கள் பல தொல்லைகளில் ஈடுபடுவதால் மறந்திருக்கலாம். ஆனால் பள்ளிக்கூட புத்தக வியாபாரி ஸ்ரீ வாவில்லா வெங்டேஸ்வர சாஸ்துருலு எப்படிப் பூகோள சாஸ்திரத்தை மறந்துவிட்டாரென்பதை நம்மால் நம்ப முடியவில்லை. 1939-வது ஆண்டின் தமிழ் நாட்டு சரித்திரமும், 1939-வது ஆண்டின் பூகோள சாஸ்திரமும் ஞாபகமில்லாத சாஸ்துருலுவுக்கு 1639-வது ஆண்டு சரித்திரம் மட்டும் நன்றாக ஞாபகமிருந்திருக்கிறது. கடைத்தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்குச் சூறை யிடுவது போலச் "சென்னைப் பட்டினத்தை" முதன் முதலாகப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குச் சூறை யிட்ட பெருமையை மட்டும்—1639-ம் ஆண்டில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு அடிமைப்படுத்திய விசேஷத்தை மட்டும் ஞாபகத்தில் வைத்திருந்து, ஆந்திர மகாசபைக் கூட்டத்தில் பிரசங்கமாரி பொழிந்திருக்கிறார்.

சிலப்பதிகார நூல் ஆசிரியரான இளங்கோ வடிகள், "குமரி வேங்கடங் குணகுட கடலா மண் டிணி மருங்கிற் றண்டமிழ் வரைப்பில்" எனத் தமிழ் வழங்கும் எல்லையைக் கூறியிருக்கிறார். இவ் வமயத்தில் இளங்கோ அடிகளைப் பற்றிச் சிறிது தெரிந்துகொள்ள வேண்டுவது அவசியம். சேர நாட்டு அரசன் சேரலாதனுடைய இளையகுமாரனே இளங்கோவடிகள். ஒரு சமயம் தமது தமையன் செங்குட்டுவனோடு வீற்றிருக்கும் பொழுது நிமித்தி கன் (சோதிடன்) ஒருவன் வந்து, இளங்கோவடி களைப்பார்த்து, 'நீர் இந்த நாட்டை ஆளுவீர்' என்று உரைத்தான். அவன் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்த செங்குட்டுவனின் முகம் மாறுபட் டது. இளங்கோவடிகள் தமையனின் கருத்தை அறிந்துகொண்டு, "அண்ணா! சோதிடர் நான் ஆளப்போவதாகச் சொன்னது இவ்வுலக மல்ல, பரவுலகமாகும்" என்று கூறித், துறவுக் கோலம் பூண்டார். இவர் எழுதிய சிலப்பதிகார வஞ்சிக் காண்டத்தின் முடிவில் கூறியிருக்கும் நீதிமொழி களைக் கவனித்தால், நல்லொழுக்கத்தில் இவர் மேம் பட்டவரென்று தெரிகிறது. இவர் சேரர் மரபின ராயினும் சேர, சோழ, பாண்டியர்களை ஒருங்கே போற்றுகின்றார். ஆகவே, நடுநிலைமையோடு இவர் வகுத்த தமிழ்நாட்டெல்லை, வடவேங்கடம் வரை என்று கூறியிருப்பது வெற்றுரையல்ல. அப்போது அவர் கண்ட தமிழ்நாட்டு எல்லை அது. இதை ஆந்திரர்கள் அறிவார்களா?

தமிழ் அறிஞர்கள், தமிழ்நாட்டு எல்லையை இவ்வளவு உறுதியாகக் கூறியிருக்கும்பொழுது, ஆந்திரதேச அறிவாளிகள் ஆந்திரதேச எல்லையை

அந்தரத்திலா விட்டு விட்டார்களென்று வேடிக்கை யாகக் கேட்கலாம். ஆமாம் என்று சொன்னல், தமிழர்களே நம்பமாட்டார்கள். ஆகவே, ஆந்திரர் கள் எப்படி நம்புவார்கள்? சரித்திரக்காரர்கள் என்ன சொல்லுகிறார்க ளென்பதைக் கவனிப் போம். 'அந்திரம்' என்னும் வார்த்தையே ஆந்திர மென்று திரிந்தது. அந்திர மென்ருல் நடுநிலைமை என்று பொருள் கூறுகின்றனர். கிருஷ்ணு நதிக் கும் கோதாவரி நதிக்கும் மத்தியிலுள்ள பிரதேசங் களுக்கே "ஆந்திர தேசம்" என்று பெயர். ஆந்திரம் என்பதற்குப் பொருள், கிருஷ்ணு நதிக் கும் கோதாவரி நதிக்கு மிடையேயுள்ள தெலுங்கு தேசம் என்று ஏறக்குறைய எல்லா அகராதிகளி லும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஆந்திரர்கள் தனி மாகாணம் வேண்டுமென்று கேட்டதற்குப் பின் னர், பிரசுரமான அகராதிகள் இருந்தாலாவது தமிழர்கள் வேண்டுமென்று எழுதிக் கொண்டனர் என்று சுலபமாகச் சொல்லிவிடலாம். ஆனல், இவை, ஆந்திரர்களுக்கோ, தமிழர்களுக்கோ பாகப் பிரிவினை வேண்டுமென்கிற எண்ணமுண் டாவதற்கு முன்னரே முன்னோர்களாலேற்படுத் தப்பட்டன. இம்முறையில் ஆந்திர தேசத்தைத் தனி மாகாணமாகப் பிரித்துக்கொண்டு போவதை யாரும் தடைசெய்வா ரில்லை.

5. ஆதாரம் தாட்டுமே

பிறகு, ஆந்திரர்கள் பேசும் பாஷையைக் கவனிப்போம். பாஷை தெலுங்கு. "திரிலிங்கம்" என்பது மருவி, தெலுங்கு என வழங்கலாயிற்று. "திரி" என்ருல் மூன்று. மூன்று லிங்கம் கோயில்

கொண்டெழுந்தருளிய மூன்று சிவ ஸ்தலங்களுக்குத் "திரிலிங்கானம்" என்பது பெயர். அஃதாவது ஸ்ரீசைலம், காளேஸ்வரம், பீமேஸ்வரமாகும். அந்தச் சிவ ஸ்தலங்களிலுள்ள ஈஸ்வரனுக்குப் பெயர் மல்லிகார்ஜுனன், காலநாதன், பீமேஸ்வரன் என்பனவாகும். இத்தகைய மூன்று ஆலய எல்லைக்குள் இருப்பவர்களே ஆந்திரர்களாவர். ஆகவே, ஆந்திர சகோதரர்களுக்கு ஏதாவது ஐயம் தோன்றுமாகில், "தக்ஷிண இந்தியா" நூலின் 96ம் பக்கத்தை ஒருமுறை பார்த்துக் கொள்ளும்படிக் கேட்டுக்கொள்ளுகிறோம். இதுவும் வேண்டாமென்றால், "என்சைகிலோப் பிடியா பிரிட்டானிக்கா"வையேனும் புரட்டிப் பார்க்கட்டும்.

ஆதியில் தெலுங்குக்கு இலக்கணம் செய்தவர் கண்ணுவ முனிவர். இவர்தம் இலக்கணத்தில் ஆந்திர நாட்டு எல்லையை எழுதியிருந்தால், தலைவர்கள் சற்றுக் கவனம் செலுத்திப் பார்ப்பது நலம். அல்லது அவருக்குப் பிறகு இலக்கணம் செய்தவரும், தெலுங்கு பாரத மியற்றியவருமான நன்னயப் பட்டரின் நூல்களிலிருந்தாவது தங்கள் ஆந்திர தேச எல்லையை நிரூபிக்கட்டும்; நாம் ஒப்புக்கொள்ளத் தயங்கோம். கீழ்க் கோதாவரி ஜில்லாவிலுள்ள இராஜமஹேந்திரபுரத்தில் அரசாண்ட இராஜராஜ நரேந்திர மன்னனிடம் சமஸ்தான வித்வானாக இருந்தவர் நன்னயப்பட்டர். இவர் ஆந்திரநாட்டின் எல்லையைக் கூறியிருந்தால், அதற்குமேல் ஏன் தெற்கே ஆக்கிரமிக்க முனையவேண்டும்? ஆகவே, ஆந்திரர்களுக்கு முன்னோர்களாயிருந்து இலக்கண மியற்றியவர்களும், தமிழர்களுக்கு முன்னோர்களா

யிருந்து இலக்கண மியற்றியவர்களும் கூறும் எல்லையை ஒப்புக்கொள்ளுவோம். இவைகளை யெல்லாம் நன்கு உணர்ந்துதான் ஸ்ரீ. வாவில்லா வெங்கடேஸ்வர சாஸ்துருலு தாம் பிரசுரிக்கும் பத்திரிகைக்கும் 'திரிலிங்கா' என்று பெயர் வைத்திருக்கிறார். தமது பத்திரிகைக்கு இப் பெயர் வைத்ததிலிருந்தே, தங்கள் தாய் நாட்டின்மீதுள்ள அபிமானம் இன்னது என்பது தெரியவில்லையா? ஆகவே, ஆந்திர தேசத் தலைவர்கள் தங்கள் தேசத்தின் எல்லையின் அளவு எவ்வளவு என்று நன்கு உணர்ந்திருக்கிறார்கள் என்பது தெளிவு. இல்லாவிடில், பழைய புராணங்களி லிருந்து தேச எல்லைகளைக் குறிப்பிடும் மேற்கோள்களை வாரி வீசமாட்டார்களா? ஆகவே ஆதியில்லாததும், அந்தம் இல்லாதது மான ஓர் எல்லையை ஆந்திரர்கள் பிடித்துக்கொண்டு அந்தரத்தில் மன்றாடுவது எதற்கோ?

முன்னோர்தம் வார்த்தைக்கு ஆந்திரர்கள் மதிப்புக் கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் நாம் மதிப்புக்கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். "வேங்கடம் குமரி தீம்புனற் பௌவ மென்றிந் நான் கெல்லை தமிழது வழக்கே" யென்று சிகண்டி முனிவர் கூறியிருக்கிறார். ஆகவே, நம்முடைய தமிழ் வழக்கு, வடவேங்கடத்திற்கு வடக்கே கிடையாது. ஒரு குழி நிலங்கூட வேண்டுவதில்லை. இவ்வாறே ஆந்திர சகோதரர்களும் வடவேங்கடத்திற்கு தெற்கே ஒரு குழி நிலத்துக்குக்கூட ஆசைப்படாம லிருப்பது நேர்மையாகும். மாடு நின்ற இடத்தில் தொழுவம் கட்டிவிட முடியுமா? ஆந்திரர்கள்

நினைத்த இடத்தையும் நின்ற இடத்தையும் ஆந்திர தேசம் என்று கூறமுடியுமா?

இதுவரை இலக்கண, இலக்கிய ஆசிரியர்கள் கூறிய ஆராய்ச்சிப்படி, தமிழ் நாட்டின் எல்லையை ஒருவகையாகக் கூறினோம். இனிச் சோழ தேச மன்னர்களின் ஆட்சியின் கீழ் நாடு எவ்வாறிருந்த தென்பதைக் கவனிப்போம். கி. பி. 1015 வரையில் அரசாண்ட பராந்தகன் மதுராந்தக சோழன், கந்தராதித்தியன் முதலியவர்களுக்குப் பின்னர் கி. பி. 1064 முதல் 1113-ம் ஆண்டு வரையில் சோழ நாட்டை அரசாண்ட மன்னன் குலோத்துங்கச் சோழனவான். இவன் காலத்தில்தான் சோழ நாட்டில் 'தொண்டை நாடு' என்று ஒரு பிரிவு உண்டாயிற்று.

6. காட்டைத் திருத்தி நாடாக்கினவர் யார்?

சோழ மன்னர்களின் ஆட்சிக்கு முன்னர்ப் பல்லவர்கள் ஆட்சியும், அதற்குமுன்னர்த் தொண்டைமான் ஆட்சியும்எவ்வாறு தொண்டைமண்டலத்தில் நடைபெற்றன என்பதைத் தமிழர்கள் அறிந்து கொள்ள வேண்டுவது அவசியம். இதை அறிந்து கொண்ட பின்னர்ச் சோழ ராஜ்ஜியத்தைப் பற்றியும், தொண்டை மண்டலத்தைப் பற்றியும் சிறிது கூறுவோம்.

தமிழ் நாடு வெறும் வனாந்திரமாக இருந்திருந்தால், யாரும் ஆக்கிரமிக்க முன் வரமாட்டார்கள். தமிழ் நாட்டார் வனாந்திரங்களையெல்லாம் நன்செய் வயல்களாக்கிய பின்னரே, எனக்கு உனக்கென்று போட்டிப் போட்டுக்கொண்டு குடியேறினார்கள் ஆந்திரர்கள். கஷ்டப்பட்டுக் காட்டைத்

திருத்தி, நாடாக்கி, நாட்டை நன்செய் நிலங்களாக்கினவர் நம் தமிழர்கள். இதற்கு ஆதாரம் உண்டு. இத் தென்னிந்தியாவில் முக்கியமாய்த் தமிழர்கள் நன்செய்ப் பயிரையே தொன்று தொட்டுப் பயிரிட்டு வந்தார்களென்பதற்குச் சீவகசிந்தாமணி, தொல்காப்பியம், காஞ்சிப்புராணம், மணிமேகலை போன்ற நூல்களே போதிய சான்ருகும். இவைகள் நாட்டுச் சிறப்பைக் கூறுமிடத்து, நன்செய்ப் பயிரையே வருணிக்கின்றன. புன்செய் சாகுபடியைக் குறித்து ஒன்றும் கூறவில்லை. 9-ஆம் நூற்ருண்டிலுதித்த சூடாமணி நிகண்டும், கம்பராமாயணமும் புன்செய்ப் பயிரைப்பற்றிக் கூறுகின்றன. ஆகவே, பழங் காலத்தில் நன்செய்ப் பயிர் விஸ்தாரமாகவும், புன்செய்ப் பயிர் குறைவாகவுமிருந்ததாகத் தெரிகிறது. தமிழர்கள் முயற்சி ஒரு பக்கம் இருந்தபோதிலும், இயற்கையும் மிக ஆதரவளித்தது. தென்னுட்டில் நீர் வசதி போதுமானபடி யிருந்ததால் நன்செய்ப் பயிர் செய்வதில் தமிழர்கள் தலைசிறந்து விளங்கினுர்கள். நீர் வசதி இல்லாவிடத்தில் புன்செய்ப்பயிர் செய்து வந்தார்கள். தமிழர்கள் எப்படி நன்செய்ப் பயிர்களில் மேன்மையுற்றிருந்தனரோ, அவ்வாறே ஆந்திரர்கள் வடக்கே புன்செய்ப் பயிர்களில் மேன்மையுற்றிருந்தனர் என்று நூல்கள் கூறும்.

ஆந்திர தேசம் சென்ற சில தமிழர்கள் "புஞ்சைக்கு உழுதால் கஞ்சிக்கு அழவேண்டும்" என்று ஆந்திரர்களைப் பார்த்துப் பரிகசிப்பதுண்டு. ஆகவே, ஆந்திர தேசத்திலிருந்த பல காடுகளைச் சுட்டு; சுட்ட சாம்பலையே நிலங்களுக்கு எருவாக்கி, நன்செய்ப் பயிர்களுக்கு ஆக்கம் கொடுத்தவர்கள்

தமிழர்களே. புன்செய்ப் பயிர்களில் மேன்மை யுற்றிருந்த ஆந்திரர்களைத் தமிழர்கள், தமிழ் நாட்டுக்கு அழைத்து வந்து, புன்செய்ப் பயிர்களையும் ஒருவாறு விருத்தி செய்தார்கள். ஆந்திரர் தமிழ்நாட்டிற்கு வந்த பின்னர்தான் வரிவரியாக விதைப்பதற்குத் தகுந்த "கொரு" என்ற கலப்பையும், பூமியி னின்றும் ஈரம் ஆவியாகச் சிதறிப் போகா வண்ணம் பூமியில் தங்கியிருக்கும் படி பதம்பண்ணக் "குடிண்டிகா" "மெடலகுண்டா" என்பவையும் ஏற்பட்டன. ஆந்திரர்களால் தமிழ் நாட்டில் புன்செய்ப் பயிர்களும், தமிழர்களால் ஆந்திர தேசத்தில் நன்செய்ப் பயிர்களும் விருத்தியடைந்தன என்பதை நாம் ஒப்புக்கொள்ளல் வேண்டும்.

7. அமைதியை குலைக்கும் ஆந்திரரின் அருந்தொண்டு

தமிழ் நாட்டினர் பயிர்த் தொழிலில் மேம்பட்டிருந்ததால் தான் "சோழ வள நாடு சோறுடைத்து" என்றும், "வையகமெல்லாங் கழனியாம் வையகத்துச் செய்யகமே நாற்றிசையின் தேயங்கள், செய்யகத்துள் வான் கரும்பே தொண்டை வள நாடு" என்றும் ஔவைப் பிராட்டியார் சிறப்பித்துக் கூறுகிறார். இவ்வளவு சிறப்பு வாய்ந்த நாட்டை ஆந்திர மாகாணத்துடன் இணைக்க வேண்டுமென்று ஆதாரமின்றி வாதாடுகிறார்கள் ஆந்திரத் தலைவர்கள்; தமிழ்நாட்டிலுள்ள தெலுங்கர்களை, தமிழர்கள் தங்களுடைய சம பங்காளிகளை போலவே பாவித்து வருகிறார்கள். தமிழர்களுக்கு எப்படிக் கிராம பரிபாலனம், மிராசு, தர்மகர்த்தா

முறை, பங்கு, மேரை முதலியவை இருக்கின்றனவோ, அப்படியே தமிழ் நாட்டிலுள்ள தெலுங்கர்களுக்கும் இருக்கின்றன. சென்ற பல ஆண்டுகளாகச் சட்ட சபையில் முதல் மந்திரிப் பதவிகள் ஸ்ரீமான்கள் சுப்பராயலு ரெட்டியார், பனகால் ராஜா, பொப்பிலி ராஜா, முனிசாமி நாயுடு முதலிய ஆந்திரர்களுக்கே கிடைத்து வந்தமையே இதற்குப் போதிய சான்று. தமிழ் நாட்டிலுள்ள தெலுங்கர்களும் தமிழர்களும் ஒரு தாயின் வயிற்றிலுதித்த சகோதரர்களைப் போலவே வாழ்ந்து வந்தார்கள்; வாழ்ந்து வருகிறார்கள்; வாழ்ந்து வருவார்களென்பதில் சந்தேகமே வேண்டாம். வெகு காலமாக ஒருமித்து வாழ்ந்து வந்த குடும்பங்களை வெற்று ஆரவாரம் புரிந்து, கலைக்க முற்படும் ஆந்திர தலைவர்களைக் கண்டு, வருந்தவேண்டி யிருக்கிறது. தங்கள் தாய் நாடும் தமிழ் நாடாகவே கருதிச் சகல உரிமைகளையும் பெற்று அனுபவித்து வரும் இவர்கள் ஆந்திர தேசத் தலைவர்களின் கூச்சலைக் கேட்பார்களோ ?

சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு, தொண்டை நாடுவென நம் நாட்டை அழைக்கின்றோம். "நாடு" என்று கூற எதற்குப் பொருத்தம் உண்டென்பதைத் திருவள்ளுவ நாயனார் தம் குறளில் வெகு அழகாக எடுத்துக் கூறியிருக்கின்றார்.

"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல,
நாட வளந்தரு நாடு".

அஃதாவது தம்மிடத்து வாழுங் குடிகள் யாதொரு வருத்தமுமின்றிச் சுலபமாகத் தானே வந்து அடையுஞ் செல்வத்தை யுடைய நாடு

எதுவோ அதனையே நாடென்று சொல்லல் வேண்டும் என்கிறார். ஆதலால், கஷ்டப்பட்டுப் பொருளைத் தேடி அலைந்த பின்னர், அதனைத் தரும் நாடுகள் நாடாகாவாம். சகல பொருள்களும் தமிழ் நாட்டில் கிடைப்பதினால் தான் இதற்கு "நாடு" என்ற பெயர் வந்தது. அதனால்தான் ஆந்திரர்கள் இங்கேயே நாட்டங்கொண்டு வட்ட மிடுகிறார்கள். இருக்க மடத்தில் இடம் கொடுத்தால், மடத்தை எங்கள் பேரில் எழுதி விடுங்களென்று கேட்பது நியாயமாகுமா?

8. பட்டப் பெயர்களே ஜாதிகளான விந்தை

தமிழர்களுக்கு பல்லவர், காடர், காடு வெட்டிகள், தொண்டையர், வேளாளர், முதலியார், பிள்ளை, செட்டியார், நாடார், கிராமணியார், கிழார், உடையார், கவுண்டர், வர்மா, வன்னியர், தேவர் என முதலிய பட்டப் பெயருண்டு. ஆந்திர தேசத்திலிருக்கும் வேளாளருக்கு வேலமர் என்றும், கன்னட தேசத்திலிருக்கும் வேளாளருக்குப் போலாலரென்றும், சோழ நாட்டிலிருக்கும் வேளாளருக்குச் சோழிய வேளாளரென்றும், துளுவ நாட்டிலிருக்கும் வேளாளருக்குத் துளுவ வேளாளரென்றும், தொண்டை மண்டலத்திலிருக்கும் வேளாளருக்குத் தொண்டை மண்டல வேளாளரென்றும், கொண்டைகட்டி வேளாளரென்றும் பட்டங்கள் வழங்கி வருகின்றன. இவ்வளவு பெயர்களையும் ஏதோ அகராதியிலிருந்து கிளப்பிவிட்டதாகக் கருத வேண்டாம். இப் பட்டங்கள் எப்படி வழங்கப்பட்டன என்பதை உதாரணமாகச் சிலவற்றை எடுத்துக் கொள்வோம்.

தொண்டை மண்டலத்தில், செங்கல்பட்டு ஜில்லாவிலுள்ள சில வேளாளர்களைக் காடுவெட்டி என்று அழைக்கின்றார்கள். சென்னையி லுள்ள பிரபல கம்பெனியிலும் பாங்கியிலும் உத்தியோகத்தில் இன்றுமிருக்கிறார்கள். இவர்கள் "காடு வெட்டி முதலியார்" என்று அழைக்கப்படுகிறார்கள்.

அநபாய சோழனிடத்தில் தொண்டைமண்டலத்திலே குன்றத்தூரி லிருந்த அருண்மொழித் தேவர் என்பவர் மந்திரியாக இருந்தார். இவரின் திறமையைக் கண்டு மகிழ்ந்த அநபாய சோழன் அருண் மொழித் தேவருக்கு 'உத்தம சோழப் பல்லவன்' என்ற பட்டத்தைக் கொடுத்தான். பின்னர், இவர் பெரிய புராணம் பாடியதினால் இவருடைய குலப் பெயரான 'சேக்கிழார்' என்பது வழங்கலாயிற்று. ஆகவே, இவருக்குத் தேவர், பல்லவன், கிழார் என்ற பட்டப் பெயர்கள் கிடைத்திருக்கின்றன என்பது தெளிவு.

காஞ்சிபுரம், சோழ மண்டலத்திற்குத் தலைநகராயிருந்தது. ஒரு காலத்தில் சோழ மன்னன் தனது மகனுக்குப் பட்டம் சூட்ட வேளாளர்களை வரவழைத்தான். இதைக் கேட்ட மற்ற வகுப்பினர் தங்களுக்கும் பட்டம் சூட்ட உரிமையுண்டென்று வாதாடினார்கள். மன்னன், தீயை வளர்த்து, அதிலிறங்கி, யாதொரு வழுவுமின்றி ஏறி வருபவரே முடி சூட்ட வேண்டுமென்று கட்டளையிட்டான். வேளாளரைத் தவிர மற்றவர்கள் இறங்கத் துணியவில்லை. அவ்வாறு தீயில் மூழ்கிக் கரையேறி முடி சூட்டியவர்களே வன்னியர்களாவார்கள். வன்னி என்றால் நெருப்பு என்று பொருள்.

இக் காரணம் பற்றி அக்கினி குல க்ஷத்திரியர்களென்றும், வன்னிகுல க்ஷத்திரியர்களென்றும் வழங்கப்படுகின்றனர்.

வேள் என்பது மண்; அதனை ஆள்வோர் வேளாளரென்றும், சகல தொழிலுக்கும் முதன்மையாக இருப்பது விவசாயமானபடியால் அவ் விவசாயம் செய்பவர்களை முதன்மையார், அல்லது முதலிமாரென்றும், வேளாண்மைத் தொழிலுக்குக் கர்த்தாவாக இருப்பதால் வேளாளரென்றும், அறிவில் சிறந்தவர்களென்பதற்காக் கிழார் என்றும் வழங்கப்பட்டனர். நிலத்தைத் திருத்திக் கார் காத்து வேளாண்மை செய்வதால் கார்காத்தார் என்னும் பட்டமும் உண்டாயிற்று.

பல்லவ அரசர்களின் வம்சாவளியைக் குறித்துச் சேந்கலூர் சிலாசாஸனத்தில், மகாராஜ ஸ்காந்த வர்மன், குமார விஷ்ணு, புத்த வர்மன் என்று அவர் தம் பரம்பரியம் கூறப்பட்டிருப்பதால், பல்லவர்களுக்கு வர்மன் என்ற பட்டமும் வழங்கப்பட்டு வந்துள்ளது. ஆகவே, ஆதியில் தமிழர்களுக்கு இவ்வாறு பல பட்டப் பெயர்கள் கிடைத்தன. ஆனல், நாளடைவிலோ பல்லவர்கள் காலத்திலும், சோழர்கள் காலத்திலும் பெற்ற பட்டங்கள் வம்ச பாரம்பரியமாக வந்து, ஒவ்வொரு பட்டத்தாரும் ஒவ்வொரு ஜாதியாராக ஆகிவிட்டார்கள். ஜாதிகள் வளர, வளர அன்னியர்கள் ஆட்சியும் பலப்பட்டது. நாம் வேறு, நீங்கள் வேறு என்கிற வேற்றுமைகள் வளர்ந்தன. இவை போதா வென்று, தெலுங்கர், தமிழர் என்ற வித்தியாசத்தைத் கிளப்பி, நாட்டில்

அமைதியின்மையை உண்டாக்கும் தலைவர்களுக்குத் தமிழ் நாட்டார் ஆதரவளிக்காம லிருப்பார்களாக. தமிழ் நாட்டார் என்றால், தமிழ் நாட்டில் வசிப்பவர்களென்று பொருள்கொள்ளல்வேண்டும். வேங்கடம் முதல் கன்னியாகுமரி வரையிலுமுள்ள நிலப் பரப்பே தமிழ் நாடாகும். அது தான் தமிழ் நாட்டின் எல்லையாகும். அவ் வெல்லைக்குள் வாழ்ந்து, தமிழ் நாட்டைத் தாய் நாடெனக் கருதுவோரே தமிழர் ஆவார்.

9. தமிழ் மன்னர்களின் பரந்த நோக்கம்

நிற்க. சரித்திர ஆசிரியர்களும், தமிழ் நாட்டு மன்னர்களும், தமிழ் நாட்டு எல்லையை எப்படி நிர்வகித்தார்கள் என்பதையும் சற்றுக் கவனிப்போம். தமிழ் மன்னர்கள் ஒரு காலத்தில் பதினெட்டு பாஷை பேசும் தேசங்களை ஆண்டார்களென்பதற்குப் போதுமான ஆதாரங்கள் இருக்கின்றன. தமிழர்கள் வேறு நாட்டை ஆண்டார்களென்றால், தங்களுடைய பிரதிநிதிகளை அங்கு ஏற்றுமதி செய்து ஆட்சி நடத்தவில்லை. அல்லது அந்நாட்டு மக்களைக் கசக்கிப் பிழிந்து கப்பமும் கேட்கவில்லை. அப்படி அவர்கள் வாங்கிய கப்பத்தைத் தாங்களே தங்களுக்குச் செலவிட்டுக் கொள்ளவுமில்லை. தமிழர்களைக் குடியேற்றி, அந்நாட்டைத் தமிழ் நாட்டோடு இணைக்கவும் இசைந்தாரில்லை அத்தகைய எண்ணம் தமிழ் நாட்டு மன்னர்களின் கனவில் கூடத் தோன்றக் கூடாதென்பதற்காகவே தமிழ் நாட்டு எல்லையை ‘வடவேங்கடம் வட வேங்கடம்’

என்று ஒரு முறைக்குப் பன்முறையாகக் கூறி யிருக்கிருர்கள் முன்னுளைய மூதோர்.

தென் காசியில் அரசு செலுத்திய கோச்சடை யன் அரிகேசரி பராக்கிரம பாண்டியனின் மெய்க் கீர்த்தி, தென்காசி கோவில் சிலாசாஸனத்தில் எழுதப்பட்டிருப்பதைக் கவனித்தால் தெரியும்.

"பதினெண் பாஷைப் பார்த்திப ரனைவரும்
திறையுஞ் சின்னமு முறை முறை கொணர்ந்து
குறைபல விரந்து குறைகழ லிறைஞ்ச
அவரவர் வேண்டிய தவரவர்க் கருளி'

என்கிறது சிலாசாஸனம். மன்னர்களிடம் வாங்கிய கப்பங்களைத் திரும்பவும் அவர்களுக்கே கொடுத்து உதவினுன் என்பதை மேற்படி சிலாசாஸனத்தி லிருந்து தெரிந்துகொள்ளலாம். மற்ற பாஷைக் காரர்கள் தமிழ்நாட்டில் குடியேறினதைப் போலத் தமிழர்கள் அக்காலத்தில் வேறு நாட்டுக்குப் போக வேண்டிய அவசியமில்லை.

கி. பி. 150-ம் ஆண்டில் ஆந்திர தேசத்தை ருத்திரதாமன் என்னும் மன்னன் ஆண்டு வந் தான். தமிழ் நாட்டுப் பல்லவர்களின் திறமையைக் கேள்வியுற்றுச் சுவசிகன் என்னும் ஒரு பல்ல வனைத் தனக்கு மந்திரியாக இருக்கும்படி நியமித் தான். சுவசிகன் திறம்பட ஆள்வதைக் கண்ட வேறு ஆந்திர மன்னஞன கோதமிபுத்திரன் சகக் கரணி என்பவனுக்குத் தமிழ்நாட்டுப் பல்லவமந்திரி யின் மீது துவேஷமுண்டாயிற்று. பல்லவ மந்திரி யான சுவசிகனை எப்படியாவது நாட்டை விட்டுத் துரத்திவிட வேண்டுமென்று முயற்சித்தான். வெற் றியும் பெற்ருன். பல்லவ மந்திரியான சுவசிகன்

தன் நாடு திரும்பிவிட்டான். தன் நாடு வந்ததும், காட்டைத் திருத்தி நாடாக்கி, அதற்குத் தானொரு மன்னவனாக விளங்கினான்.

தமிழர்கள் பயிர்த் தொழிலில் மேம்பட்டு விளங்கியது போலவே, ராஜ்ய நிர்வாகத்திலும் சிற்ப சாஸ்திரங்களிலும் தலைசிறந்து விளங்கினார்கள். தமிழர்களால் கட்டப்பட்ட ஆயிரக்கணக்கான ஆலயங்கள், வானளாவித் தமிழ்நாட்டில் நிற்கின்றன. தமிழ் நாட்டிலுள்ள ஆலயங்களைப் போல வேறெங்கும் கிடையாது. ஆலயங்களைக் கட்டுவதற்கு, ஆயிரக்கணக்கானவர்களை வெவ்வேறு நாட்டிலிருந்து அழைத்து வந்தனர் தமிழ் மன்னர்கள். இதுபற்றியே "வேலையில்லாதவர் வேளாள வீதிக்குப்போங்கள்" என்னும் பழமொழி இக்காலத்திலும் வழங்கி வருகிறது. உலக அதிசயங்கள் ஒன்பதிலே தமிழர்கள் ஒரு அதிசயத்தை மகாபலிபுரத்தில் நிலைநாட்டினார்கள். ஆனால், பட்டணத்தைப் பங்கு போடுவதை பத்தாவது அதிசயமாக இருக்க ஆந்திர தேசத் தலைவர்கள் கருதுகிறார்கள் போலும்!

10. எவரையும் மனமுவந்து வரவேற்பேர் தமிழர்

புன்செய்த் தொழிலுக்காகவும், ஆலயங்கள் கட்டுவதற்காகவும் ஆந்திரர்களை அழைத்து வந்தது மட்டுமன்றிப், புரோகிதம் செய்யவும், யாகம் செய்யவும் ஆந்திர தேசத்திலிருந்து தெலுங்குப் பிராமணர்களையும் அழைத்து வந்தார்கள். தமிழ் நாட்டில் புரோகிதம் செய்யும் பிராமணர்களெல்லாரும் பெரும்பாலும் ஆந்திர தேசத்துத் தெலுங்கர்கள் என்பதை நாம் இங்கு

எடுத்துக் காட்டவேண்டிய அவசியமில்லை. அவ ரவர்கள் நடை முறை அனுபவத்தி லிருந்தே தெரிந்து கொள்ளலாம். அவ்வாறு அழைத்து வந்த ஆந்திர பிராமணர்களை நட்டாற்றில் விட்டு விடவில்லை. இன்னின்ன பிராமணர்கள் இவரிவர் களின் வீட்டுப் புரோகிதங்களைச் செய்ய வேண்டு மென்று ஏற்படுத்தியும், தக்ஷிணை கொடுத்துப் போதாமைக்குப் புரோகித மானியமென்று அவர் கள் குடும்பத்துக்குப் போதுமான நிலத்தையும் இனமாக கொடுத்தனர் தமிழர்.

கி. பி. 1616-ல் தென் காசியில் அரசாண்ட ஸ்ரீ வல்லப பாண்டியன் சித்திர நதி தீரத்திலுள்ள அபிஷேகபுரமென்ற ஊரைப் பிராமணர்களுக்குத் தானம் செய்ததாகத் தென்காசியிலுள்ள சிலா சாஸனம் கூறுகிறது. ஒரு சமயம் இப் பாண்டியன் சோமயாகம் செய்யவேண்டி, வடநாட்டி லிருந்து தெலுங்குப் பிராமணர்களை அழைத்துக் கொண்டு வந்து, யாகம் செய்து தீட்சை பெற்றான். இம்மன் னன் வம்சத்தில் வந்தவர்களுக்குத் தீக்ஷதர்க ளென்றும், சோமயாகம் செய்த தெலுங்கர்களுக்கு 'சோமயாஜுலு' என்றும் பட்டப் பெயர்கள் வழங் கலாயின. இவர் தம் பரம்பரையைச்சேர்ந்தவர்கள் திருநெல்வேலி ஜில்லாவில் இன்றுமிருக்கிறார்கள்.

தமிழ் இலக்கண ஆசிரியர்கள், தமிழ்ப் பாஷைக்கு இலக்கணம் தொகுத்ததைப் போலவே தமிழ் வழங்கும் நாட்டுக்கும் எல்லையை வகுத்தார் கள் என்பதை அறிந்தோம். தமிழ் மன்னர்களின் ஆட்சி, அன்று எல்லை கடந்தும் இருந்தது. சீனர்கள் முதல் சிங்களவர் வரையிலும், ஆந் திரர்கள் முதல் ஆரியர்கள் வரையிலும், தமிழ்

மன்னர்களுக்குக் கப்பம் செலுத்தி வந்திருக்கிறார்கள். தமிழர்கள் இன்றிருக்கும் துர்ப்பாக்கியமான நிலைமையில் என்றுமிருந்ததில்லை. அன்றோ அவர்கள் உயர்ந்த நிலையில் வாழ்ந்தார்கள். ஆனால், கடுகு சிறுத்தாலும் காரம் போய்விடுமோ? ஆகவே, தமிழர்கள் இந்நிலையை அடைந்திருந்த போதிலும், வீரம் குன்றவில்லை; திறமை குறையவில்லை; தேசபக்தி சுருங்கவில்லை; அறத்தில் பிறழவில்லை என்பதை ஆந்திரர்கள் அறியவேண்டும். ஆந்திரத் தலைவர்கள் ஆந்திர நாட்டைச் சுற்றித் திரிந்து பணம் சேர்த்து வெறுங் கூச்சலைக் கிளப்பி விடுவதால் மட்டும், தமிழ் நாட்டை ஆக்கிரமிக்க முடியாதென்பதை உணர்வார்களாக!

11. தமிழர்கள் ஆட்சி

உலகத்திலேயே எந்த நாடுகளும், நாகரிகம் பெறுவதற்குமுன்னரே, தமிழ்நாடு நாகரிகத்திலும், போர்த் திறமையிலும், ஆட்சி முறையிலும் தெய்வ பக்தியிலும் கீர்த்தி பெற்று விளங்கியது. 1899-வது ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20-ந் தேதி பிரசுரமான 'ஞான போதினி என்னும் பத்திரிகையில், ஸ்ரீ தி. மி. சேஷகிரி சாஸ்திரியார் எம். ஏ. அவர்களால் எழுதப்பட்ட கட்டுரையில், பொய்கை யாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசை யாழ்வார், நம்மாழ்வார் முதலியவர்கள் காலத்தை, கி. மு. 4201-ம் ஆண்டென்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனல், மாணிக்கவாசகர் காலமோ அதற்கும் முற்பட்டதென்று பற்பல சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகிறார்கள். மதுரையில் அரசாட்சி செலுத்திய அரிமர்த்தன பாண்டியனிடம் முதன்

மந்திரியாக இருந்தவர் மாணிக்கவாசக சுவாமிக ளென்றால், தமிழர்கள் ஆட்சி, எக்கால முதல் ஆரம்பமாயிற் றென்பதைச் சொல்ல முடியவில்லை. அரிமர்த்தன பாண்டியனே மதுரையில் அரசாட்சி செலுத்திய 63-ஆம் பாண்டியனென்று புராணங் கள் கூறுகின்றன. ஆகவே, முதல் பாண்டியனு டைய ஆட்சி, எக்காலத்திலிருந்திருக்கும் என்பதை நாம் ஈங்கு எடுத்துக் காண்பிக்க வேண்டுவ தில்லை. சோழர்களோ சூரிய வம்சத்தைச் சேர்ந் தவர்களென்றும், வைஷ்ணவ மனுகால முதல் ஆண்டு வந்திருக்கிறார்களென்றும் தெரிகிறது. சோழ மன்னர்கள் கி. பி. நான்காம் நூற்றாண்டு வரையில் ஆண்டு வந்திருந்தார்கள். பின்னர், அவர் கள், பல்லவர்கள் ஆட்சியில் சிற்றரசர்களாக இருந்து ஆண்டு வந்தார்கள்.

பல்லவர்கள் ஆட்சிக்குப் பிறகு, சோழ மன் னர்கள், கி. பி. 650-ம் ஆண்டு முதல் கி. பி. 1267-ம் ஆண்டு வரை ஆண்டு வந்தார்கள். கடைசியாக ஆண்ட மன்னன் ஜடாவர்மன்; இவன் நெல்லூர் வரை ஆண்டு வந்திருக்கிறான்.

தமிழ் நாட்டு மன்னர்கள் வெவ்வேறு நாடு களின் மீது படையெடுத்துச் சென்று, வெற்றிமாலை யுடன் திரும்பினார்கள். அவ்வாறு பிடித்த நாடு களில், அந்நாட்டு வளப்பத்திற்குத் தக்கவாறும், அம் மக்களின் விருப்பத்திற்கிணங்கவும் அவ்வவ் விடங்களிலுள்ளவர்களையே மன்னர்களாக்கினார் களே யொழியத், தாங்களே பேருரிமை கொண்டா டினார்களில்லை. கி. பி. 985-ம் ஆண்டில் ராஜராஜன் பட்டத்திற்கு வந்தான். இவன் பட்டத்திற்கு வந்து பத்து ஆண்டுகள் கழித்துச் சேர நாட்டின் மீது

படையெடுத்துச் சென்ருன். காந்தளூர் என்னும் துறைமுகத்தி லிருந்த பல கப்பல்களை அழித்துச் சேரரை வென்ருன். வென்ற இராஜராஜன் தன்னுடைய சுற்றத்தார்களையோ, தன் நாட்டு வீரர்களையோ அங்கு மன்னனுக நியமிக்கவில்லை. அந்நாட்டு மக்களிற் சிறந்த வீரர்களி லொருவனையே சிற்றரசனுக்கினுன். ஆகவே, சோழ தேச மன்னனை ராஜராஜன் வீரனென்று கீர்த்திபெறத்தான் ஆவல் கொண்டானே யன்றி, மண்ணுசை கொள்ளவில்லை என்பது உறுதி.

12. பகைவனையும் உறவுகொள்ளும் தகைமை

கி. பி. 989-ம் ஆண்டு வரையில், ஆந்திர தேசமான கிருஷ்ணு, கோதாவரி ஜில்லாககளில் சரியானபடி அரசாட்சி நடைபெருமல், சாளுக்கியர்களால் கலகம் நடைபெற்றது. இக் காலத்தில் ஆந்திர தேசத்தில் சுமார் 17 ஆண்டு காலம் மன்னனில்லாமையினுல் சாளுக்கியர்கள் கலகம் செய்தார்கள். சில ஆண்டுகளுக்கு முன்னர் ஒழுங்காக ஆட்சி நடைபெற்ற ஸ்பெயின் தேசத்தில், சுயநலங்கொண்ட ஜெனரல் பிராங்கோ என்பவன் கலக முண்டாக்கி நாட்டைக் கைப்பற்றிக் கொண்டான் என்பதை நாம் பத்திரிகை வாயிலாக அறிந்திருக்கிருேம். இந்தக் கலகக்காரனுக்குப் பல தேசத்தினர்கள் உடந்தையாகவும்இருந்திருந்தார்கள். ஒழுங்காகவும் அமைதியாகவும் ஆட்சி புரிந்து வந்த ஸ்பெயின் தேசத்தினரை அடிமைப் படுத்தினுன் ஜெனரல் பிராங்கோ. இதற்கு இந்தியர்களைத் தவிர வேறு யாரும் அனுதாபம் தெரிவிக்கவில்லை. வெள்ளையர்களோ கண் மூடி மௌனிகளானுர்கள்! உலகமெங்

கும் ஒழுங்காகவும் அமைதியாகவும் ஆட்சி நடை பெற வேண்டுமென்பதில் ஆவல் கொண்டவர்கள் இந்தியர்கள். அதிலும் தமிழ் மன்னர்கள் மிகச் சிறந்த கொள்கையும் பரந்த நோக்கமுமுடையவர் களல்லவா? தமிழர்களுக்கு இத்தகைய சிறந்த குணம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. தொன்று தொட்டு வந்த தென்பதற்கு இராஜ ராஜனே உதாரண மாவான்.

13. வேங்கி நாடு யாருடையது?

ஆந்திர தேசத்தில் மன்ன னில்லாதபோது, சாளுக்கியர்கள் கலக முண்டாக்கியதால், அந்நாட்டு மக்கள் அல்லலுறுவதைக் கேட்கத் தமிழ் மன்ன னை இராஜ ராஜனுக்கு மனம் சகிக்கவில்லை. தமிழ் நாட்டு மன்னனை இராஜ ராஜன், ஆந்திர மக்க ளுக்கு உதவிபுரியப் பட்டாளத்துடன் ஒரு சிறிதும் மண்ணாசையின்றித் தன் மகனை இராஜேந்திரனை அனுப்பினன். இராஜேந்திரன் சேனையோடு ஆந் திர தேசம் சென்று, போர் புரிந்து, வெற்றி பெற் ருன். கலகத்துக்குக் காரணமாக விருந்த சாளுக் கியத் தலைவனை விமலாதித்தனைப் பிடித்துக் கொண்டு, தன் நாடான தஞ்சாவூருக்குத் திரும்பி னன். வெள்ளையர்களின் அரசியலுக்கும் தமிழர் களின் அரசியலுக்குமுள்ள வித்தியாச மிதுதான். எனவே, இத்தகைய தமிழ் மன்னர்கள் காலத்தி லிருந்த வீரர்கள் போன்றோர் இன்றும் இருக்கிறார் கள். இவ் வீரர்களைத் தட்டி எழுப்பாமையே நம் குறை.

இராஜேந்திரன், விமலாதித்தனின் அக்கிர மச் செயல்களைக் கண்டிப்பதற்காகச் சிறைப்படுத்

திக் கொண்டு வந்தானே யொழிய, அவனை வஞ்சம் தீர்க்க வேண்டுமென்ற எண்ணத்தோடு அல்ல. சிறைப் பிடிக்கப்பட்ட விமலாதித்தனைக் கை விலங்கு கால் விலங்குகள் போட்டுச் சிறைச் சாலையில் அடைக்கவில்லை. விமலாதித்தன் இஷ்டம்போல் தஞ்சை அரண்மனையி லிருந்தான்; இராஜராஜன் மகளாகிய குந்தவையைக் காதலித்தான். இராஜராஜனும் விமலாதித்தனிடத்து நட்பு பூண்டான். தனக்கு விரோதியென்று கிஞ்சிற்றும் எண்ணுமல் விமலாதித்தனுக்குத் தன் மகளை மணமுடித்தும் கொடுத்தான்; எந்த நாட்டிலிருந்து சிறைப் பிடித்து வந்தானே அந்த நாட்டுக்கே அனுப்பி, அரசாளும் படியும் செய்தான். அதுதான் வேங்கி நாடு என்பது. அது கிருஷ்ணு நதிக்கும் கோதாவரி நதிக்கும் மத்தியிலுள்ள பிரதேசம். அஃதாவது ஆந்திர தேசமாகும். இதிலிருந்து தமிழ் மன்னரின் அரும் பெரும் செயல்களை அறியலாம். இராஜராஜன் மனம் வைத்திருந்தால், தமிழ் நாட்டிலுள்ள தமிழர்களை அங்குக் குடியேற்றி, அந்த நாட்டையும் தமிழ் நாட்டோடு இணைத்து ஆண்டிருக்கலாம். அவ்வாறு செய்யாமல், அந் நாட்டு மக்களையே ஆளும்படி செய்தமையால், தமிழ் மன்னர்களின் தியாக புத்தி மிகவும் பாராட்டப்படக் கூடியதன்றோ?

ஆண்டு சில கழிந்தன. இராஜ ராஜன் குடகு நாட்டில் படையெடுத்துச் சென்றான். பனசோகே என்னுமிடத்தில் பலத்த போர் நடந்தது. அந்தக் கடும் போரில் வெகு தீரமாகச் சண்டை செய்தான் பஞ்சவமாராயன்;

கடைசியில் தோல்வியுற்ருன். இராஜராஜன் வெற்றி பெற்ருன். சென்ற ஐரோப்பா யுத்தத்தில் வார்சேல்ஸ் உடன்படிக்கையைப் போல் ஏதாவது சதி நடந்ததா? வஞ்சம் தீர்த்துக்கொண்டாஞ? இல்லவேயில்லை. அந்தப் பஞ்சவமாராயனின் வீரத்தைக் கண்டு, அளவிலா மகிழ்ச்சி யடைந்தான் சோழ நாட்டு மன்னஞன இராஜராஜன். எந்த நாட்டைப் போர் செய்து பிடித்தானே, அந்த நாட்டிற்குள்ளிருந்த வேங்கை மண்டலம், கங்க மண்டலமென்னும் இரண்டு மண்டலங்களுக்கும், பஞ்சவமாராயனைத் தண்ட நாயகஞக்கிஞன்; மாலவ்வி என்னும் ஊரை ஈந்தான்; பஞ்சவமாராயனுக்கு "க்ஷத்திரிய சிகாமணி" என்ற பட்டத்தையுமளித்தான். இவ்வளவு தியாக புத்தி கொண்ட தமிழர்கள் ஏன் தங்கள் நாட்டையும் ஆந்திரர்களுக்குக் கொடுத்துவிடக்கூடாதென்று, ஆந்திரத் தலைவர்கள் கேட்கலாம். ஆயின், தியாகத்திற்கும் ஓர் அளவுண்டு அல்லவா?

இவனுக்குப் பிறகு சோழ நாட்டு மன்னர்கள் ஒருவர் பின்னெருவராகக் கி. பி. 1250-ம் ஆண்டு வரையில் ஆண்டு வந்தார்கள். ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் கி. பி. 1251-ல் பட்டத்திற்கு வந்தான். இவன் பட்டத்திற்கு வந்து, வட நாட்டை ஆண்டதற்கு அறிகுறியாகப் பல சாஸனங்கள் உள்ளன. அவை நெல்லூர், திருக்கழுக்குன்றம், ஸ்ரீரங்கம் முதலிய விடங்களிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இலக்கண ஆராய்ச்சிப்படி நம் நாட்டின் எல்லையை நிர்ணயித்தால், வட வேங்கடம் வரையிலும், தமிழ் மன்னர்களின் ஆட்சி முறைப்படிப்

பார்த்தால், வடக்கே வெகு தூரத்திலும் போய் விடும். நாம் ஏதோ மிகைப்படுத்திக் கூறுவதாக நண்பர்கள் எண்ண வேண்டாம். இஃது உண்மை யாகும். எல்லை விஷயமாக ஐந்தாம் வகுப்பில் படிக்கும் பள்ளி மாணவனைக் கேட்டால் கூட ஆந் திரர்கள் எல்லை திருப்பதிக்கு வடக்கே என்று கூறி விடுவான். ஆந்திரத் தலைவர்களுக்குப் பள்ளிக் கூட மாணவர்கள் தான் எல்லையைக் கூறவேண் டும போலும்! பிறகு என் செய்வது?

14. எம்மதமும் சம்மதமே

தமிழ் நாட்டு மன்னர்களிடம் சாதித் துவே ஷம் மதத் துவேஷம், பாஷாத் துவேஷம் முதலிய வற்றைக் கிஞ்சிற்றேனும் காணமுடியாது. குலோத் துங்கன் கல்வியிற் சிறந்தவனாக இருந்தான். இவன் சைவ மதத்தினனாக இருந்தானாயினும் மற்ற மதத் தினரை எவ்வித கொடுமையும் செய்யவில்லை. இவன் காலத்திலே ஸ்ரீராமானுஜர் ஆசிரியராக இருந்தார். யாதோ சிறு தவறுதலால், அரசன் தமக்குத் தீங்கு செய்வானென்று பயந்து, ஸ்ரீராமா னுஜர் போஜள ராஜ்யத்தில் தொண்டனூரிலே ஓடி ஒளிய வேண்டியதாயிற்று. சைவ, வைஷ்ணவ, ஜைன, பௌத்த கோயில்களில் குலோத்துங்கன் சாஸனங்களைக் காணலாம். மன்னார்குடியிலுள்ள ராஜகோபால ஸ்வாமி கோயில் இவனால் கட்டப்பட் டது. இதற்குக் 'குலோத்துங்க விண்ணகரம்' என் பது பழம் பெயர். இராஜ்யம் முழுவதையும் புதிதாக அளந்து, ஆறிலொரு கடமை வரியேற்படுத்தினான்; சுங்கத்தைத் தவிர்த்தான்; குடிகட்கு உழுதொழி

னுக்கு உபயோகமாகும்படிப் பல ஏரிகளைக் கட்டினன்; காடுகளை வெட்டிப் பட்டணங்களை உண்டாக்கினன்.

சோழன் மட்டுமல்ல. பாண்டியன்கூட எல்லா மதத்தினரையும் பொது நோக்கோடு ஆண்டான். மதுரை மா நகரில் வல்லபதேவ பாண்டியன் அரசு புரிந்தொழுகும் நாளில், விண்டு சித்தரென்னும் பெரியார், மன்னனிடம் சென்று, வைணவ மதத்தின் கொள்கையைக் கூறி, அவனையும் வைணவ மதத்தை மேற்கொண் டொழுகுமாறு செய்தார். அன்றிரவு வல்லப தேவ பாண்டியன் மாறுவேடம் கொண்டு, நகர் சோதனை செய்ய ஊரைச் சுற்றி வரலானன். வீதியின் தெருத் திண்ணையில் உட்கார்ந்திருந்த ஒரு சந்நியாசியுடன் பேசத் தொடங்கினன். தான் வைணவ மதத்தைச் சார்ந்ததைக் குறித்துத் தெரிவித்தான். சந்நியாசி, உண்மைக் கடவுளை யறியவேண்டுமானல், பல மதத்தினரையும் அழைப்பித்து ஆராய வேண்டுமென்று கூறினன். மறுநாள் மந்திரியை ஆலோசித்து, வீதியில் ஒரு பெரிய கம்பம் நட்டு, அதன் நுனியில் பொன் முடிப்பொன்றைக் கட்டி, அவரவர்கள் சமயத்தின் உண்மையை யெடுத்துக் கூறி, வெற்றி அடைந்தோர் பொன் முடிப்பை எடுத்துக்கொண்டு போகலாம் என்று பறை யறைவித்தான். இதைக் கேட்டுப் பற்பல மதத்தினர்கள் வந்து வாதித்தனரென்று சரித்திரம் கூறுகின்றது.

யார் யார், இந்தத் தமிழ் நாட்டுக்கு வந்தாலும் அவர்களை ஆதரிப்பதே தங்கள் கடமையாகக் கொண்டிருந்தார்கள் தமிழர்கள்.

"எந்த நாடு தளர்ந்தாலு மிதுவே தாங்கு மின்ன
[மின்னம்
புந்தி நாடி பொன்னுடு புரந்தார் குடியும்
[புறப்பட்டார்
சொந்த நாடாய் வந்திருந்து சூரனெடுங்கச் சுகமாகி
வந்துவானுங் குடியேற வைத்தார் சோழ
[மண்டலமே"

என்ற பாட்டிலிருந்து தமிழர்களின் அன்பு-பரந்த நோக்கம் முதலியன விளங்குகின்றன அல்லவா? பல மதத்தினர்கள், பல பாஷைக்காரர்கள், தமிழ் நாட்டில் குடியேறினார்கள். வட நாட்டில் முஸ்லிம்கள் ஹிந்துக்களை விரட்டுகிறார்கள். பர்மாவில் இந்தியர்களைத் துரத்தினார்கள். இலங்கையில் சிங்களவர்கள் தமிழர்களை ஓட்டுகின்றார்கள். அன்று ஜெர்மனியில் ஜெர்மனியர்கள் யூதர்களைக் கொன்றார்கள். ரஷ்யாவில் ரஷ்யாக்காரர்கள் ஜெர்மனியர்களுக்குத் தொல்லைகள் கொடுத்து விரட்டினார்கள். இவ்வாறு என்றாவது தமிழர்கள் யாரையேனும் எங்கள் நாட்டை விட்டுப் போங்களென்று கூறியதுண்டா? ஆகையால், ஆந்திரர்களோ மற்றவர்களோ தமிழ் நாட்டிற்கு வருவதை யாரும் தடை செய்யவில்லை. ஆனால், திறந்த வீட்டில் நுழைவதுபோல நுழைந்துகொண்டு பிறகு தமிழர்களையே விரட்டிவிட எண்ணங்கொண்ட சில ஆந்திரர்களைக் கண்டுதான் நாம் வருத்தப்படவேண்டி இருக்கிறது.

வந்த விருந்தினர்களைத் தமிழர்கள் உயர்வாக உபசரித்தார்களென்பது மட்டுமல்ல. அரசியல் நிர்வாகத்திலும் சரியான பிரதிநிதித்துவம் கொடுத்தனர். ஆங்கிலம் படித்த சிலமேதாவிகள் தமிழ்நாட்டு அரசியல் நிர்வாகத்தைக் குறித்து நையாண்டி செய்வதை நாம் கேட்டிருக்கிறோம். இந்த மேதாவிகள் தமிழ் மன்னரின் சரித்திரங்களைப் படித்திருந்தால் ஒருக்காலும் குறைகூற மாட்டார்கள். ஆங்கில ஆட்சி ஏற்பட்ட பின்னர்த், தமிழ் நூல்களையும், தமிழ்நாட்டின் சரித்திரங்களையும் உள்ளது உள்ளவாறுக வெளிப்படுத்தாமையால், நம்மையே நாம் இழிவுபடுத்திக் கொள்ளும் நிலைமையில் வந்துவிட்டோம். நம்மைத் தாழ்த்தி,மேனுட்டினரை உயர்த்தி எழுதினல்தான் நூல்களைப் பள்ளிக்கூடங்களில் வைப்பார்களென்ற கருத்துடனே நூல்கள் பிரசுரிக்கப்பட்டன. இதனுல் பல இன்னல்கள் இப்போது விளைகின்றன.

15. தமிழர்களின் தேர்தல் முறை

ஆந்திர மாகாணம் தனிமாகாணமாகப் பிரிந்து போவதை யாரும் ஆட்சேபிக்கவில்லை. எழும் ஆட்சேபணைகளெல்லாம் எல்லையைப் பொறுத்தனவே யன்றி, பிரிவினையைப் பொறுத்தல்லவென்பதை வற்புறுத்த விரும்புகிறோம். பிரியப் போவதே போகின்றோம்; போகின்ற போக்கிலே சென்னையையும், செங்கல்பட்டு ஜில்லாவையும் சேர்த்திழுத்துக் கொண்டு போகின்றோமென்று சொன்னுல் கைகட்டிப் பேசாமலிருக்க முடியுமா? ஒருக்காலும் முடியாது. நம்முடைய எல்லையை

உண்மை நெறியில் நின்று கூறுகிறோம். குறை கூறுவோர் சிந்திக்கட்டும்.

நமது நாட்டு மன்னர்களின் அரசியல் திறமையைக் காண்பிக்க வேறெந்த ஜில்லாவையாவது குறிப்பிடுவதை விடச் செங்கல்பட்டு ஜில்லாவைக் குறிப்பிடுவது சாலச் சிறந்ததென்று எண்ணுகிறோம். சென்னையிலிருந்து 43 மைல் தூரத்திலும், செங்கல்பட்டுக்குத் தென் மேற்கில் மதுராந்தகம் தாலூகாவிலுள்ளதுமான உத்திரமேரூர் என்கிற உத்திரமல்லூர் என்ற ஒரு கிராமத்தைக் கவனிப்போம். அங்குள்ள ஆலயத்தி லிருக்கும் கல்வெட்டுகள் பண்டைய வேந்தரின்நீதிமுறை நாகரிகங்களைப் பெரிதும் விவரிக்கின்றன. 2000 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தவரும், உலகத்தில் பேரரசர்களிலொருவ ரென்று மதிக்கப்பெற்றவருமான அசோக சக்ரவர்த்தி காலத்துக்கு முன்னரே தமிழ்நாடு அரசியல்நிர்வாகத்தில் தலைசிறந்திருந்ததென்பதை மேற்படி கல்வெட்டுகள், உள்ளங்கை நெல்லிக்கனி போல் அறிவிக்கின்றன. பழைய காலத்தி லிருந்த அறிவாளிகள் ஜனசமூகத்துக்கு யாதொரு குறைபாடும் நேரிடாதபடி காக்கப் பற்பல சபைகளேற்படுத்தியிருந்தார்கள் என்பதை சாஸனங்கள் மூலமாக அறியலாம்.

இச் சபைகளில் மந்திரிகள், சேனாதிபதிகள், பார்ப்பனர்கள், புலவர்கள், பெரியோர்கள் முதலியோர் அங்கத்தினர்களாக இருப்பார்கள். "ஐம்பெருங் குழுவும், எண் பேராயமும் உடையவன் சேரன்" என்றும், "வேந்தர்க்கு மாசனம் பார்ப்பார் மருத்தர் மாநிமித்தரோ டமைச்சர்

ஆசில் அவைக்களத்தார் ஐந்து'' என்றும் பண்டைய நூல்கள் கூறுகின்றன. இவை தவிர, தேசத்தின் வரவு செலவுகளைக் கவனிக்கவும், வியாபாரங்களை ஒழுங்குபெற நடத்தவும், சதுரங்க சேனைகளைப் பாதுகாக்கவும் தனித்தனிச் சபைகளிருந்தனவென்றும் பல சாஸனங்கள் கூறுகின்றன.

எல்லா மதத்தினர்களையும் சமநோக்கோடு ஆண்ட தமிழ் மன்னர்களைப் போல, வேறெந்த நாட்டிலும் கிடையாதென உறுதியாகக் கூறலாம். எல்லா மதத்தினர்களும், பாஷைக்காரர்களும் மேற்சொன்ன சபைகளில் அங்கம் வகிக்க உரிமையுண்டு. நேர்மையுள்ளோருக்கு எங்கும் இருக்க உரிமை உண்டு அன்றோ? இன்னும் பல அரிய விஷயங்களைத் தெரிவிக்கும் கல்வெட்டொன்று, உத்திரமல்லூர் வைகுண்டப் பெருமாள் ஆலயத்தின் மேற்குச் சுவரிலுள்ளது.

இச் செய்திகள், சிலாசாஸன அறிக்கை 24-27-ம் பக்கங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. ஆகவே, தமிழர்களுக்கு அரசியல் நிர்ணய சபை எப்படி அமைக்க வேண்டுமென்பதையோ, நிர்வாகத்தை எப்படி நடத்தவேண்டு மென்பதையோ கற்றுத் தரவேண்டுவதில்லை.

தேர்தல் நடக்கவேண்டிய சில தினங்களுக்கு முன்னர், ஒவ்வொரு கிராமத்தின் மூலை முடுக்களிலெல்லாம் பறையறைவிப்பார்கள். குறிப்பிட்ட தினத்தன்று காலையிலோ மாலையிலோ ஒரு கோவிலில் வந்து கூடிவிட வேண்டும். தேர்தல் முறைப்படி உள்ளவர்களின் பெயர்களை ஓலைத் துண்டில், எழுதி ஒரு புதுப் பானையிலும், அங்கத்

தினர்கள் பார்க்கவேண்டிய காரியங்களை வேறொரு ஓலையில் எழுதி மற்றொரு புதுப் பானையிலும் போட்டு விடுவார்கள். எழுதிப் போட்டுள்ள ஓலைகளை நன்றாகக் குலுக்குவார்கள். ஒரு சிறுவனைக் கூப்பிட்டு, வீற்றிருக்கும் மகாஜனங்கள் முன் சிறுவனின் கையைக் காண்பிப்பார்கள். பிறகு, அப்பையன் ஒவ்வொரு பானையி லிருந்தும் ஒவ்வொரு ஓலையை யெடுத்துப் பெரியோர்களிடம் கொடுப்பான். அவன் கொடுக்கும் ஓலையிலுள்ள பெயரையும் தொழிலையும் பகிரங்கமாக பெரியோர் வாசிப்பர். இவ்விதமாகவே சுகாதார சபை, பஞ்ச நிவாரண சபை, நாணய பரிபாலன சபை, நீதி பரிபாலன சபை, குளம் கூவல்களைப் பரிபாலிக்கும் சபை, தோட்டங்களை மேற் பார்வையிடும் சபை, ஆண்டு இறுதியில் கணக்குப் பரிசீலனை செய்யும் சபை முதலியவைகளுக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பார்கள். அங்கத்தினர்கள் ஓர் ஆண்டு வரையில் நிர்வாகத்தை நடத்த வேண்டும். ஓர் ஆண்டு அங்கம் வகித்தவர்கள் மூன்று ஆண்டு வரையில் அங்கத்தினர்கள் பதவிக்கு நிற்கக் கூடாது. ஆண்டு மத்தியில் குற்றம் செய்தால், குற்றம் செய்யும் அங்கத்தினர் பதவியிலிருந்து விலக்கப்படுவார்.

ஒரு காலத்தில் குண்டூரில் பஞ்சமேற்பட்டது. குடிகள் பட்ட கஷ்டம் சொல்ல முடியாது அக் குடிகளின் துயரத்தைச் சோழ ராஜனுக்குத் தெரிவிக்கவே சில புலவர்களுடன் தனது தூதர்களை அனுப்பி அவர்களுக்கு வேண்டியவைகளைக் கொடுத்து அழைத்து வந்து, உத்தரமல்லூரிலிருக்கச் சொன்னன். அக்குடிகளுக்கு இனமாக 1500

காணி நிலங்களைச் சோழன் கொடுத்ததாக ஆங்கில சரித்திராசிரியர்கள் கூறுகிறார்கள். இவ்வாறு உபகாரம் செய்து, குடியேற்றிய பாவத்திற்காகவா சென்னையையும் செங்கல்பட்டையும் ஆந்திர நாட்டோடு சேர்க்க வேண்டுமென்று கேட்பது?

ஆதியில் சோழராஜன் தன்னுடைய புத்திரர்களில் மூத்தவனுக்குப்பெண்ணையாற்றின் வடபாகத்தையும், இளையவனுக்குத் தென் பாகத்தையும் கொடுத்தான். அவ்வாறே ஆந்திரர்கள் கூவம் நதிக்கு வட பாகத்தைத் தங்களுக்கும், தென்பாகத்தைத் தமிழர்களுக்கும் கொடுத்துவிடலாமென்கிறார்கள். சோழனுக்குப் பெண்ணை நதியின் இருபுற நிலமும் சொந்தமாக இருந்ததால், அவ்வாறு பாகப் பிரிவினை செய்தான். உண்மையிலேயே தமிழர்களின் உதார குணத்தைப் பின்பற்ற ஆந்திரர்களுக்கு ஆவலிருக்குமானால், நெல்லூர் ஜில்லாவில் ஓடும் வட பெண்ணை நதியின் தென்பாகத்தைத் தமிழர்களுக்கும் வட பாகத்தை ஆந்திரர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கூறினால், நியாயமிருக்கிறதென்று சொல்லலாம்.

நெல்லூர் ஜில்லா ஒருபுறமிருக்கட்டும். சித்தூர் ஜில்லாவை எடுத்துக் கொள்வோம். சந்திரகிரி அரசன் இங்குதானே அரசு செலுத்தினான்? கி. மு. 1000 ஆண்டு செங்கோல் செலுத்திய இமாடி நரசிம்மன் காலத்தில் இங்கு 74 ஆலயங்களிருந்ததாகவும், பின்னர் வந்த முஸ்லிம் மன்னர்கள் பல கோவில்களைத் தரைமட்டமாக்கி விட்டதாகவும் கூறுகிறார்கள் சரித்திரக்காரர்கள். ஆலயங்களிலுள்ள கல்வெட்டுகளில் பெரும்பான்மையான கல் வெட்டுகள்

தமிழிலிருக்கின்றன. இந்தக் கல்வெட்டுகளி லிருந்தே தமிழர்களுடைய எல்லை யாது என்பதை வெகு சுலபமாகக் கூறிவிடலாம்.

விஜயநகர மன்னர் காலத்திற்கு முன்பே கோட்டம், நாடு, நத்தம் என்று தமிழ் நாட்டின் வடபாகம் பிரிக்கப்பட்டுள்ளன. பின்னல் வந்த விஜயநகர மன்னனும் இந்த நாடு நத்தங்களை ஒப் புக்கொண்டான். பிறகு வந்த ஆங்கிலேயர்களும் பாரம்பரியமாக வந்த நாடு, நத்தங்களை ஒப்புக் கொண்டு, செங்கல்பட்டு, மானுயலில் பிரசுரித்திருக் கின்றார்கள்.

"நாடான கோட்ட மிருபத்துநான்கினு
[ணற்றண்டகத்
தாடாத செக்கு மரையாத வம்மியு மாகிவளர்
பீடாதி பீடத்திருக் காமக்கோட்டம் பிறங்கு கச்சி
மாடாதிபரெனுங் காலாண்டருந்
[தொண்டை மண்டலமே"

என்று படிக்காசுப் புலவர் பாடி யிருக்கிறார். கோட்டம் என்பது ஜில்லாவாகும். ஆகவே, தொண்டை மண்டலம் என்பது, 24 ஜில்லாக்கள் கொண்டதென்பது விளங்குகின்றது. ஆந்திரர்கள் பங்கு போட்டுக்கொள்ள வேண்டுமென்று கூச்சல் போடுவது, பொதுவாகத் தமிழ் நாடாக இருந்தா லும், குறிப்பாகத் தொண்டை மண்டலத்தையே என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறோம். இக் கவி யைப் பாடிய படிக்காசுப் புலவர் திருமலை நாயகர் காலத்தவராவர்.

16. தமிழ் நாட்டுக் கோட்டங்களுள் வேங்கடமும் ஒன்றே

கிருஷ்ண தேவராயர் ஆட்சி செலுத்திய காலத்தில், முதன் மந்திரியாக இருந்த அம்பி அறம் வளர்த்தான் முதலியார், மேற்படி 24 கோட்டங்களை உறுதிப்படுத்தி, அதற்கு ஒரு மடாதிபதியையும காஞ்சிபுரத்தில் நியமித்தார். ஆககே, ஆந்திரர்களின் போக்குப்படிபார்த்தாலும், வடவேங்கடம் வரையில் தமிழர்களுடைய நாடாகும் என்பது வெள்ளிடை மலை. பொதுவாக 24 கோட்டங்கள் தொண்டை மண்டலத்தாருக்கு உரியவை என்று சொன்னால் விளங்காமல் போய் விடுமோ என எண்ணி, ஒரு புலவர்,

"அழகுறுமேழிக் கொடியார் தொண்டை [மண்டலத்த
ரருண் ஞானப் பிரகாச ரடியார் கோட்டம்
புழல் புலியூ ரீக்காடு மணவூர் செங்காடு
புகழ் பையூரெ யிற்றுமல் புனலூற்றுக் காடு
விழைவுறு களத்தூர் செம்பூரா மூரீதூர்
வெண்குன்றம் பல்குன்றம் மிளங்காடு படுவூர்
தழை சோலைக் கலியூர் சிறுகாரைக் கடிகை
சந்திரிகை குன்றபத்திரம் வேங்கடம் வேலூரே"

என்று கூறியிருக்கிறார். அக் கவியில் கோட்டங்களின் பெயர்களைக் கூறியிருப்பதோடு, நம்முடைய எல்லை வேங்கடம் என்பதைத் தெளிவாகத் தெரிவித்திருப்பதைக் கண்டு நாம் ஆனந்த மடைவோமாக.

மேற்சொன்ன கவியில் 1 புழல், 2 புலியூர், 3 ஈக்காடு, 4 மணவூர், 5 செங்காடு, 6 பையூர், 7 எயில்,

8 தாமல், 9 ஊற்றுக்காடு, 10 களத்தூர், 11 செம்பூர், 12 ஆமூர், 13 ஈதூர், 14 வெண்குன்றம், 15 பல்குன்றம், 16 இளங்காடு, 17 படுவூர், 19 சிறுகரை, 20 கடிகை, 21 சந்திரிகை, 22 குன்ற பத்திரம், 23 வேங்கடம், 24 வேலூர், என இருபத்து நான்கு கோட்டங்கள் கூறப்பட்டுள்ளன. ஆகவே, இப்பொழுது விவாதத்தில் சிக்கிக் கொண்ட கோட்டங்களில் முக்கியமானவை புழல், ஈக்காடு திருவள்ளூரி லிருக்கின்றன. கடிகை, நாகவேட்டுக்கு அருகிலிருக்கிறது. வேங்கடம் திருப்பதியாகும். இவற்றைத் தம் நாட்டோடு சேர்க்க வேண்டுமென்பதற்கான ஆதாரமென்னவென்பதை ஆந்திர சகோதரர்கள் காட்டுவார்களா?

சந்திரகிரியில் விஜயநகர மன்னர் காலத்தின் போது, பல கல்வெட்டுகளில் திருவேங்கட கோட்டம், வைகுந்த வளநாடு என்று சந்திரகிரியைக் குறிப்பிட்டிருக்கிறது. சந்திரகிரியில் கண்டுபிடிக்கப் பட்ட கல்வெட்டுகள் நான்கும் தமிழ் எழுத்தில் உள்ளவை. அடுத்தபடி திருச்சானூரைப் பார்ப்போம். அங்கு ஐந்து கல் வெட்டுகள் உள. அவைகளெல்லாம் தமிழ் கல்வெட்டுகளாயிருப்பதோடல்லாமல், சோழ மன்னர்களால் கொடுக்கப்பட்ட தானம். அவை, அவர்கள் ஆட்சிக்கு உட்பட்டிருப்பதான சித்தூர் ஜில்லாவைக் குறிப்பிடுகின்றன. திருப்பதிக்கு போகாத மக்களில்லை. வடக்கேயிருந்துவரும் ஹிந்துஸ்தானி பாஷைக்காரர்கள் முதற்கொண்டு, பாலாஜி பாலாஜி என்று சுவாமி தரிசனத்துக்காகச் செல்கின்றார்கள். இங்குள்ள மொத்த கல்வெட்டுகள் 38 என்று சிலாசாஸன ஆராய்ச்சிக்காரர்கள் கணக்கெடுத்திருக்கிறார்கள்.

அவைகளில் கன்னடம் 2, தமிழும் கிரந்தமும் 4, கிரந்தம் 1, தமிழும் தெலுங்கும் சேர்ந்தவை 2, தெலுங்கு மட்டும் 4, தமிழ் 25 ஆக இருக்கின்றன. அடுத்தது காளாஸ்தியை எடுத்துக் கொள்வோம்.

காளாஸ்தி தாலூகாவில் குடிபாலம், காளாஸ்தி, அதற்கு அருகில் தொண்டைமா நாடு ஆக மூன்று பிரபல க்ஷேத்திரங்களிருக்கின்றன. தொண்டைமா நாடு என்று சொல்லும் பொழுதே தமிழ்நாடு என்று தெரிகின்றது அல்லவா? அங்குள்ள கோதண்ட ராமஸ்வாமி ஆலயத்தில் பிராமணர்களுக்கு அன்னதானம் செய்வதற்குப் பொருளும், ஆலய பரிபாலனஞ் செய்வதற்குப் பூதானங்களும் மதுரை கொண்ட பரகேசரி வர்மசோழ மன்னனால் கொடுக்கப்பட்டதாகக் குறிப்பிடும் கல்வெட்டுகளிருக்கின்றன. காளாஸ்தியில் 80 கல்வெட்டுகளிருக்கின்றன. இவைகளில் சமஸ்கிருதம் 1, தமிழும், கிரந்தமும் கலந்தவை 9, தெலுங்கு 1, தமிழ் 69 இருக்கின்றன. இதற்கு ஆந்திரர்கள் என்ன பதில் சொல்லுவார்கள்? குடிபாலம் என்னுமிடத்திலோ ஒரே ஒரு கல்வெட்டு. அதுவும் தமிழ் எழுத்தில் பொறிக்கப்பட்டது. தமிழ் நாட்டு எல்லை, வடவேங்கடமென்பதற்கு மலை, நதி, ஏரிகளின் பெயர்களிலிருந்தும் பல உதாரணங்களையும், உண்மைகளையும் முன்னரே கூறியுள்ளோம். இப்பொழுது ஆலயங்களிலிருக்கும் கல்வெட்டுக்களிலிருந்தும் நமது எல்லை, வடவேங்கடம் வரை என்பது நன்கு புலனாகுமல்லவா?

ஆந்திர மன்னனான விஜயநகர் கிருஷ்ணய்ய தேவ மகாராஜா காலத்தில், கி. பி. அதாவது

ஈஸ்வர ஆண்டில், சித்தூர் தாலூகாவிலுள்ள பூதலப்பட்டுக் கிராமத்திலுள்ள சிவாலய மண்டபத்தில் ஒரு கல்வெட்டு. தொண்டை மண்டலத்திலுள்ள பழூவூர் கோட்டத்தைச் சார்ந்தது பூதலப்பட்டுக் கிராமம் என்று அது கூறுகிறது. இன்னும் நமது தமிழ் நாட்டு எல்லையைக் காண்பிக்கும் பல கல்வெட்டுகள் இருக்கின்றன. திருத்தணிகையும் அப்படியே. மதனபள்ளியிலுள்ள கல்வெட்டுகள் தெலுங்கில் அதிகமாகக் காணப்படுகின்றன. ஒரே அரசனுடைய காலத்தில் ஒரு கோவிலிலுள்ள கல்வெட்டுகள் தெலுங்கிலும், மற்றொரு கோவிலிலுள்ள கல்வெட்டுகள் தமிழிலுமிருந்தால், அவைகளிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டுவதென்ன? கிராமங்களை நிர்மாணித்தது போல, ஆலயங்களையும் நிர்மாணித்து, அவ்வாலயங்களில், பூசை நடைபெறப் போதுமான தானமும் செய்யப்பட்டுள்ளது. இத்தகைய தானங்கள் செய்து, ஆலயங்களை நிர்மாணித்தவர்கள் தமிழ் மன்னர்களும், தமிழ்க் குடி மக்களுமே ஆவர்.

ஆந்திரர்கள் நம்முடைய எல்லையைப் புராணப்படி ஒப்புக்கொண்டாலும் சரி, அல்லது பண்டைய அரசர்கள் ஆண்டவாறு ஒப்புக்கொண்டாலும் சரி அல்லது கிராமங்களை நிர்மாணித்து ஆலயங்களைக் கட்டிக் கல் வெட்டுகள் ஸ்தாபித்திருககிறார்களே அவர்கள் கூறுகிறபடி ஒப்புக்சொண்டாலும் சரி, அல்லது இலக்கிய ஆசிரியர்கள் கூறியுள்ளபடி ஒப்புக்கொண்டாலும் சரி, அல்லது தமிழ்ப் பாவலர்கள் பாடியுள்ளபடி ஒப்புக்கொண்டாலும் சரி, ஆனால் நமது

எல்லைகளை நாமே நிர்ணயித்துக் கொள்ளும் காலம் வந்துவிட்டது. தமிழர்களாகிய நாம் தற்போது நடக்கும் அரசியல் நிர்ணய சபையில் நமது ஆதாரங்களை நம் பிரதிநிதிகள் மூலமாக எடுத்துக்காட்டித் தமிழ் நாட்டின் எல்லையை அடைவோமாக.

17. இன்றுள்ள ஆந்திர நாட்டுச் செழுமைக்கு ஆதிகாரணம் யார்?

கிருஷ்ணா நதிக்கும், கோதாவரி நதிக்குமிடையிலுள்ள பிரதேசங்களுக்கு ஆந்திர தேசமென்று பெயர் என்று முன்னரே கூறியுள்ளோம். இப்பிரதேசங்களையும், ஆந்திர மன்னர்கள் ஏக சக்கரவர்த்திகளாகவிருந்து ஆதியில் ஆளவில்லை. தெற்குப் பீஹார், விலாசபுரி, ஜப்பல்பூர் முதலிய ஜில்லாக்களைக்கொண்டதான மகத ராஜ்யத்தை ஆண்ட அசோக சக்கரவர்த்தியின் கீழ் சிற்றரசர்களாயிருந்து அரசாண்டவர்களே ஆந்திர மன்னர்கள். தமிழ் மன்னர்கள் மற்ற மன்னர்களுக்குச் சிற்றரசர்களாக இருந்தாரல்லர். கிருஷ்ணா நதிக்கும், வடபெண்ணையாற்றுக்கும் மத்தியிலுள்ள பாகங்கள் காடுகளாகவே யிருந்தன. இக்காடுகளை யெல்லாம் அழித்து, நாடாக்கினவர் தமிழர்களேயாவர். இதனால்தான் இவ்விடங்களிலுள்ள பெரும் பாகங்களுக்குத் தமிழ்ப் பெயர்கள் வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு செய்தவர்கள் தமிழர்கள்தாமென்பதற்குப் போதுமான ஆதாரம் சங்க நூலான பத்துப்பாட்டிலுள்ள பட்டினப்பாலையில் "காடு கொன்று நாடாக்கி" என்று 283 ம் வரியில் குறிப்பிடப்பட்டுளது. காட்டைக் கொன்று நாடாக்கினதோடன்றிக், குளம் வெட்டியதாகவும் மேற்படி பட்டி

)73(P31)

னப் பாலையில் 284-ம் வரியில் "குளம் தொட்டு வளம் பெருக்கி" எனக் கூறப்பட்டுள்ளது.

குளம் வெட்டினவர்களும் தமிழர்கள்; கோவில் கட்டினவர்களும் தமிழர்கள்; காட்டைத் திருத்தி நாடாக்கினவர்களும் தமிழர்கள்; ஆனால், குடியேறினவர்களோ ஆந்திரர்களாவர். அசோக மன்னன் கீழ், ஆந்திரர்கள் சிற்றரசர்களாக இருந்து ஆண்டு வந்த காலம் கி. மு. 220-ம் ஆண்டு வரையிலாகும். தமிழ் மன்னர்களுக்குத் தலைநகர் காஞ்சிபுரமாக இருந்தது போல, ஆந்திர மன்னர்களுக்குத் தலைநகராக இருந்தது ஸ்ரீகாகுளம். கி. மு. 220-ம் ஆண்டுக்குப் பிறகு, ஸ்ரீமுகன் என்பவன், மகத தேசத்து அரசனை நீக்கித் தனி மன்னனானன். இவனுக்குப் பிறகு கிருஷ்ணன், குந்தல சாதகர்ணி, சிவால குருவிலவாயகன், புலுமாயி, ருத்தரமான் முதலிய ஆந்திர மன்னர்கள் ஆண்டு வந்தனர். கி. பி. 184-ம ஆண்டு பட்டத்திற்கு வந்த யஞ்ஞஸ்ரீ மன்னன் வரையில், நாட்டைப் பிரபலப் படுத்தாமலே ஆண்டு வந்தனர். யஞ்ஞஸ்ரீ என்னும் ஆந்திர மன்னன், தனது நாட்டைப் பிரபலப் படுத்த எண்ணினன். ஆனால், சால சூரியர் படையெடுத்து வந்து, ஆந்திரர்களை ஜெயித்தனர். பின்னர் சக வம்சத்தவர் மாறினர். அதற்கு பிறகு பல்லவர்கள் பரவி, ராஜ்யத்தைக் கைக்கொண்டனர்.

ஆந்திரர்கள் பிற நாட்டை ஆக்கிரமிக்க வேண்டுமென்கிற எண்ணமில்லாத வரையில்—அதாவது கி. பி. 320-ம் ஆண்டு வரையில்—ஒழுங்காகவே ஆட்சி நடைபெற்று வந்தது. எப்பொழுது ஆக்கிரமிப்பு எண்ணம் தோன்றியதோ,

அன்றே ஆந்திர வம்சம் க்ஷீணிக்கத் தலைப்பட்டது. குப்த வம்சம் தலை யெடுத்தது. மகத தேசத்தை ஆண்டு வந்த குப்த வம்சம், பழைய படி ஆந்திர தேசத்தைத் தங்கள் கைவசப் படுத்திக் கொண்டது. கி. பி. 606-ல் பட்டத்திற்கு வந்த ஸ்ரீஹர்ஷன் என்பவன், சீன தேசத்தாருடன் நட்புக் கொண்டிருந்தான். இம்மன்னனுடைய நட்பின் பயனாகச் சீன தேசத்திலிருந்து ஹூயென் சாங் என்பவன் பாட்டை சாரியாக இந்தியாவிற்கு வந்தான். கி. பி. 730-ம் ஆண்டு, அசோக வர்மன் பட்டம் அடைந்தான். இவன் பட்டத்திற்கு வந்த சில ஆண்டுகளுக்குப் பின்னர், காஷ்மீரத்து அரசன் படையெடுத்து வந்து, அசோக வர்மனைத் துரத்தி விட்டுத் தானே அரசாண்டான். ஆந்திர தேச மன்னர்கள் ஆட்சி இவ்வாறு முறிந்து போனபடியால், ஆந்திர மக்கள் சில நாடுகளுக்குச் சென்று குடியேறி வாழலாயினர்.

ஆந்திர மன்னர்கள் வீழ்ச்சியடைந்ததும் கீழ்ச் சாளுக்கியர் பலப்பட்டனர். இவ் வம்சத்தி லுதித்த 2-வது புலிகேசி என்பவன், தென்னாட்டிற் படை கொண்டு சென்று, சோழர்களை வென்றான்; தனது சகோதரனாகிய குப்ஜ விஷ்ணு வர்த்தனனை வெங்கி தேசத்துக்கு மன்னனாக்கினான். ஆகவே ஆந்திர மன்னர்கள், குப்த வம்சத்தாரால் தோற்கடிக்கப்பட்டனர் என்பது மேற் சொன்ன சரித்திரத்தி லிருந்து அறியலாம். சாளுக்கியர், தெலுங்கு தேசத்தை ஆண்டு வந்த சோழர்களை வென்று ஆண்டார்களே யொழியத், தமிழ் நாடான வட பெண்ணைக்குத் தெற்கே வரவில்லை. கி. பி.

818-ம் ஆண்டு வரையில் ஆந்திர தேசம், சாளுக்கிய மன்னர்கள் ஆட்சியின் கீழிருந்தது. சாளுக்கிய மன்னரில் 16-வது பட்டத்திற்கு வந்தவன், அம்மராஜ விஷ்ணு வர்த்தனன். இவன் கி. பி. 825-ம் ஆண்டு வரையில் அரசாண்டு வந்தான். இவனுக்கு இராஜ மகேந்திரன் என்பது பட்டப் பெயர். இவன் தனக்குக் கிடைத்த பட்டப் பெயரைத் தான் ஏற்படுத்திய ராஜதானிக்கு 'இராஜமகேந்திரபுரம்' என்று பெயரிட்டான். பத்தாம் நூற்றுண்டில் சாளுக்கியர்கள்மீது சோழர்கள் படையெடுத்து நாட்டைக் கைப்பற்றினர்.

சோழர்களும், சாளுக்கியர்களுமே ஆந்திர நாட்டை மாறி மாறி ஆண்டுவந்தார்களே யொழிய, ஆந்திரர்கள் தங்கள் நாட்டில் நிலையாகச் செங்கோல் செலுத்தியதாகத் தெரியவில்லை. சாளுக்கிய வம்சத்தில் 26-வது மன்னனுகப் பட்டத்திற்கு வந்தவன் விமலாதித்யன். இவனது ஆட்சிக் காலம் கி. பி. 1015-ம் ஆண்டு முதல் 1522 ஆண்டு வரையில் இருந்து வந்தது. இராஜகேசரி வர்மனுடைய மகளும், இராஜேந்திரசோழனின் தங்கையுமான குண்டமாம்பா தேவியை, விமலாதித்யனுக்கு மணம் செய்து கொடுத்தார்கள். விமலாதித்யனுக்கும் குண்டமாம்பா தேவிக்கும் பிறந்தவனே இராஜ ராஜ நரேந்திரன். இவன் தமிழ் மன்னனுக இருந்தும் தெலுங்கு பாஷையை வளர்த்தான். இவனிடத்தில் தெலுங்குக் கவிகளில் முதன் முதலாகத் தோன்றிய நன்னயப்பட்டர் சமஸ்தான கவியாக இருந்தார். இவருக்கு முன்னர்த் தெலுங்கு சிறப்புற்றிருந்தது கிடையாது. இலக்கணமும் கிடையாது. இராஜராஜ நரேந்திரனுடைய கட்

டளைக் கிணங்கி நன்னயப்பட்டர் சப்த சிந்தாமணி என்னும் தெலுங்கிலக்கிண மியற்றினர். இவ்வாறு தமிழ் மன்னனுன இராஜ ராஜ நரேந்திரன் தெலுங்கு பாஷையை வளர்த்தான் வேறு பாஷை என்று கருதாமல்.

18. கலிங்கநாட்டையும் கேட்க உரிமையுண்டு

இராஜ ராஜ நரேந்திரன் தன்னுடைய தாய் மாமனுடைய மகளான அம்மங்க தேவியை மணந்து கொண்டு, கி. பி. 1063-ம் ஆண்டுவரையில் அரசாண்டு வந்தான். இவனுடைய குமாரன் குலோத்துங்க சோழ தேவன் ஆவான். இவனுக்கு இராஜேந்திர சோழன் என்ற பெயரும் இராஜ நாராயணன் என்ற பட்டமும் உண்டு. இவனையே கரிகால சோழன் என்று கூறுவதும் உண்டு. வெங்கி தேசம், கரிகால சோழனின் சிற்றப்பனுன விஜயாதித்தனுலும், இவனுக்குப் பிறகு கரிகால சோழனின் இரண்டாவது குமாரனுன இராஜ இராஜனுலும் ஆளப்பட்டு வந்தது. பிறகு மூன்ருவது குமாரனுன வீர சோழன் என்னும் விஷ்ணு வர்த்தனன் என்பவன் கி. பி. 1063 முதல் 1112-வரை வெங்கி நாட்டை ஆண்டுவந்தான். முதல் குலோத்துங்கன் மரண காலத்தில் வெங்கிநாட்டை ஆண்டுவந்த விக்ரம சோழன், சோழ தேசம் வந்து விட்டான். ஆந்திர தேசம் இன்று மேன்மையுற்று விளங்குவதற்குக் காரணம் தமிழ் மன்னர்களின் ஆதி ஆட்சி முன்னர் அங்கு நடந்ததே ஆகும்.

சாளுக்கியர்களும், சோழர்களும் வெங்கிதேசம் வரையில் கைப்பற்றிய பின்னர், ஆந்திர தேசாதி

பதிகளா யிருந்தவர்கள், கணபதி வம்சத்தவர்கள் என்று கூறப்படும் காகதீய வம்சத்தவர்களாவர். இந்த வம்சத்தினர் நைஜாம் ராஜ்யத்தில் வாரங்கல் என்னும் பட்டணத்தைத் தலைநகராக்கிக் கொண்டு ஆண்டுவந்தனர். இவ்வம்சத்தினர்களைக் கூட ஆந்திரர்களென்று கூற முடியாது. இவர்களைச் சோழ வம்சத்தவர்களென்றும் கங்கை வம்சத்தவர் களென்றும் சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகிறார்கள். கணபதிராஜ வம்சம், பதினொரு தலைமுறையாக அதாவது 12-வது நூற்றாண்டு வரையில் ஆண்டு வந்தது. கடைசியாகப் பிரதாபருத்திரன் என்பவன் ஆண்டான். இவன் மகா காபுர் என்னும் டில்லி சக்கரவர்த்தியின் சேனாதிபதியோடு பல முறை போர் புரிந்து வெற்றி பெற்றான். இவன் குமாரன், பாமினி முஸ்லிம் மன்னர்களால் தோற்கடிக்கப்பட்டான்; வாரங்கலையுமிழந்தான். வாரங்கலை இழந்த பின்னர், கணபதி வம்சத்தினர் விஜய நகரம் சென்று, தங்களுடைய ராஜ்யத்தை ஸ்தாபித்துக் கொண்டார்கள்.

விஜய நகரத்து அரசர்களுள் ஒருவன் பிள்ளைப்பேறு வேண்டிச் சிவனடியார்க்குத் தானம் செய்து வருகையில், சிவபெருமான் இவனிடம் ஒரு சங்கமராய் வந்து, அவனுடைய மனைவியை வேண்டுமென விரும்பினார். வேறு பெண் கிடைக்காமையால், தனது தேவியரில் ஒருவரை அவர்பால் இசைவித்தனுப்பினான். இம்மன்னனின் பெயர்தான் வல்லாளன் என்பதாகும். ஆகவே, விஜயநகரத்தை ஆண்டவனும் தமிழ் மன்னனான வள்ளாளன் என்று அபிதான சிந்தாமணியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்நூல் மதுரை தமிழ்ச்

சங்கப் பதிப்பானபடியால், மிக்க ஆராய்ச்சியின் கீழ் வெளி வந்திருக்குமென்பதில் ஐயமில்லை. எனவே, ஆந்திர தேசத்தை மன்னர் என்று பெயர் கொண்டு ஆண்டுவந்த காலம், கி. மு. 220 முதல் கி. பி. 184-ம் ஆண்டு வரையில் தான் என்பது, மேற்கூறிய செய்திகளி லிருந்து அறிந்து கொள்ளலாம்.

தமிழ் மன்னர்கள் எல்லையை வகுத்துக்கொண்டு அரசாண்டதுபோல், ஆந்திர மன்னர்கள் எல்லையை வகுத்துக்கொண்டு ஆண்டது, கிருஷ்ணை நதிக்கும், கோதாவரி நதிக்கும் இடையேயுள்ள பாகமாகும். தமிழ் மன்னர்கள் வெங்கி நாடு வரையில் ஆட்சி செலுத்தி வந்தனராயினும் அந்நாடுகளைத் தமிழ் நாடென்று நம் ஆசிரியர்கள் கூறவில்லை.

"நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம் பறுத்த தண்புன னன்னாட்டு
மாட மதுரையும் பீடா ருறந்தையும்
கலிகெழு வஞ்சியும் ஒலிபுனற் புகாரும்"

என்று சிலப்பதிகாரத்தில் வேனிற்காதையில் கூறப்பட்டுளது. வெங்கிநாடு தமிழர்கள் கைவசமிருந்தபோதிலும், அக்காலத்திலிருந்த தமிழ் இலக்கிய ஆசிரியர்கள் நம்முடைய எல்லை, வடவேங்கடத்திற்கு வடக்கே இருப்பதாகப் பாடவில்லை. மேலே சொன்ன 'நெடியோன்குன்றம்' என்பது திருப்பதியும், தொடியோள் பௌவம் என்பது குமரிக்கடலுமாகும். திருப்பதி முதல் குமரிக்கடல்வரையில் தமிழ் நாட்டின் எல்லை யென்பது மேற்படி பாட்டின் கருத்தாகும். நாம் மேற்கூறிய சரித்திர

ஆராய்ச்சிக்கு ஆதாரமாக ஆங்கிலேயர்கள் சரித்திரத்தில் தென் இந்தியா படமொன்று பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அப் படத்திலிருந்து தமிழ் மன்னர்களின் ஆட்சியின் எல்லை எவ்வளவு தூரமிருந்ததென்பதை நண்பர்கள் அறிந்துகொள்ளலாம்.

முன் அத்தியாயத்தில் தமிழ் மன்னர்கள், வெங்கி நாடு வரை ஆண்டு வந்தார்களென்பதை காட்டினேம். இனி, வெங்கி நாட்டுக்கு வடக்கேயுள்ள கலிங்க தேசத்தையும் தமிழ் மன்னர்கள் ஆண்டார்களென்பதற்குப் போதிய ஆதாரங்கள் இருக்கின்றன. சோழ மன்னர்கள் வெங்கி நாட்டைக் கடந்து, கலிங்க தேசத்தைக் கைப்பற்றிய வரலாற்றை வெகு அழகாக சயங்கொண்டான் என்னும் புலவர் பாடியுள்ளார். இந் நூலுக்குக் கலிங்கத்துப் பரணி என்று பெயர்.

தமிழர்கள் ஆட்சி செலுத்திய நாட்டை எல்லாம் தமிழர்கள் வேண்டுமென்று கேட்க உரிமையுண்டு. விஜயநகர மன்னன் ஆட்சியின் கீழிருந்ததாகக் கூறப்படும் சந்திரகிரி மன்னன், சென்னையைஆங்கிலேயருக்குக்கொடுத்துவிட்டான். சென்னையை ஆங்கிலேயர்களுக்கு கொடுத்த உரிமை ஒன்றினையே கொண்டு ஆந்திரர்கள் சென்னைப் பட்டினத்தில் பாதியையும், செங்கல்பட்டு ஜில்லாவில் ஒரு பாகத்தையும் இப்போது கேட்கிறார்கள். ஆனல், பல ஆண்டுகளாகத் தமிழ் மன்னர்கள் ஆண்டுவந்த கலிங்க தேசத்தையும், வெங்கி நாட்டையும் தமிழர்கள் கேட்டால் ஆந்திரர்கள் தர இசைவார்களா? தமிழர்கள் பெருநோக்கிலும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையிலும் தலைசிறந்த

வர்கள். எனவே, வடவேங்கடம் வரையில் நமக்குரியது கிடைத்தால் போதுமென்கின்றனர். இதில் தவறு என்ன இருக்கிறது?

19. ஆந்திர நாடு சிதறுண்டமை

ஆந்திரர்கள் சென்னையைக் கேட்பதற்குக் காரணங்கள் இரண்டு. சென்னையை ஆங்கிலேயர்களுக்குக்கொடுத்த உரிமை என்பது ஒன்று; மற்றொன்று விஜயநகர மன்னர்களால் தமிழ் நாடு ஆளப்பட்டதாகும். விஜயநகர ஆட்சியைப்பற்றியும் அம் மன்னர் யாவரென்பதைப்பற்றியும் சிறிது ஆராய்ந்தோமானால், ஆந்திரர்களின் ஆரவாரத்திற்கு ஆதாரமே இல்லை. ஆகவே, விஜயநகர மன்னர்கள் யாவரென்பதைச் சற்றுக் கவனிப்போம். ஆந்திர தேசாதிபதிகளாக இருந்தவர்கள் காகதீய வம்சத்தினர்கள் என்று சொன்னோம். இவர்களில் கடைசியாக ஆட்சி செலுத்தியவன் பிரதாப ருத்திரன். இவனுடைய ஆட்சி உச்ச நிலைமையில் ஒரு காலத்திலிருந்தது. கடைசியாக கி. பி. 1323-ம் ஆண்டில் அஸ்தமனத்திற்கு வந்துவிட்டது. இவன் ஆட்சி அழிவதற்குக் காரணமாயிருந்தது முஸ்லிம்களின் படையெடுப்பேயாகும். வாரங்கலைக் காகதீயர்களும் தேவகிரியை யாதவர்களும் ஆண்டு வந்தனர். முஸ்லிம்களின் படையெடுப்புக்குப் பின்னர், இவ்விரண்டு ராஜ்யங்களும் சிதறிப் போய்விட்டன.

காகதீயர்களின் ஆட்சியின்கீழ்ச் சிற்றரசர்களாக விருந்து ஆட்சி செலுத்தியவர்கள் ரெட்டிமார்கள். இவ்வாறு ஆட்சி செலுத்திய ரெட்டிமார்களைச் சர்வாதிகாரிகளென்று குடிமக்கள் அழைத்து வந்தார்கள். சர்வாதிகாரிகள் என்று அழைத்ததி

விருந்தே குடிகள் தமிழர்கள் என்பதை நாம் சொல்ல வேண்டுவதில்லை. காகதீய வம்சத்தில் கடைசியாக ஆட்சி செலுத்தியவன் பிரதாப ருத்திரன் என்று கூறினேம். இவன்கீழ்ச் சர்வாதிகாரியாயிருந்தவன் எல்லை ரெட்டி என்பவன் ஆவான். கடப்பை ஜில்லாவில் காண்டி கோட்டை என்னுமிடத்தில் கொங்காரெட்டி என்பவன் ஆட்சி செலுத்தி வந்தான். கிருஷ்ண நதிக்கரையில் அமராவதி என்னுமிடத்திற்கு அருகிலுள்ள தாரணிக் கோட்டையில் டோண்டி ஆலரெட்டி என்பவன் ஆட்சி செலுத்தி வந்தான். தாரணிக் கோட்டைக்கு அருகில் முஸ்லிம்களுக்கும் பிரதாப ருத்திரனுக்கும் நடந்த போரில் பிரதாப ருத்திரனிடம் சேனாதிபதியாயிருந்த வேம ரெட்டி என்பவன் வின்னு கொண்டா எனும் இடத்தில்தான் ஒரு ராஜ்யத்தை ஸ்தாபித்துக் கொண்டான். காகதீய மன்னனை முஸ்லிம்கள் கைதியாக்கிக் கொண்டார்கள். காகதீய ஆட்சி சிதறுண்டு போனதால், ரெட்டி வம்சத்தினர் மன்னர்களாகி விட்டனர்.

பிரதாபருத்திரனைச் சிறை பிடித்துக்கொண்டு போனவுடன், வாரங்கலிலிருந்த பிரதாபருத்திரன் மகன் கிருஷ்ண நாயக் என்பவன் கி. பி. 1344-ம் ஆண்டு சில சிற்றரசர்களைச் சேர்த்துக்கொண்டு கோட்டைகளைப் பலப்படுத்தினன். நாட்டைப் பலப்படுத்தி வெற்றிபெறும் நோக்கத்துடன் நிர்மாணிக்கப்பட்ட ராஜயமே விஜயநகர ராஜ்யமாகும். பல சிற்றரசர்களின் உதவியைக் கொண்டு வடக்கே சென்று, 1370-ம் ஆண்டில் மகம்மது ஷா என்பவனை மிரட்டினன். கிருஷ்ணப்ப நாயக்கனின்

மிரட்டலுக்கு மகம்மதுஷா என்பவன் அசைய வில்லை. கிருஷ்ணப்ப நாய்க்கனுக்கு உதவியாயிருந் தவன் பீஜ்நகர் அரசனுவான். இவர்களிருவரையும் மகம்மதிய ஜெனரலாயிருந்த பகதூர் கான் தோற் கடித்தான். கிருஷ்ணப்ப நாயக்கனும், பீஜ் நகர் மன்னனும் தோற்று ஓடியதால் மகம்மத் ஷா படையெடுத்து வந்து திரிலிங்கானத்தையும் பிடித் துக் கொண்டான்.

தங்கள் வசமிருந்து போன நாடுகளை மைசூரி லிருந்த ஹொய்சளர்களின் உதவியாலும் தேவகிரி யிலிருந்த யாதவர்களின் உதவியாலும் விஜயநகர ராஜ்யத்தை மறுமுறை ஸ்தாபித்து, கி. பி. 1335-ம் ஆண்டு முதல் 1565-ம் ஆண்டுவரையில், பல சிற்றர யர்களின் கர் மன்ன உதவியால் விஜயநகரள் ஆண்டு வந்தார்கள். 1565-ம் ஆண்டு பாமனி ராஜ் சத்தினரும், சுல்தான் வம்சத்தினரும் ஒன்று சேர்ந்து கொண்டு விஜயநகர ராஜ்யத்தை ஒழித்து விட்டனர். 1565-ம் ஆண்டு ஜனவரி 25-ந் தேதி தலைக்கோட்டைப் போரில் தோல்வியுற்ற விஜய நகர ராஜ்யத்தினர் தலை எடுக்கவில்லை. இப்பொழு துள்ள விஜய நகர சமஸ்தானுதிபதிகள் பழைய பரம்பரையான விஜய நகர சாம்ராஜ்யத்தைச் சேர்ந்தவர்களாவர்.

இங்கிலாந்தில் கிழக்கு இந்தியா கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டது. 1599-ம் ஆண்டாகும். 1565-ம் ஆண்டில் நடந்த தலைக்கோட்டை யுத்தத்தில் விஜயநகர ஆட்சி முறிந்துவிட்டது. ஆகவே, விஜய நகர ஆட்சி முறிந்து, 34 ஆண்டு கழிந்துபோன பின்பே கிழக்கு இந்தியா கம்பெனி இங்கிலாந்தில்

ஸ்தாபிக்கப்பட்ட தென்பது நன்கு விளங்கும். கிழக்கு இந்தியா கம்பெனியாரை, இந்தியாவில் முதன் முதலாக வர்த்தகம் செய்ய அனுமதித்தவர் டில்லியில் ஆட்சி செலுத்திய முஸ்லிம்களாவர். முதலில் சூரத்தில் 1166-ம் ஆண்டில் வெள்ளையர் களுக்கு வர்த்தகம் செய்ய இடம் கிடைத்தது. 1662-ம் ஆண்டு பம்பாயில் இடம் கிடைத்தது. 1639-ம் ஆண்டு சென்னைக் கடற்கரையோரத்தில் வெள்ளையர்களை வர்த்தகம் செய்ய அனுமதித்தது சந்திரகிரியில் ஆட்சி செலுத்திய மன்னனுவான். 1565-ம் ஆண்டில் சிதறிப்போன விஜயநகர சாம்ராஜ்ய மன்னர்களால் கொடுக்கப்பட்டவையே மேற் சொன்ன இடங்களென்று கூறுவதோ அல்லது அம் மன்னர்கள் ஆட்சியின் கீழிருந்த சிற்றரசர்களால் கொடுக்கப்பட்டன என்று கூறுவதோ பொருத்தமாகாது.

கி. பி. 320-ம் ஆண்டுக்குப் பிறகு ஆந்திரர்கள் ஏதாவதொரு தேசத்தைச் சுயேச்சையாக ஆண்டு வந்தார்களென்று கூறினல், அந்தத் தேசம் பூகோள படத்தில் உண்டா?

20. முன்னர்ப் பிரிக்கப்பட்ட ஜில்லாக்களை ஒன்று சேர்க்கவேண்டும்

ஆந்திரர்கள் மாகாண பிரிவினைக்குப் பாடுபட்டால், நாம் ஆட்சேபிக்கப் போவதில்லை. சென்னையையும் செங்கற்பட்டையும், சித்தூரையும் ஆந்திரர்கள் ஆக்கிரமிக்க நினைத்தால், நாம் சும்மாவிருக்க முடியுமா? நம்முடைய கொள்கையையும், எல்லையையும் வெளிப்படையாகத் தெரிவிக்கவேண்டும். சந்திரகிரி, பால்மனுர், சித்தூர் ஆகிய மூன்று தாலு

காக்களும் வட ஆற்காட்டோடு சேர்ந்தவையா கும். முன்னர் பொப்பிலி ராஜா ஜில்லா போர்டு களைப் பிரித்து நிர்வாகம் நடத்தியபோதிலும், பிரிக்கப்பட்ட ஜில்லா போர்டுகளின் பெயர் களை மாற்றி அமைக்கவில்லை. தஞ்சை, ராம நாதபுரம் முதலிய ஜில்லா போர்டுகளைப் பிரித்த காலத்தில் ஒன்றுக்குக் "கீழ் தஞ்சாவூர்" என் றும் மற்றொன்றுக்கு "மேல் தஞ்சாவூர்" என் றும் பெயர் வைத்தார். ராமநாதபுரத்திற்கும் அப்படியேதான். பிரித்த ஜில்லா போர்டு களுக்கெல்லாம் இவ்விதமே பெயர்கள் வைக்கப் பட்டன. பிரித்த தாலூகாக்களான சந்திரகிரி, பால்மனூர், சித்தூர் முதலியவற்றையும் கடப்பை ஜில்லாவிலிருந்து சில தாலூகாக்களைப் பிரித்தும் இவைகளை யொன்று சேர்த்து, சித்தூர் ஜில்லா வென்று ஒரு தனி ஜில்லாவாக்கித் தனிப் பெயர் கொடுத்தார்கள் ஆங்கிலேயர்கள். இவ்வாறு பிரித் ததினால் வட ஆற்காடு ஜில்லாவில் சிறுபான்மை யோராயிருந்த ஆந்திரர்கள், சித்தூரில் பெரும்பான் மையோராகி விட்டார்கள். 1911-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதிக்கு முன்பு சித்தூர், வட ஆற் காட்டில் ஒரு தாலூகாவாகவே யிருந்தது. இருபத் தொன்பது ஆண்டுகளுக்கு முன்பு ஆங்கில ஆட்சி யால் வடக்கே வைத்த இத்தீ, இன்று புகைய ஆரம் பித்துவிட்டது. ஆகவே, இந்த தீயை அணைப்ப தெப்படி? பொப்பிலி ராஜா பிரித்த ஜில்லாபோர்டு களை ஒன்றாக இணைக்கவேண்டுமென்று ஜனங்கள் கிளர்ச்சி செய்தனர். காங்கிரஸ்காரர்கள் பதவி ஏற்றுக்கொண்டபின்னர், ஒன்றுசேர்த்தனர். நாடு விடுதலையடைந்தவுடன், ஆங்கிலேயர்களால் பிரிக்

கப்பட்ட ஜில்லாக்களைக் கலைத்துவிட்டு, எந்தெந்த தாலுகாக்களை எந்தெந்த ஜில்லாக்களி லிருந்து பிரித்தார்களோ அந்தந்த ஜில்லாக்களோடு மீண்டும் சேர்த்துவிட்டால், ஆந்திரர்கள் ஆக்கிரமிப்பு எண்ணம் அவிந்துவிடுமென்பதில் ஐயமில்லை.

ஆங்கிலேயர்களின் ஆட்சி இந் நாட்டில் உதயமான பிறகு, சில ஆண்டுகள் கழித்து 1891-ம் ஆண்டு வட ஆற்காடு ஜில்லாவில் ஜனன மரணக் கணக்கெடுத்தனர். அப்பொழுது வட ஆற்காட்டின் ஜனத் தொகை மொத்தம் 21,80,487. இதில் தமிழர்கள் 12,14,930 பேர்; தெலுங்கர்கள் 8,52,880 பேர்; கன்னடர்கள் 31,483 பேர்; ஹிந்துஸ்தானியர் 65410 பேர்; மற்ற டேனிஷ், இங்கிலீஷ், பிரஞ்சு, ஜெர்மன், ஐரிஷ், போர்ச்சுகீஸ், மராட்டி, பெங்காலி, பர்மியர், குஜராத்தி முதலிய பல பாஷைக்காரர்கள் 14,784 பேர் இருந்தார்கள். ஆகவே, இக் கணக்குப்படி பார்த்தால், தமிழர்கள் 53 73 சதவீதமும் தெலுங்கர்கள் 39 12 சதவீதமும், கன்னடர்கள் 1 44 வீதமும், ஹிந்துஸ்தானிகாரர்கள் 30 0 வீதமுமாக இருந்தனர். தெலுங்கர்கள் சிறுபான்மையோராக இருந்தனர். இவர்கள் பெரும் பான்மையோராகச் செய்வதற்கு ஆங்கிலேயர்கள் எல்லையைப் பிரித்து ஒன்றுபட்டிருந்த ஆந்திர—தமிழர்களை வேறுபடுத்தினர். ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கு நாம் அடிமைப்பட்ட காலத்தில், ஆற்காடு, ஆரணி, சந்திரகிரி, சித்தூர், குடியாத்தம், காளாஸ்தி, காளகுண்டி, மதாபாக்கம், பால்மனூர், புங்கனூர், போளூர், புத்தூர், திருத்தணி, வேலூர், வாலாஜாபேட்டை, வந்தவாசி முதலிய தாலூகாக்கள் வட ஆற்காடு ஜில்லாவிலிருந்தன. வட

ஆற்காட்டோடு சேர்ந்திருந்த சந்திரகிரி, சித்தூர், பால்மனுர் முதலிய மூன்று தாலூகாக்களைப் பிரித்துப், பெரும்பான்மையான தெலுங்கு தாலூகாக்களோடு இணைத்து விட்டதால், சித்தூர் ஜில்லாவில் தமிழர்கள் ஜன சங்கியைக் குறைந்து விட்டது.

கி. மு. 3100 ஆண்டுகளுக்குமுன்னர்த்திருப்பதியில் மதில் சுவர் கட்டப் பரிக்ஷித்து மகாராஜா ஆரம்பித்தான். இவன் காலத்தில் மதில் சுவரே கட்ட முடியவில்லை. இவனுடைய மகன் ஜனமே ஜயன் பட்டத்திற்கு வந்து பல ஆண்டுகள் கழித்த பின்பு மதிற்சுவர்களைக் கட்டிமுடித்தான். பிறகு வந்த தொண்டைமான் சக்ரவர்த்திக்குத் திருப்பதியில் ஆலயங்கள் கட்டிமுடிக்கவேண்டுமென்ற ஆசை தோன்றியது. இவ்வாலயங்களை விரைவில் கட்டுவதற்கு ஏராளமான தொழிலாளர்களை நெல்லூர் ஜில்லாவிலிருந்தும், கடப்பை ஜில்லாவிலிருந்தும் அழைத்து வந்தான் தொண்டைமான் சக்கரவர்த்தி. துரிதமாக வேலை நடக்கத் தொண்டைமானும் காளாஸ்திக்கு அருகில் தங்கி, ஆலயப்பணியாட்களைக் கவனித்து வந்தான். இவ்வரசன் வசித்து வந்தநாட்டுக்குத்தொண்டைமாநாடுஎன்று பெயர். இப் பெயர் இன்றும் வழங்கி வருகின்றது.

இதற்கு ஆதாரமாகத் தொண்டைமா நாட்டிலுள்ள கோதண்ட ராமஸ்வாமி கோவிலிலிருக்கும் கல்வெட்டும் கூறுகின்றது. திருப்பதி மலை மீதுள்ள ஆயிரக்கால் மண்டபம் ஒரு சமயம் பழுதடைந்து விட்டது. இதைப் பழுது பார்க்க 1,50,000 ரூபாய் மதிப்புள்ள பொன்னைச் செலவு செய்தவன்

சந்திர சேகர சோழனென்று கூறும் கல்வெட்டொன்று மலைமீதுள்ளது. கங்கா நதிக்குத் தெற்கே 2000 மைல் தூரத்திலும் கடலிற்கு மேற்கே 50 மைல் தூரத்திலுமுள்ள மலையின் மீது ஈஸ்வரன் கோவில்கொண் டெழுந் தருள்வதற்காகச் சோழ மன்னன் கோவில் கட்டப் போகிறார் என்று பிரம புராணத்தில் எழுதப்பட்டிருக்கிறது. திருப்பதி வரையில் தமிழர் நாட்டெல்லையாம் என்பதற்கு இவைகளை விட வேறு சான்றுகள் வேண்டுவதில்லை. இந்த ஆதாரங்களுக்குச் சாதகமாக வட ஆற்காடு ஜில்லா மானுயலிலும் இது பற்றி எழுதப்பட்டிருக்கிறது.

மேலும், "ஆழ்வார்கள் செந்தமிழை ஆதரித்த வேங்கடமென் தாழ்வான புன்சொல்லும்தாங்குமால்—ஏழ்பாரும் வெல்லுங் கதிர்மணியும் வெம்பரலுஞ் செஞ்சாந்தும், புல்லும் பொறுத்தமையே போல்" என்று பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் "செந்தமிழை ஆதரித்த வட வேங்கடமென்று" தமிழ் நாட்டு எல்லையையும், தமிழின் சிறப்பையும் கூறுகிறார்.

21. இருந்த நாட்டை விட்டனர்: வந்த நாடு வேண்டுமாம்

ஆதியில் ஆந்திர தேசத்திற்குத் தலைநகராயிருந்தது வாரங்கல் பட்டணம். இப்பட்டணத்தைத் தலைநகராகக் கொண்டு வெகு காலம் வரையில் ஆந்திர மன்னர்கள் ஆட்சி செலுத்தி வந்தனர். இந்நகரமும், இதைச் சுற்றிலுமுள்ள நாடுகளும் ஆந்திரர்களுக்குச் சொந்தமானவை. ஆந்திர தேசத் தலைவர்கள் தனி மாகாணம் ஸ்தாபிக்க

விரும்பினால், முதன் முதலில் எந்த நாட்டை இழந்தனரோ, அந்த நாட்டைக் கைப்பற்ற வேண்டுவது பொருத்தமாகும். உண்மையாகவும், உறுதியாகவும், சரித்திர பூர்வமாகவும் கிடைக்க வேண்டிய வாரங்கல் நகரத்தை விட்டுவிட்டுச், செங்கல்பட்டையும், சென்னையையும் ஏன் ஆக்கிரமிக்க நினைக்கவேண்டும்? எந்த நாட்டில் ஆந்திரர்கள் தங்கள் ஆட்சியை இழந்தனரோ, அந்த நாட்டில் தங்கள் ஆட்சியை நிலைநாட்ட முயற்சிப்பதே முறை.

ஆந்திர தேசத்திற்கே திலகமாக விளங்கும் வாரங்கல் பட்டணத்தைத் தலைநகரமாகக் கொள்ளாமல், சென்னையை ஏன் ஆக்கிரமிக்க எண்ண வேண்டும்? வாரங்கலில் கட்டப்பட்டுள்ள ஆலயங்களும், மண்டபங்களும், ஆங்கிலேயர்களாலோ, முஸ்லிம்களாலோ கட்டப்பட்டதாக ஆந்திரர்கள் கருத வேண்டுவதில்லை. முஸ்லிம்கள் படையெடுப்புக்கு முன்னரே கி. பி. 1162-ம் ஆண்டில் ஆந்திரர்களின் பொருளுதவியால் சாளுக்கியர் சித்திரப்படி கட்டப்பட்ட கட்டிடங்களாகும். ஆந்திரர்களின் ஆதிக்கம், இவ்விடங்களில் ஓங்கியிருந்த தென்பதற்கு மேற்சொன்ன காரணங்களே போதுமானவை. தமிழ் நாட்டை யார் ஆண்டபோதிலும், தமிழர்களுக்குச் சொந்தமாவது போல் ஆந்திர நாடான வாரங்கலை யார் ஆண்டபோதிலும் ஆந்திரர்களுக்குச் சொந்தமானதே. 1308-ம் ஆண்டில் டில்லியில் ஆட்சி செலுத்திய முஸ்லிம் மன்னர்கள்

வாரங்கல் பட்டணத்தைக் காகதீயர்களிட மிருந்து கைப்பற்றிக் கொண்டனர்.

மேற்சொன்ன வாரங்கல் பட்டணம், 1308-ம் ஆண்டுமுதல் இன்றுவரை, முஸ்லிம்களின் ஆட்சியி லிருக்கிறது. வாரங்கல் பட்டணம் செங்கல்பட்டு ஜில்லாவிலோ, சென்னையிலோ கிடையாது! ஆந்திரர்களுடைய தலைநகரம் வடக்கே யிருக்கும் பொழுது சென்னையில் கிளர்ச்சி செய்வதற்கு அர்த்தமேயில்லை? உண்மையில் ஆந்திரர்கள் மாகாண பிரிவினை வேண்டுமெனக் கருதினால், தங்கள் சூரத்தனத்தை ஐதராபாத் சமஸ்தானத்தில் காண்பிக்கட்டும். அதை விடுத்துத் தமிழர்களையும், தமிழ் நாட்டுத் தலைவர்களையும் தாக்கிப் பேசுவதிற் பயனில்லை.

வாரங்கல் பட்டணத்திலுள்ள பல மண்டபங்களும், ஆலயங்களும் ஆந்திரர்களுக்குச் சொந்தமானவையே. தெலிங்கான என்று கூறப்படும் திரிலிங்கானமும் இதுதான். ஆதியில் ஆந்திரர்களுக்குத் தலைநகரமா யிருந்த இடமும் நாடும் இந்த வாரங்கல் ஜில்லாதான். இவையன்றி, ஆந்திரர்கள் பெரும்பாலோர் ஐதராபாத் சமஸ்தானத்திலிருக்கின்றார்கள். 1921-வது ஆண்டில் எடுத்த சென்ஸஸ் கணக்குப்படி ஐதராபாத் சமஸ்தானத்திலுள்ள பாஷாவாரி ஜனத்தொகை பின்வருமாறு:

தெலுங்கு	60,17,341
மகாராஷ்டிரம்	32,98,733
கன்னடம்	15.36,928
ஹிந்தி	13,16,851
ராஜஸ்தானி	1,60,124
கோண்டி	68,200
தமிழ்	33,994
குஜராத்தி	16,793
இங்கிலீஷ்	9,285
மலையாளம்	164
மற்ற பாஷை	13 357
மொத்தம்	1,24,71,770

22. ஜனத்தொகைக் கணக்குத் தந்திரம்

ஆகவே, மொத்த ஜனத் தொகையின் சரிபாதி அளவுக்கு ஆந்திரர்கள் வசிக்கும் ஐதராபாத் சமஸ்தானத்தைத் தங்கள் ஆந்திர மாகாணத்தோடு சேர்த்துக் கொள்வதற்காகப் பிரசாரம் செய்வது நலம்.

தங்கள் நாடுகளுக்கு அருகிலுள்ளதும் பூர்விக சின்னங்களும், பெரும்பான்மையோர் ஆந்திரர்களும் உள்ளதுமான நாடான ஹைதராபாத்தை ஆந்திரர்கள் கனவிலும் கருதவில்லை. ஐதராபாத் சமஸ்தானத்தில் ஆந்திரர்கள் இழந்த நாடுகளை ஈடு செய்து கொள்வதற்காகத் தமிழ் நாட்டை எண்ணி

னர் போலும்! செங்கல்பட்டு ஜில்லா மொத்த ஜனத்தொகை : 1855115 இதில்,

தமிழர்கள்	12,90,877
தெலுங்கர்கள்	3,19,946
மலையாளம்	1,356
ஒரியா	39
கன்னடம்	5,470
ஹிந்துஸ்தானி	26,624
மற்ற பாஷை	10,803
மொத்தம்	16,55,115

சுமார் 16 லட்சம் ஜனத்தொகையில் மூன்று லட்ச ஜனத்தொகையுள்ள தமிழ்நாட்டுத் தெலுங்கர்களுக்காகச் செங்கல்பட்டு ஜில்லாவில் பெரும்பாகம் வேண்டுமென்று கூறுபவர்கள் கஞ்சம் ஜில்லாவில் ஏன் தங்கள் சாமர்த்தியத்தைக்காண்பிக்கக்கூடாது? கஞ்சம் ஜில்லாவில் ஒரியாக்காரர்கள் அதிகமாயிருப்பதால், அந்த ஜில்லா வேண்டுவதில்லை எனக் கூறுகிறார்கள். ஆந்திர தேசத்திற்கு வடமேற்கிலுள்ள ஐதராபாத் சமஸ்தானத்திலிருக்கும் தெலுங்கர்களைப் பற்றியும், விசாகப் பட்டணத்திற்கு வடக்கேயுள்ள கஞ்சம் ஜில்லாவிலிருக்கும் தெலுங்கர்களைப் பற்றியும் ஆந்திரர்கள் பொருட்படுத்தவில்லை. ஆனால், சம அந்தஸ்து, சம பங்கு, சம உரிமையுடன் தமிழ் நாட்டில் வாழும் தெலுங்கர்கள்மீது ஆந்திரர்களுக்கு அன்பு வழிகிறது. இது தான் தங்கள் நாட்டுக்கு வந்த விருந்தினர்களைத் தமிழர்கள் உபசரித்து வந்த பலன் போலும்!

மத சுதந்திர மற்றுப் பாஷை சுதந்திரமற்று, நாட்டுச் சுதந்திரமற்று ஐதராபாத் சமஸ்தானத்தி லிருக்கும் ஆந்திரர்களுக்காகப் பாடுபட்டால், ஆந்திர தேசத்தலைவர்களை அந்த சமஸ்தானவாசிகள் போற்றுவார்கள். அதை விட்டு விட்டுப் புதுக்கோட்டை, பங்கனபல்லி, சாண்டூர் முதலிய சிறிய சமஸ்தானங்களிலுள்ள ஆந்திரர்களுக்காக அனுதாபப்படுகிறார்கள். பங்கனபல்லியைப்பற்றியும், சாண்டூரைப் பற்றியும் தமிழர்கள் கவலைப்படவேண்டுவதில்லை. ஏனெனில், இவ்விரண்டு சமஸ்தானங்களும் ஆந்திர தேசத்திலுள்ளன. சாண்டூர் சமஸ்தானம் பல்லாரி ஜில்லாவிலும் பங்கனபல்லி கர்நூல் ஜில்லாவிலு மிருக்கின்றன. ஆகவே, இவ்விரண்டு ஜில்லாக்களும் ஆந்திர தேசத்திற்குள்ளிப்பதால், ஆந்திர தேசத் தலைவர்கள் தங்கள் நாட்டு மக்கள் மீது கவனம் செலுத்தியதற்கார்கப் பாராட்டுகிறோம்.

மாகாண பிரிவினை வேண்டுமென்கிற நோக்கத்திற்காக ஸ்ரீ ராமதாஸ் பந்துலு உலகததிலுள்ள ஆந்திரர்கள் மொத்தம் 3,63,73,767 பேர்களிருக்கிறார்களென்று கூறுகிறார். ஆந்திர மாகாணப் பிரிவினை கிடைத்த உடனே தங்கள் நாட்டு மக்கள் மற்ற நாடுகளில் குடியேறியபின்னர், கிடைத்த நிலபுலங்களை விட்டு விட்டு ஆந்திர தேசம் சென்று விடுவார்களா என்று கேட்கிறோம். அல்லது வெளி நாடுகளிலிருக்கும் ஆந்திரர்களை ஆந்திர தேசத்திற்கு அழைத்துக் கொண்டுபோய் ஆதரிக்க ஆந்திரர்களால் இயலுமா? இதனைச் சிந்திப்பார்களாக!

இந்தியாவிலுள்ள மொத்த ஆந்திரர்களின்

தொகை 2,63,73,727; தமிழர்களின் தொகை 2,04,12,652 ஏறத்தாழ இரண்டு கோடி அறுபத்து மூன்று லட்சம் ஜனத் தொகையுள்ள ஆந்திரர்களுக்குத் தனி மாகாணம் வேண்டுமென்று கூறுகிறார்கள். நாமும் இதை ஆட்சேபிக்கவில்லை. இவ்வளவு பெருந் தொகையுள்ள ஆந்திரர்கள் வேறு நாடுகளுக்குச் செல்லவொட்டாமல் பாதுகாக்கப் பட்டனரா வென்றால், அதுவுமில்லை. ஆனால், மாகாணப் பிரிவினை வேண்டுமென்று கோரும் ஆந்திர தேசத் தலைவர்கள், மற்ற மாகாணங்களிலிருக்கும் தெலுங்கர்களை யெல்லாம் கணக்கெடுத்துக்கொண்டு தனி மாகாணம் வேண்டுமென்கிறார்கள்.

ஜனத் தொகையைக் காண்பித்து மாகாண பிரிவினை வேண்டுமெனக் கூறினால், தமிழ் நாட்டிலுள்ள தெலுங்கர்கள் ஆந்திர நாட்டுக்கும், ஆந்திர நாட்டிலுள்ள தமிழர்கள், தமிழ் நாட்டுக்கும் சென்றுவிட வேண்டுமென்று கூறுகிறார்கள் போலும். பேருக்கு 263 லட்சம் பேர் ஆந்திரர்களென்று கூறினபோதிலும், 1,40,34,276 பேர் கஞ்சம் முதல் சித்தூர் வரையிலுள்ள ஆந்திர தேசத்தி லிருக்கிறார்கள்.

நம்முடைய ஆதாரப்படி சித்தூர் ஜில்லாவைத் தமிழ் நாட்டுடன் சேர்த்துக் கொண்டால், அந்த ஜில்லாவிலுள்ள 3,19,946 தெலுங்கர்களையும் ஆந்திர தேசத்திற்கு வடக்கேயுள்ள கஞ்சம் ஜில்லா ஒரிஸ்ஸா மாகாணத்தோடு சேர்த்துவிட்டால், அந்த ஜில்லாவிலுள்ள 8,97,378 ஆந்திரர்களையும் சேர்த்து மொத்தம் 12,17,24 பேர்.

இந்த ஜனத்தொகையை ஆந்திர ஜனத்தொகை 1,40,34,276-ல் கழித்துவிட்டால், ஆந்திர தேசத்திலுள்ள ஆந்திரர்கள் ஏறத்தாழ 1,28,16,952 பேராகும். மொத்த மாகாணத்திலுள்ள ஆந்திர ஜனத்தொகை 2,63,73,727-ல், ஆந்திரர்களின் ஆதரவிலிருப்பவர்கள் 1,28,16,952 பேர். ஆகவே இக்கணக்குப்படி பார்த்தால் ஆந்திர ஜனத்தொகையில் சரிபாதிக்கு மேல் அதாவது 131,86,863 பேர் வெளிநாட்டினர்களோடுவசிக்கின்றார்கள். ஆகவே, வெளிநாட்டில் வசிக்கும் ஆந்திர சகோதரர்களின் நன்மையைக் கருதியாவது ஆந்திர தேசத் தலைவர்கள் பேசாம லிருப்பார்களென்று நம்புகிறோம்.

தமிழ்நாட்டு வடக்கெல்லையான சித்தூரில் எப்படித் தெலுங்கர்கள் பெரும்பான்மையோராக விருக்கின்றார்களோ, அவ்வாறே ஆந்திர தேச வடக்கெல்லையான கஞ்சம் ஜில்லாவிலும் ஒரியாக்காரர்கள் பெரும்பான்மையோராக இருக்கின்றார்கள்.

சித்தூர் ஜில்லாவில் பெரும் பான்மையோராக ஆந்திரர்கள் வந்து குடியேறினராயினும் அந்த ஜில்லா தமிழ்நாடு என்பதும் தமிழர்களுக்குச் சொந்தமானதென்பதும் முன் அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டன.

ஆந்திரர்களுக்கு வடக்கெல்லை கஞ்சம் என்று கூறப் போதுமான ஆதாரம் இல்லை. ஆகவே, அங்குக் குடியேறியுள்ள ஒரியாக்காரரின் ஜனத் தொகையைக் கண்டு

மிரண்டு இங்கு வந்தனர். ஆதிமுதல் அடைக்கலம் தந்து ஆதரித்து வந்தவர்களான தமிழர்களைப் பகைமைக் கண்கொண்டு பார்க்கின்றனர். வட மேற்கே முஸ்லிம்களின் ஆதிக்கத்திலும், வடக்கே ஒரியாக்காரரிடமும் ஆந்திரர்களைத் தவிக்க விட்டு விட்டுத் தமிழ்நாடே தங்கள் தாய்நாடென நினைத்து வரும் தெலுங்கர்களின் மனத்தில் வேதனையை உண்டுபண்ண முனைகின்றனர். ஆந்திரதேசத் தலைவர்கள் உண்டுபண்ணும் வீண் கிளர்ச்சி, தமிழ் நாட்டிலுள்ள தெலுங்கர்களை ஒரு சிறிதும் பாதிக்காது. மேலும் இங்குள்ளோர் சிலர் தெலுங்கு பேசுவதால் தெலுங்கர்களானார்களே யொழிய, இவர்களுக்கும் ஆந்திர தேசத்திற்கும் யாதொரு தொடர்பும் இல்லை. ஆந்திர தேசத்திற்கு வெளியே யுள்ள மாகாணங்களில் வசிக்கும் தெலுங்கர்களை அதாவது 1,31,86,863 பேர்களை ஆந்திரர்கள் கூறுகிறவாறு மாகாணப் பிரிவினை வேண்டுமா என்று கேட்டால், வேண்டாமென்றே கூறிவிடுவார்கள்.

தமிழ் நாடே தாய்நாடெனக் கருதி வாழும் தமிழ் நாட்டிலுள்ள தெலுங்கர்களுக்கு ஆவலெல்லாம் தமிழ் நாட்டின் மீதும் தமிழர் மீதும்தா னிருக்கும். பாஷையில் வேறுபட்டனராயினும் தமிழரும் தெலுங்கரும் உள்ளத்தால் ஒன்றுபட்டு ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகள் போலே வாழ்ந்து வருகின்றனர்.

23. புலுசு சாம்பமூர்த்தியின் புது யோசனை

கிருஷ்ணா நதிக்கும் கோதாவரி நதிக்கும் மத்தியிலுள்ள தேசமே ஆந்திர நாடு என்கின்ற

உண்மையை உணர்ந்தவர் ஸ்ரீ புலுசு சாம்பமூர்த்தி. ஆகவே, அவர் சென்னை ஆந்திரர்களுடையதென்று கூற நா இசையாது. சென்னை இருவருக்கும் பொதுவாக இருக்கவேண்டுமென்று சிதம்பரம் அண்ணமலைச் சர்வகலாசாலையில் வாசிக்கும் ஆந்திர மாணவர்களிடையே சமீப ஆண்டில் பிரசங்கம் செய்தார்.

இதுவரையில் சென்னை ஆந்திரர்களுக்குரியது எனக் கூறி வந்தவர்கள், இன்று சென்னையை ஏன் பொதுவாக விருக்கவேண்டுமெனக் கூறுகிறார்களென்பது விளங்கவில்லை. ஒரு வேளை ஸ்ரீ. சாம்பமூர்த்தி ஆராய்ச்சி செய்து பார்த்திருப்பார். உண்மை விளங்கி இருக்கும். எனவே, பொதுவாகச் சென்னை இருக்கட்டுமென்று கூற முன் வந்தார். ஆரம்ப முதல் நம்முடைய எல்லை வடவேங்கடமென்று பன்முறை கூறி வந்திருக்கிறோம். ஆந்திரர்களோ ஒரு சமயம் சென்னை முழுவதும் வேண்டுமென்கிறார்கள். மற்றொரு சமயம் ஆளுக்குப் பாதியாகப் பங்குபோட்டுக்கொள்ளலாமென்கிறார்கள். இப்பொழுது இரு சாராருக்கும் பொதுவாக விருக்கவேண்டுமென்கிறார்கள். எதற்காகப் பொதுவாக விருக்கவேண்டும்?

ஆந்திரர்களுக்கு ஆதாரமிருப்பின், சென்னையையோ, செங்கற்பட்டையோ சேர்த்துக் கொண்டு ஆளட்டுமே. ஆதாரமில்லாமல் பொதுவாக இருக்கட்டுமென்று கூறினல், எப்படிப் பொருந்தும்? சரித்திர ஆதாரங்களுடன் தமி

ழர்களுக்கும், ஆந்திரர்களுக்கும் பொதுவாக விருக்கவேண்டிய இடம், வட பெண்ணைக்கு வடக்கேயும், கிருஷ்ணா நதிக்குத் தெற்கேயுமுள்ள நாடுகள் ஆகும். இதைக் கவனிக்காமல் தமிழர்களுடைய சொந்த சொத்தைப் பொதுவாக இருக்க வேண்டுமென்றால், தமிழரில் யாரே இசைவர்?

சிதம்பரத்தில் ஸ்ரீ புலுசு சாம்பமூர்த்தி பேசும் பொழுது "ஆந்திர மாகாணப் பிரிவினையைத் தமிழ் நாட்டிலுள்ள தமிழர்கள் எதிர்க்கவில்லை; தமிழ் நாட்டிலுள்ள ஆந்திரர்கள் தான் எதிர்க்கின்றார்கள்'' என்று கூறினார். இது உண்மையல்ல. மாகாணப் பிரிவினையை ஒருவரும் ஆட்சேபிக்கவில்லை. ஆட்சேபணை யெல்லாம் எல்லைப் பிரிவினையில் தானிக்கிறது. ஆந்திர தேசத் தலைவர்கள் தமிழர்களுடைய எல்லை வட வேங்கடம் வரையில் இருக்கிறதெனும் சரித்திர உண்மையை ஒப்புக்கொள்ளுவதே நலமும் கண்ணிய முமாகும்.

ஆந்திர தேசத் தலைவர்களுக்குத் தேவையுள்ள நகரங்கள் சென்னை, செங்கல்பட்டு, சித்தூர். சந்திரகிரியை ஆண்ட யாரோ ஓர் அரசன் சென்னைப் பட்டினக் கடற் கரை யோரத்தில் ஒரு குழி நிலத்தைக் கிழக்கு இந்திய கம்பெனிக்குச் சொந்தக்காரர்களானவெள்ளையர்களுக்குக்கொடுத்துவிட்டானெனும் உரிமை ஒன்றினை வைத்துக் கொண்டு சென்னை பட்டினம் முழுமையையுமோ அல்லது பாதியையோவேண்டுமென்கிறார்கள். இதற்குவேண்டிய "ஆதாரங்களை'' ஸ்ரீ வி. ராமதாஸ் பந்துலுவால் எழுதப்பட்ட ஆந்திர மாகாணப் பிரிவினை

யாதாஸ்தில் காட்டுகிறார்கள். இந்த ஆதாரங்களைக் காண்பிக்க வேண்டிய பொறுப்புகளை எடுத்துக் கொண்டார்களே யொழிய, ஆதாரங்களை நிரூபிக்கவோ அல்லது நிர்மாணிக்கவோ முற்பட்டார்களல்லர்.

ஆந்திர நாட்டோடு இணைக்க ஆதாரமின்றி யிருக்கும் சென்னையைச் சேர்த்துக்கொள்ள முயற்சிக்கின்றவர்கள், ஆந்திரர்களுக்குச் சொந்தமானதும் பூர்விகமானதுமான பல்லாரியை ஏன் கை நழுவவிட்டுவிட்டார்கள்? ஆந்திர மாகாண பிரிவினை யாதாஸ்தின் மூன்றாம் பக்கத்தில் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்திற்கும், ஜஸ்டிஸ் கட்சிக்கும் பொப்பிலி ராஜா தலைவராயிருந்த காலத்தில் அதாவது 1938-வது ஆண்டு அக்டோபர் மாதம் 14-ந் தேதியில் பாஷா வாரி மாகாணம் வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றியிருப்பதாகவும், கன்னட பாஷா மாகாணம் தனியாக ஸ்தாபிக்கும் வரையில் தென் கன்னட ஜில்லாவையும், பல்லாரி ஜில்லாவையும் பம்பாய் ராஜாதானியோடு இணைத்து விட வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தென் கன்னட ஜில்லாவுக்கு ஆந்திர தேசத் தலைவர்களின் உபதேசம் அவசியமில்லை என்றே கருதுகிறோம். ஆந்திர தேசத் தலைவர்களைவிடக் கன்னடர்களுக்குத் தங்கள் நாட்டின்

மீது அதிக பற்றுதலிருக்கும். ஆகவே, தங்கள் நாடு தனித்திருக்க வேண்டுமோ அல்லது பம்பாய் மாகாணத்தோடு சேர்ந்திருக்க வேண்டுமோ என்பதைக் கன்னடர்கள் தீர்மானிக்க வேண்டுமே யல்லாது, ஆந்திரர்கள் தீர்மானிக்க வேண்டிய வேலை அல்ல.

24. கன்னடம் பற்றிக் கருத்து மாறுவானேன்?

தென் கன்னடத்தைக் குறித்து நாமும் பேச வேண்டிய அவசியமில்லை. அவர்களுக்கு விருப்பமிருப்பின், பம்பாய் மாகாணத்தோடோ அல்லது ஆந்திர தேசத்தோடோ சேர்ந்து கொள்ளட்டும். இல்லாவிடில், தனி மாகாணமாக வேண்டுமானாலும் ஸ்தாபித்துக்கொள்ளட்டும். இவ்விஷயம் கன்னடர்களைப் பொறுத்ததாகும். பல்லாரி ஜில்லாவில் பெரும்பான்மையோர் கன்னட பாஷைக்காரார்களாயிருப்பதால், அந்த ஜில்லா கன்னட தேசத்தோடோ அல்லது பம்பாய் மாகாணத்தோடோ சோந்து கொள்ளட்டு மென்று கூறும் ஆந்திர தேசத் தலைவர்கள், செங்கல்பட்டையும், சென்னையையும் ஏன் அவ்வாறு கூறவில்லை? செங்கல்பட்டு ஜில்லா மொத்த ஜனத் தொகை 16,55,115. இதில் தமிழர்கள் 12,90,67. தெலுங்கர்கள் 3,19,946 பேர்களிருக்கின்றார்கள். பல்லாரி ஜில்லா

விஷயத்தில் ஏற்பட்ட உண்மை, செங்கல்பட்டு ஜில்லா விஷயத்தில் மட்டும் மறைந்தது போலும்! பதினுறரை லட்சம் கொண்ட மொத்த ஜனத் தொகையில் 12,90,877 பேர் தமிழர்களுள்ள செங்கல்பட்டு ஜில்லாவை ஆந்திர தேசத்தோடு இணைத்துக் கொள்ள நினைப்பது எவ்விதத்தில் நியாயமாகும்? அடித்தபடி சென்னையில் 6,48,230 பேர். இதில் தமிழர்கள் 4,11,823. தெலுங்கர்கள் 1,24,649 பேர்கள். இங்கும் பெரும்பான்மையோர் தமிழர்களன்றித் தெலுங்கர்களல்ல. எனவே, பல்லாரி ஜில்லா வேண்டாமென்பதற்கு என்ன காரணம் உண்டோ அதே காரணம் சென்னைக்கும், செங்கல்பட்டுக்கும் பொருந்தாதா என்று கேட்கின்ரும்.

ஆந்திரர்களின் நிலைமையைக் கண்டு நாம் இரங்க வேண்டியிருக்கிறது. வட கிழக்கேயுள்ள கஞ்சம் ஜில்லாவை ஒரியாக்காரர்களிடமும், வட மேற்கிலுள்ள புராதன ஆந்திர தேசத்தையும், அதன் தலைநகரான வாரங்கலையும் முஸ்லிம்களிடமும் மேற்கேயுள்ள பல்லாரிஜில்லாவைக் கன்னடக்காரர்களிடமும் கைசோர விட்டு இங்குத் தமிழர்களின் மனக்கசப்பைக் கொள்வானேன்? இழந்த இடங்களைப் பிடிக்கும் வேலையில் இறங்குவதே நேர்மை ஆகும். பல்லாரி ஜில்லாவில் 1931-வது ஆண்டு எடுத்த சென்ஸஸ் கணக்குப்படி ஜனத் தொகை பின்வருமாறு:—

கன்னடம்	5,33,538
தெலுங்கு	3,05,775
ஹிந்துஸ்தானி	87,344
லம்பாடி	14,762
மராத்தி	11,350
தமிழ்	9870
குறவர்	2683
மலையாளம்	1731
ஹிந்தி	738
மார்வாரி	553
ஆங்கிலம்	530
குஜராத்தி	271
ஒரியா	273
சௌராஷ்டிரம்	15
மற்ற பாஷைகள்	341
மொத்தம்	9,69,774

இந்த ஜனசங்கியைக் கணக்குப்படி ஆந்திரர்கள் தங்கள் நாட்டைக் கன்னடக்காரர்களிடம் ஒப்படைக்கத் தயாரா யிருக்கும்பொழுது, செங்கல்பட்டு ஜில்லாவையும் சென்னையையும் தமிழர்களிடம் விட்டுவிட ஏன் இணங்கவில்லை? பல்லாரியிலுள்ள கன்னடர்கள் ஜனத்தொகையில் பாதிக்கு மேலிருக்கும் ஆந்திரர்களைப் பற்றியோ, அந்த நாட்டைப் பற்றியோ கவலை கொள்ளாமல், தமிழர்களுடைய ஜனத்தொகையில் நாலில் ஒரு பங்கு தெலுங்கர்கள் இருக்கும் செங்கல்பட்டைப் பற்றி

யும் சென்னையைப் பற்றியும் ஆந்திரத் தலைவர்கள் பேசுவது வீண் செயலே.

ஒரியா	11.94,337
தெலுங்கு	89,73,78
ஹிந்துஸ்தானி	5.530
தமிழர்	481
கன்னடம்	75
மலையாளம்	28
மற்ற பாஷைகள்	3,13,790
மொத்தம்	24,11,619

பல்லாரி ஜில்லாவில் ஒரியாக்காரர்களின் ஜனத் தொகையில் சுமார் மூன்றில் இரண்டு பங்கு தெலுங்கர்களிருந்தும் அதை ஆந்திர நாட்டோடு இணைத்துக்கொள்ள ஆந்திர தேசத் தலைவர்கள் விரும்பவில்லை. காரணம் என்னையோ?

பல்லாரியில் ஆட்சி செலுத்தியவர்கள் கன்னடரா அல்லது ஆந்திரரா என்று ஏன் ஆராய்ந்து பார்க்கக் கூடாது? சென்னையை ஆக்கிரமிக்க ஆராய்ச்சி செய்கிறவர்கள் ஒரு சிறிதும் ஆராயாமலேயே பல்லாரியைக் கன்னடர்களிடம் ஒப்படைத்து விடத் தயாராக இருக்கின்றார்கள். ஆகவே, இந்த எண்ணம், ஆந்திரர்களுக்கு எழக் காரணம் யாது என்பதை வாசகர்கள் உணர்தல் வேண்டும்.

பல்லாரி ஜில்லாவானது, விஜயநகர ஆட்சியின் கீழிருந்தது. விஜயநகரத்தில் செங்கோல்

செலுத்தியவன் கிருஷ்ணதேவராயன். இவன் ஆட்சியின் கீழ்ச் சிற்றரசனாக இருந்தவன் திம்மப்பன். இந்தத் திம்மப்பனே பல்லாரி ஜில்லாவில் சிற்றரசனாக விருந்தான். விஜயநகர அரசனான கிருஷ்ண ராயனுக்குக் கப்பமும் செலுத்தி வந்தான். ஆண்டு ஒன்றுக்குக் கப்பம் செலுத்திய தொகையின் மதிப்பு ரூபா ஆயிரமாகும். பல்லாரி ஜில்லாவின் சிற்றரசனான திம்மப்பனும் இவன் மகன் ரங்கப்பனும் பல ஆண்டுகள் வரை ஆண்டு வந்தார்கள். பல்லாரி ஜில்லா ஆதோனி தாலூகாவிலுள்ள கோட்டையும் திம்மப்பனால் கட்டப்பட்டது. கி. பி. 150-ம் ஆண்டில் ஆந்திரர்கள் ஆட்சியிருந்ததாக இங்குஒரு கல்வெட்டிருக்கிறது. அநேக விஷ்ணு ஆலயங்கள், சிவ ஆலயங்கள், சைன ஆலயங்கள், சரஸ்வதி ஆலயங்கள், மண்டபங்கள் முதலியன, இருக்கின்றன. மன்னரின் ஸ்நான கட்டம், மகராணியின் ஸ்நான கட்டம், முதலியனவும் வேற்றசர்கள் படையெடுத்து வந்தால் கண்காணிக்கக கோபுரங்களு மிருக்கின்றன. இவையெல்லாம் ஆந்திர அரசர்களால் கட்டப்பட்டனவாகும். இவற்றை யெல்லாம் ஆந்திரர்கள் அறிவார்களா?

25. ஆந்திர நாட்டில் குழப்பம்

1565-ம் ஆண்டு, ஜனவரி மாதம், 23-ந் தேதி தலைக் கோட்டை யுத்தத்தில் விஜய நகர ஆட்சி மூறிந்து, பிஜப்பூர் முஸ்லிம் ஆட்சி முளைத்தது. பல்லாரி, முஸ்லிம்களின் ஆடசிக்குட்பட்டது. ரங்கப்ப நாயக்கன் ஆட்சிக்குப் பின்னர் ஆண்ட அர

சர்களெல்லாரும் சுயேச்சையாக ஆண்டார்கள். கம்பிலி என்னும் இடத்தில் போர் நடந்தது. இந்தப் போரில் விஜய நகர வீரர்கள் ரங்கப்பாவின் பேரனை ஹனுமப்பாவுக்கு உதவி செய்தனர். இந்த உதவிக்குப் பிரதி பயனாக விஜயநகர வீரர்கள் காணிக்கை கேட்டனர். 1650-ம் ஆண்டு ஹனுமப்பாபடையெடுத்துக் கொண்டுபோய் அவர்களைத் தோற்கடித்தான். பிறகு ஒரு நூற்றாண்டு வரையில் பல்லாரி அரசர்களுக்குள் குழப்பமும் கூச்சலுமாகவே யிருந்தன. அங்குள்ளவர்கள் தாங்கள் தான் இந்த ஜில்லாவின் மன்னர் பரம்பரை என்று பெருமையடித்துக் கொள்கிறார்கள். இவர்களின் பெருமையைச் சிறுமையாக்கக் கன்னடர்களிடம், இந்தத் தெலுங்கர்களை ஒப்படைக்க முயற்சிக்கின்றார்கள் ஆந்திர தேசத் தலைவர்கள்.

விஜயநகர மன்னர் ஆட்சியை வீழ்த்தியவர்கள் பிஜப்பூர் முஸ்லிம்கள். விஜயநகர மன்னர் தோல்வி யுற்றவுடன் அவரிடம் சிற்றரசர்களாக இருந்தவர்கள், சுயேச்சை அரசர்களாகிவிட்டனர். இவ்வாறு சுயேச்சை மன்னனாக ஆனவரே ரங்கப்பன் நாய்க்கன் முதல் ஹனுமப்பன் நாய்க்கன் வரையாகும். தனக்கு உதவி செய்த விஜய நகர வீரர்களையும் ஹனுமப்பன் வீழ்த்திவிட்டானாயினும் பிறகு பல்லாரின் பெரும்பாகம் நைஜாமுக்குக் கிடைத்து விட்டது. ஆட்சிகள் தலைகீழாக மாறியதால் பல்லாரி பாளையக்காரர் சில ஆண்டுகள் கப்பம் கட்டவில்லை. 1769-ம் ஆண்டில் பாசலட்ஜாங் சப்பாஜாங்கும் புஸ்ஸியும் கப்பம் வசூலிக்கப் பல்லாரிக்கு வந்ததும் பாளையக்காரர்

ஐதர் அலியின் உதவியை நாடினார். ஐதர் அலி தனது படைகளுடன் வந்து பாசலட் ஜாங் கோடும் அவனது படைகளோடும் கடும் போரிட்டான். ஐதர் அலிக்கும் பாசலட் ஜாங்குக்கும் நடக்கும் சண்டையைப் பாளையக்காரரின் தலைவனை தொட்டப்ப நாய்க்கன் ஒரு மலை உச்சியிலிருந்து பார்த்தான். பார்த்த தொட்டப்ப நாய்க்கன் நடுநடுங்கி அன்றிரவே ஷோலாப்பூருக்கு ஓடி விட்டான். சண்டை முடிந்தது. பாசலட் ஜாங்கு தோல்வியுற்றான். ஐதர் அலி நாட்டைப் பிடித்துக் கொண்டான். பிறகு ஐதர் அலி பிரெஞ்சுக்காரர்களின் நட்பைப்பெற்றுப் பல கோட்டைகளைப் பலப் படுத்தினன். பல்லாரி ஐதர் அலி வசத்திலும் அவனுடைய மகன் வம்சத்திலும் 1782-ம் ஆண்டு வரையிருந்தது. பிறகு நடந்த பிரிவினை உடன்படிக் கைப்படி நைஜாம் ஆட்சிக்குட்பட்டது. பல்லாரி, 1769-ம் ஆண்டு வரையில் ஆந்திரர்களிடமும் பிறகு முஸ்லிம்களிடமும் இருந்தது. இப்பொழுது வெள்ளையர்களிடமிருக்கிறது. ஆந்திர மாகாணப் பிரிவினை கிடைத்த உடன் பல்லாரியைக் கன்னடர்களுக்குக் கொடுத்து விட்டுத் தமிழ் நாட்டில் பங்கு வேண்டுமென்கின்றனர் போலும்!

பல ஆண்டுகள் சிற்றரசர்களாயிருந்து கப்பம் செலுத்தி வந்த திம்பப்ப நாய்க்கனே அவனுடைய சந்ததியார்களோ தலைவனுக்கு ஆபத்து வந்திருக்கும் பொழுது உதவிக்குப் போனார்களில்லை. தலைமை ஆட்சி வீழ்ச்சியடைந்தால், தாங்களே அரசர்களா யிருந்து செங்கோல் செலுத்தலாமென்ற எண்ணம் சிற்றரசர்களுக்கு இருந்தது.

விஜயநகர மன்னரைப் பிஜப்பூர் முஸ்லிம்கள் எதிர்த்துப் போரிடும் பொழுது, ஒரு சிற்றரசரும் உதவிக்குப் போகவில்லை. விஜயநகர ஆட்சி முறிந்ததும் சிற்றரசர்களெல்லாரும் சுயேச்சை அரசர்களானார்கள். சில ஆண்டுகளுக்குப் பின்னர், இந்த சிற்றரசர்களை முஸ்லிம்கள் வென்று விட்டார்கள். பாளையக்கார அரசர்கள் முஸ்லிம்களுக்குக் கப்பம் செலுத்தவில்லை. கப்பம் கேட்க வந்த பாசலட் ஜாங்கைத் தோற்கடிக்கப் பாளையக்காரனை தொட்டப்ப நாய்க்கனால் முடியவில்லை. ஐதர் அலியிடம் ஓடினான். ஐதர் அலி வந்ததும் தொட்டப்பநாயக்கன் எதிரியோடு போர் புரியாமல், மலை மீது மறைந்து பார்த்து ஓடி விட்டான். தலைவன் தொட்டப்ப நாய்க்கன் ஓடிவிட்டதும் ஐதர் அலி ராஜாவானான்.

26. எல்லையை மாற்ற எவரால் ஆகும்?

இன்று நமக்கு எல்லையைப் பிரித்துக்கொடுக்க "பவுண்டரிக் கமிஷன்" வேண்டுமென்று கூறுகிறோம். ஆனால், கம்பரோ நான்கு நாடுகளுக்கும் எல்லையைப் பிரித்து கொடுத்ததைக் கவனிப்போம். சேர, சோழ, பாண்டிய, தொண்டை நாடுகளுக்கு முறையே அதனதன் நிலப்பரப்பையும், எல்லையையும் வெகு அழகாக நான்கு செய்யுளில் எடுத்துக் கூறியிருக்கின்றார். "மேற்குப் பவளமலை வேங்கடம் நேர் வடக்காம்" என்ற செய்யுளிலேயே நிலப் பரப்பு இருபது காதம் என்று மொழிந்துள்ளதை நோக்குங்கள். தமிழ்நாட்டில் தமிழ்ப்பற்றும், நாட்டுப் பற்றுமுள்ளவர்கள் யார்? நமக்குத் தொல்காப்பியரைவிட, பனம்பாரனாரைவிட, நச்சினார்க்கினி

யரைவிடக், இளங்கோவடிகளைவிடப், ஔவையாரை விட, கம்பரைவிட, பவணந்தி முனிவரைவிட எல்லை இதுதான் என்று மற்றையோர் கூறித் தெரிந்து கொள்ளும் நிலைமையில் நாம இன்றில்லை. கம்பர் ஒரு சமயம் கடம்பத்தூர் கிராமத்தின் அருகிலுள்ள கூவம் என்னும் கிராமத்தின் வழியாகப் போனர். கம்பர் வருவதைக் கண்ட வேளாளர்கள் அவரை வரவேற்று நன்கு உபசரித்தனர். பிறகு, வேளாளர்கள் தங்களைப் பற்றிப் பாடும்படி கம்பரை வேண்டினர்கள்.

"ஓங்கிய செந்தமிழ்த் தாதற்கடிமை யவ்வூர தனு
னுங்கவி சொல்லுவதுமில்லை யென்றே கம்பநாடன் சொல்ல
ஆங்கவ னேறுஞ் சிவிகை சுமந்து மடப்பை யிட்டும்
தாங்கவி கொண்டதுங் கூவம்தியாக சமுத்திரமே',

என்ருர் கம்பர். தாதன் என்பவன் கி. பி. 1070 முதல் 1118 வரை சோழநாட்டை ஆட்சிசெலுத்தி வந்த குலோத்துங்க சோழனின் அவைக்களஞ் சென்ருன்; தமிழறிவிற் சிறந்து விளங்கிய மன்னனைச் சிறப்பித்துப் பாடினன். பாடிய தாதனின் கவியிலுள்ளபொருளுக்குமனங்களித்துக் கூவத்தை இனமாக அளித்துப் பெருமைப்படுத்தினன் சோழன். இனமாகப் பெற்ற ஊராயிருந்தபோதிலும் அக் கிராமத்திலுள்ள மக்கள் சுதந்திரமின்றி அடிமைகளாக வாழ்ந்துவந்ததால் அதனைப் பாடக் கம்பர் விரும்பவில்லை. வேளாளர்களும் கம்பரை விடவில்லை. சிவிகை சுமந்து சென்றனர். பின்னர் தான் மேற்சொன்ன கவியைப் பாடிச்சென்ருர்.

கம்பன் சோழ தேச மன்னனை விட்டு நைஜாம் சமஸ்தானத்திலிருக்கும், வாரங்கல் நாட்டுக்குச் சென்றார். அக்காலத்தில் வராங்கல் தேசம் பிர தாப ருத்ரனால் ஆளப்பட்டு வந்தது. பிரதாப ருத்ர னின் சிறப்பைக் கேள்விப்பட்டுச் சென்றார். தமது கல்வி மாட்சியால் அவ்வேந்தனையும் தம் வயப் படுத்திக் கொண்டார். அரசனும் கம்பனின் திறமை யைக் கண்டு வியந்தான். கம்பர் பிரதாப ருத்ரனுக் குத் தமது இராமாயணத்திலுள்ள நயங்களை எடுத் துக்கூற மன்னன் மனமகிழ்ந்தான். கம்பரையே ஆசிரியராகவும் கொண்டான். சோழனின் குணங் களைக்கூறிச் சோழநாட்டுக்குப் போகப் பிரதாப ருத்ரனைத் தூண்டினார் கம்பர்.

கம்பரின் கல்விக்குப் பிரதாபருத்ரன் அடி மைப்பட்டான். கம்பர் சொல்லும் பணிகளைத் தாயே செவ்வனே செய்து வந்தான். கம்பர் சோழ நாட்டுக்கு வரும்பொழுது ஆந்திரதேச மன்னனான பிரதாபருத்ரன் கம்பருக்குப்பின்னால் அடைப்பை கட்டிக்கொண்டு வந்தான். கம்பரைச் சோழ மன் னன் முன்னிலும் மதித்துப்போற்றினான். இச் செய் தியை ஆந்திரர்கள் ஒப்புக்கொண்டாலும் ஒப்புக் கொள்ளாவிட்டாலும் இது சரித்திர உண்மை. கம் பர் பிரதாப ருத்ரனிடத்துப் போனதும் அவன் அடைப்பை கட்டிப் பின் வந்ததுமான செய்தி கொண்ட வெண்பா பின்வருமாறு :

"அவனி முழுதாண்டு மயிரா வதத்துள்
பவனி தொழுவார் படுத்தும்-புவனி
யுருத்திரா உன்னுடைய வாரங்க னாட்டிற்
குருத்திரா வாழைக் குழாம்

கம்பருக்கு அடைப்பக்காரனாக இருந்தது போல நாம் ஆந்திர நண்பர்களை இருக்கும்படிக் கூறவில்லை. அவர்களுக்குரிய நாட்டில் அவர்கள் சுயேச்சையாளர்களாகவும் நமக்குரிய தமிழ்நாட்டில்—வட வேங்கடம் வரையில் நாம் சுயேச்சையாளர்களாகவும் வாழ்வோம் என்றுதான் கூறுகிறோம்.

27. கலிங்கம் கொண்ட தமிழ் மன்னன்

ஆந்திரர்கள் சென்னை வரையில் தங்களுக்கு வேண்டுமென்று கேட்டால், தமிழர்கள் கலிங்கம் வரையில் வேண்டுமென்று கேட்பார்கள். ஆந்திரர்களைப் போலத் தமிழர் ஆதாரமின்றிக் கேட்கவில்லை. கலிங்கம் தமிழர்களைச் சேர்ந்ததென்பதற்கு ஆதாரமுள்ளது. கலிங்க தேசம் இப்போது கோதாவரி நதிக்கு வட கிழக்கேயுள்ள வட சர்க்கார் என்று கூறப்படும் பிரதேசத்தி லுள்ளது. தற்கால பூகோள சாஸ்திரப்படி பார்த்தால், வட சர்க்கார் ஜில்லாக்கள் கஞ்சம், விசாகப்பட்டணம், மேற்குக், கிழக்குக் கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர் முதலியவை யாகும். கவிச்சக்கரவர்த்தி ஜெயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப் பரணியின்படி பார்த்தால், கீழ்க் கோதாவரி, விசாகப்பட்டணம், கஞ்சம் ஆகிய மூன்று ஜில்லாக்களையும் கலிங்க தேசமென்று கூறலாம். கலிங்க தேசத்தைத் தமிழ் மன்னனான கருணாகரன் என்பவன் வென்றான். இவன் கலிங்க தேசம் சென்று வாகை சூடியதற்கு அடையாளமாகப் "பரணி" என்னும் நூல் பாடப்பட்டது. இவ்வாறு ஆந்திர மன்னர்கள் யாராவது, தொண்டை நாட்டின் மீது படை எடுத்து வந்து

வெற்றி பெற்றதுண்டா? அப்படி வெற்றி பெற்றிருப்பதாக ஆந்திர கவிகள் பாடியுள்ளனரா? கருணாகரன் யார் என்பதைச் சற்று ஆராய்வோம்.

கருணாகரன் தமிழ் மன்னனென்பதை நாம் சொல்ல வேண்டுவதில்லை. கருணாகரன் பல்லவனென்பதும் பல்லவர்க்கு வன்னியர் என்னும்பட்டப் பெயர் உண்டு என்பதும் புராணங்கள் வாயிலாக நன்கு அறிகிறோம். "தொண்டை நன்னாடு புரக்கின்ற கோனந்தித் தோன்றலெங்கள் வண்டையர் கோனங் கருணாகரன் றொண்டை மண்டலமே" என்று தொண்டை மண்டல சதகத்தில் 92-வது செய்யுளில் கூறப்பட்டுள்ளது. கருணாகரன் தொண்டை நன்னாட்டில் வண்டைமா நகரில் தோன்றினான் என்பதற்கு மேலே குறிப்பிடப்பட்ட செய்யுளே போதிய சான்றாகும் அன்றோ? 'மறைந்த...... கருணாகரத் தொண்டை வன்னியனே" என்று கருணாகர வன்னியனார் சதகத்தில் பாடப்பட்டிருப்பதிலிருந்து கருணாகரன் வன்னியன் என்பது தெளிவாகின்றது. இவன் பிறந்த வண்டை நகர் வந்தவாசி தாலூகாவி லிருக்கிறது. இம் மன்னன் கங்கை கொண்ட சோழபுரத்தைத் தலைநகராகக் கொண்டு, கி. பி. 1070 முதல் 1119 வரை ஆட்சி செலுத்தி வந்தான். வந்தவாசியில் இவன் காலத்தில் கட்டப்பட்ட கோட்டை யொன்று இன்றும் இருக்கிறது.

கருணாகரன் கலிங்கத்தை எவ்வாறு வென்றான் என்பதைச் சிறிது ஆராய்வோம். இவன் காஞ்சிமா நகரை யடைந்து பட்டத்து அரசியான தியாகவல்லியுடன் அரியாசனத்தில் வீற்றிருக்கையில், பல நாடுகளிலிருந்து மன்னர் பலர் திறை கொணர்ந்து செலுத்தினர். திறை கொணர்ந்து செலுத்தாத மன்னர்கள் உண்டோவென்று வினவினான் கருணாகரன். அப்பொழுது கலிங்கதேசத்தை ஆண்டு வந்தவன் சோட கங்கன் என்னும் சிற்றரசன். சோட கங்கன் தொண்டை நாட்டு மன்னனான கருணாகரனுக்குக் கப்பம் செலுத்தி வந்தவன். ஆனால், சில ஆண்டுகள் இவன் கப்பம் செலுத்தவில்லையென்பது தமிழரசனுக்குத் தெரியவந்தது; சீற்றங் கொண்டான். கலிங்க தேசத்துச் சோடகங்கன்மீது படையெடுத்துச் சென்று அவனைத் தோற்கடித்தான்; அவனது ஆயிரம் மத யானைகளையும், விலையுயர்ந்த பொருள்களையும் கைப்பற்றிச் சோடகங்கனையும் சிறைப்பிடித்தான்.

இதை ஜெயங் கொண்டார் கலிங்கத்துப் பரணியில் பாடியிருக்கிறார். ஆகவே, கலிங்கநாடு, சோடகங்கன் ஆட்சிக்கு முன்னும் பின்னும் தமிழ் மன்னர் ஆட்சிக்கு உட்பட்டுக் கிடந்தது என்பது பெறப்படுகின்றது அன்றோ? தமிழ் நாடு முதல் கலிங்கநாடு வரையில் தமிழ் மன்னர்களின் ஆட்சி, கி. பி. 1118-ம் ஆண்டு வரையிலிருந்ததாகச் சிலாசாஸன நிபுணர்களும்

கண்டுபிடித்திருக்கின்றார்கள். மேலும் "தரணி கவர்ந்து தமிழ் வேந்தர் பாடும் பரணி புனைந்த பகடு" என்ற சோழனுலா அடிகளிலிருந்தும் அறியலாம். கஞ்சம் ஜில்லா கடற்கரை யோரத்தில் கலிங்க பட்டினம் இன்றுமிருக்கக் காணலாம்.

28. தமிழரும் ஆந்திரரும்

தமிழர்களுடைய சிறப்பியல்புகளைப் பலபடக் கண்டோம். இப்போது அத்தகைய தமிழர்கள் ஆந்திர நாட்டில் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்பதையும் தமிழ் நாட்டில் தெலுங்கர்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்களென்பதையும் சிறிது கவனித்தல் அவசியமாகும். இந்தியா பூராவும் ஹைதராபாத் சமஸ்தானம் உள்பட ஆந்திரர்கள் ஜனத்தொகை 2,63,73,727. அவ்வாறே தமிழர்களுடைய ஜனத்தொகை இந்தியா முழுமைக்கும் எடுத்துக்கொண்டால் 2,04,12,652 பேராவர். இந்த 2,04,12,652 பேர் ஜனத்தொகையில் தாய் நாடான தமிழ்நாட்டிலேயே யிருப்பவர்கள் 1,80,61,939 பேராவர். ஜனத்தொகை மொத்தம் 2,63,73,727 பேர். இதில் தாய்நாடான ஆந்திர நாட்டிலேயே இருப்பவர் 14,77 68,59 பேராவர். ஆகவே. ஆந்திர ஜனத்தொகையில் சரிபாதிக்குச் சற்றுக் குறைந்த பேர் வெளிநாடுகளில் வாழ்கின்றனர். ஆனால் தமிழர்களோ அவ்வாறு வாழ்ந்தவரல்லர். தமிழர்களுடைய மொத்த ஜனத்தொகையில் பத்தில் ஒரு பங்கு பேரே வெளிநாடுகளில் வாழ்கின்றனர். பதினான்கு பேர்க்குரிய இடத்தில் இருபத்தாறு பேர் வசிப்பது கஷ்டமே. ஆனால், பதினெட்டுப் பேர்கள் வசிக்குமிடத்தில் இருபது பேர் வசிப்பது

கஷ்டமிராது என்பது ஆந்திரர்களுக்குத் தெரியாது போலும்! எவர் வந்தாலும் வரவேற்கும் இயல்புடையோர் தமிழர். ஆனால், அவர்களை ஆதிக்கம் செலுத்த எண்ணினால், அவர்கள் ஒருபோதும் ஒருப்படார் என்பது திண்ணம்.

வடக்கே ராயல சீமையிலுள்ள ஆந்திரர்கள் மாகாணப் பிரிவினைக்குச் சம்மதிக்கவில்லை. சித்தூர் ஜில்லா வாசிகள், தமிழ் நாட்டோடு சேரப் பிரியப்படுகிறார்கள். திருத்தணியிலுள்ளவர்களும், காளாஹஸ்தியிலுள்ளவர்களும் ஆந்திரதேசத்தோடு சேரவேண்டுமெனக் கனவிலும் கருதமாட்டார்கள். பெரும்பாலான தெலுங்கர்களுக்கு மாகாணப் பிரிவினையில் நோக்கமே கிடையாது. தமிழர்களுக்கு எந்தத் தெலுங்கு ஜில்லாக்களிலும் பொது சபைகளில் பிரதிநிதித்துவமே கிடையாது. ஆனால், இங்கோ தமிழர்கள் ஒவ்வொரு ஜில்லா போர்டுகளிலும், முனிசிபாலிடிகளிலும், பஞ்சாயத்து போர்டுகளிலும் தெலுங்கர்களுக்குச் சரியான பிரதிநித்துவம் கொடுத்து வருகிறார்கள். இந்தப் பிரதிநிதித்துவம இன்று நேற்று ஏற்பட்டதல்ல அல்லது ஆந்திரர்களின் ஆரவாரத்திற்காகவுமல்ல. தொன்று தொட்டு வரும் தமிழர்களுக்கும் தெலுங்கர்களுக்கும் இருந்துவரும் சகோதர அன்பே காரணமாகும்.

தற்காலம் நாடு இருக்கின்ற நிலைமையையும், காங்கிரஸ் தலைவர்களுக்குள்ள பொறுப்பையும் ஒவ்

வொருவரும் கவனிக்க வேண்டும். ஆனல் தேச விடுதலையைவிடத் தமிழர்களிடமிருந்து விடுதலைபெற்றுவிட்டால், சுயராஜ்யம் கிடைத்துவிட்டமாதிரி என்று சில ஆந்திர நண்பர்கள் நினைக்கின்றனர்.

இப்பொழுது ஆந்திர தேசத்திலுள்ள தமிழர்கள் எத்தனை பேர்? தமிழ் ஜில்லாக்களிலுள்ள தெலுங்கர் எத்தனை பேர் என்பதைக் கவனிக்க வேண்டுவது அவசியமாகின்றது. சென்னை மாகாணத்திலுள்ள ஜில்லாக்களில் மலையாளத்தையும், தென் கன்னடத்தையும் நீக்கிவிட்டால், மீதமிருப்பது இருபத்து நான்கு ஜில்லாக்களாகும். அவைகளுள் 1, கஞ்சம், 2. விசாகப்பட்டணம், 3. கீழ்க் கோதவரி, 4. மேல் கோதாவரி, 5. கிருஷ்ணை, 6. குண்டூர், 7. நெல்லூர், 8. கடப்பை, 9. கர்நூல், 10. பல்லாரி. 11. அனந்தபூர், 12. சித்தூர் முதலியன ஆந்திர ஜில்லாக்களாகும். இதில் சித்தூர் ஜில்லா புதிதாக ஆங்கிலேயர்க்ள் ஆட்சிக்கு அனுகூலமாகச் சிருஷ்டிக்கப்பட்டது. இவர்களின் சிருஷ்டிக்குமுன்னர் எப்படியிருந்ததோ அவ்வாறே பாதிதாலூகாக்களை வட ஆற்காடு ஜில்லாவோடும் மற்ற பாதியைக் கடப்பை ஜில்லாவோடும் சேர்த்து விட்டால், நமது எல்லைப்படி வடவேங்கடம் வரையில் தமிழ்நாடாகிவிடும். மற்ற ஜில்லாக்களிலிருக்கும் தமிழர்களின் ஜனத் தொகையையும், சித்தூர் ஜில்லாவிலிருக்கும் தமிழர்களின் ஜனத்தொகையையும், ஒப்பிட்டுப் பார்த்தால், நாம் கூறுவதன் உண்மை விளங்கும்.

ஆந்திர தேசத்திலுள்ள தமிழர்களும் ஆந்திரர்களும்:

	தமிழர்கள்	ஆந்திரர்கள்
1. கஞ்சம்	481	897,378
2. விசாகப்பட்டணம்	2,621	25,09,535
3. கீழ்க் கோதாவரி	2 235	18,38,109
4. மேல் கோதாவரி	1,154	11,95 296
5. கிருஷ்ணு	3,178	12,84,245
6. குண்டூர்	3,409	18,77.144
7. நெல்லூர்	26 274	13,63,578
8. கடப்பை	2 310	8,36,124
9. கர்நூல்	2,289	8,74,878
10. பல்லாரி	9,870	3,05,775
11. அனந்தபூர்	3,978	8,37,267
12. சித்தூர்	2,79,521	10,62,529
	3,37,320	147,76,859

இந்த ஜனத் தொகை, சென்னை சர்க்காரால் 1931-வது ஆண்டு எடுத்த சென்ஸஸ் கணக்குப்படி பிரசுரிக்கப்பட்டுள்ளது. சித்தூர் ஜில்லாவிலும் தமிழர்களின் ஜனத் தொகை மற்ற ஜில்லாக்களை விட அதிகமாயிருப்பதால், ஒரு காலத்தில் இவ்விரண்டு ஜில்லாக்களும் தமிழ் நாட்டோடு சேர்ந்து சேர்ந்திருந்தன வென்பது நன்கு விளங்குகின்றதன்றோ?

தெலுங்கு ஜில்லாக்களில் தமிழர்கள் மேற்சொன்ன இரண்டு ஜில்லாக்கள் நீங்கலாக, மற்ற

ஜில்லாக்களில் ஆயிரக் கணக்கிற்குமே வில்லே. ஆனல், தமிழ்நாட்டில் தெலுங்கர்கள் லட்சக்கணக்கி லிருக்கிருர்களென்பதைக் கீழே கண்ட குறிப்பிற் காணலாம். தமிழ் நாட்டில் சேரவேண்டிய சித்தூர் ஜில்லாவைத் தவிர்த்து: மற்ற ஜில்லாக்களாவன, 1. சென்னே, 2. செங்கற்பட்டு, 3. ஆற்காடு, 4. சேலம், 5. கோயம்புத்தூர், 6. தென் ஆற்காடு, 7. தஞ்சாவூர், 8. திருச்சிஞப்பள்ளி, 9. மதுரை 10. ராமநாதபுரம், 11. திருநெல்வேலி, 12. நீலகிரி முதலியனவாகும்.

தமிழ் நாட்டிலுள்ள தமிழர்களும் ஆந்திரர் களும் :

	தமிழர்கள்	தெலுங்கர்கள்
1. சென்னே	4,11,823	1,24,649
2. செங்கற்பட்டு	12,90,877	3,19,946
3. வட ஆற்காடு	18,14,523	3,17,765
4. சேலம்	17,76,762	4,16,224
5. கோயம்புத்தூர்	15,72,544	5,29,640
6. தென் ஆற்காடு	22,11,169	1,84,334
7. தஞ்சாவூர்	22,66,383	68,429
8. திருச்சிஞப்பள்ளி	16,22,268	2,15,460
9. மதுரை	16,01,168	3,83,689
10. ராமநாதபுரம்	16,00,566	1,97,019
11. திருநெல்வேலி	18,37,542	1,76,960
12. நீலகிரி	54,3,11	9,482
மொத்தம்	1,80,619,36	29,43,596

29. மேலும் இரண்டு ஜில்லாக்களை நாம் வேண்டுவது நியாயமே

ஜில்லா கணக்குப்படி பார்த்தால், ஆந்திரர்களுக்குப் பன்னிரண்டு ஜில்லாக்களும் தமிழர்களுக்குப் பன்னிரண்டு ஜில்லாக்களு மிருக்கின்றன. ஆந்திரர்களுக்குக் கீழ்க் கோதாவரி, மேல் கோதாவரி யென்றிருப்பது போல், தமிழ் நாட்டினருக்கும் வட ஆற்காடு, தென் ஆற்காடு என இருக்கின்றன. சித்தூர் ஜில்லாவில் பாதியைத் தமிழ் நாட்டோடும், மற்ற பாதியை ஆந்திர நாட்டோடும் இணைத்து விட்டால், ஆளுக்கு பதினொன்றரை ஜில்லாக்கள் வீதம் கிடைக்கின்றன. ஆகவே, இந்தப் பிரிவுப்படி ஜனத் தொகையை எடுத்துக்கொண்டாலும் சரி அல்லது ஜில்லாக்களை எடுத்துக்கொண்டாலும் சரி சென்னையையும் செங்கல்பட்டையும் சித்தூரையும் ஆந்திரர்கள் ஆக்கிரமிக்க உரிமை இல்லை என்பதாகிறது. மேலும், மேலே குறிப்பிட்ட ஜில்லாக்களிலுள்ள தெலுங்கர்களுக்கு ஆந்திர நாட்டில் எவ்வித உரிமையும் கிடையாது. தமிழர்களோடு சேர்ந்து தமிழ்நாட்டாரைப் போலவே அவர்கள் இன்று வாழ்கின்றனர்.

ஆந்திர ஜில்லாவிலுள்ள தமிழர்களோ வெகு சொற்பம். அதிலும் பெரும்பான்மையோர் உத்தியோகத்திலும் வர்த்தகத்திலுமுள்ளவர்களாவர். சித்தூர் ஜில்லாவையும், நெல்லூர் ஜில்லாவையும் நீக்கி விட்டால், 51,525 பேர் தமிழர் ஆந்திர தேசத்திலிருக்கிறார்கள். ஆனல் தெலுங்கர்களைத் தமிழ் நாட்டில் சித்தூரையும் நெல்லூரையும் சேர்த்துக்கொண்டு பார்த்தால், 53,69,704 பேரா

வர். 53 லட்ச தெலுங்கர்கள் தமிழ் நாட்டில் வசிப்பதால், இவர்களுக்காக அனந்தபுரத்தையும், கடப்பையையும் தமிழ் நாட்டோடு சேர்த்துக் கொள்ளும்படி நமக்கு விட்டு விட்டால், தமிழ் நாட்டிலுள்ள தெலுங்கர்கள், ஆந்திர தேசத் தலைவர்களை நம்புவார்கள். உண்மையாகவும், நியாயமாகவும் மாகாணப் பிரிவினையைக் கோரினால், இன்னம் இரண்டு ஜில்லாக்கள் வேண்டுமென்று கேட்க வேண்டியவர்கள் தமிழ் நாட்டினரன்றி ஆந்திர நாட்டினரல்ல!

ஆந்திர தேசத்திலுள்ளத் தெலுங்கர்களைவிட தமிழ்நாட்டிலுள்ள தமிழர்கள் 32,85,077 பேராவர். தமிழ் நாட்டிலுள்ள தமிழர் ஜனத் தொகை அதிகமாயிருப்பதால், பக்கத்திலுள்ள ஆந்திர ஜில்லாக்களை வேண்டுமென்று கேட்கத் தமிழர்களுக்கு உரிமையுண்டு. ஆனால், தமிழர்கள் அவ்வாறு ஆக்கிரமிக்கக் கனவிலும் கருதவில்லை. இதுவன்றி ஆந்திர ஜில்லாக்களிலுள்ள மொத்த ஜனத் தொகை எல்லா பாஷைக்காரர்களைச் சேர்த்துப் பார்த்தாலும் தமிழ் நாட்டைவிட ஆந்திர ஜில்லாக்களில் குறைவாகக் காணப்படுகின்றனர். அஃதாவது சித்தூர் ஜில்லா உள்பட ஆந்திர தேசத்திலுள்ள மொத்த ஜனத் தொகை 1,93,80,941 பேர். தமிழ் நாட்டிலுள்ள எல்லா பாஷைக்காரர்களும் சேர்ந்து மொத்த ஜனத் தொகை 2,24,52,981 பேர். பெயருக்கு ஆளுக்கு 12 ஜில்லாக்கள் வீதம் பங்கிட்டுக் கொள்ளுவதாக வைத்துக் கொண்டாலும் சுமார் 30 லட்சம் பேர் அதிகமாகத் தமிழ் ஜில்லாக்களில் குடியிருக்கிறார்கள். தமிழ் நாட்டிலுள்ள தமிழர்களை மட்டும் கணக்கெடுத்தாலும் அல்லது எல்லா

பாஷைக்காரர்களையும் கணக்கெடுத்துப் பார்த்தாலும் ஆந்திர தேசத்தைவிடத் தமிழ் நாட்டில் தான் ஜனத் தொகை அதிகம்.

தமிழ் நாட்டில் ஜனத் தொகை அதிகமாயிருப்பது போல் நிலப் பரப்பு அதிகமா யிருக்கிறதா வென்று பார்த்தால் இல்லை. தமிழ் நாட்டில் மக்கள் பெருகியது போல் நிலப் பரப்பு அதிகப்பட வில்லை. தமிழர்களைவிட ஆந்திரர்களின் ஜனத் தொகை குறைந்திருந்தும் நிலப் பரப்பு அதிகமாயிருக்கிற தென்பதைக் கீழே குறித்துள்ள கணக்கிலிருந்து அறிந்து கொள்ளலாம். விஸ்தீரண மட்டுமல்ல. கிராமங்களையும், நகரங்களையும் பார்த்தாலும் யாருக்கு அதிகமிருக்கின்றன வென்பதும் விளங்கும். முதலில் ஆந்திர தேசத்தை எடுத்துக் கொள்வோம்:

ஆந்திர தேசம்

	நகரம்	கிராமம்	சதுர மைல்
1. கஞ்சம்	9	6978	8383
2. விசாகப்பட்டினம்	17	11547	17186
3. கீழ் கோதாவரி	11	1920	6220
4. மேல் கோதாவரி	10	716	2361
5. கிருஷ்ணா	9	981	3547
6. குண்டூர்	20	926	5757
7. நெல்லூர்	9	1621	7949
8. கடப்பை	8	889	5919
9. கர்னூல்	2	796	7581
10. பல்லாரி	10	908	5713
11. அனந்தப்பூர்	12	853	6741
12. சித்தூர்	7	2254	5901
மொத்தம்	124	30,389	83258

ஆந்திர தேசத்தில் மொத்தம் 124 நகரங்களும், 30389 கிராமங்களும் இருக்கின்றன. அதற்குத் தக்கபடி விஸ்தீரணம் 83,258 சதுர மைல்களாகும். இவ்வளவு விஸ்தீரணம் தமிழர்களுக்குக்கிடையாது. ஆகவே, தமிழ் நாட்டின் விஸ்தீரணத்தையும் கிராமங்களையும் நகரங்களையும் சற்றுக் கவனிப்போம்.

தமிழ்நாடு

	நகரம்	கிராமம்	சதுரமைல்
1. சென்னை	1	,,	29
2. செங்கற்பட்டு	17	2138	3091
3. வட ஆற்காடு	22	1998	4648
4. சேலம்	9	1782	7058
5. கோயம்புத்தூர்	13	1103	7085
6. தென் ஆற்காடு	16	2315	4208
7. தஞ்சாவூர்	22	2511	3742
8. திருச்சினுப்பள்ளி	12	1060	4314
9. மதுரை	19	1066	4912
10. ராமநாதபுரம்	31	3565	4819
11. திருநெல்வேலி	33	966	4315
12. நீலகிரி	4	53	982
மொத்தம்	199	18,557	49203

30. தமிழ்நாடு மீள அணிவகுப்போம்

தமிழ் நாட்டில் 199 நகரங்களும், 18557 கிராமங்களு மிருக்கின்றன. ஆந்திர தேசத்தைவிடத் தமிழ் நாட்டில் 75 நகரங்கள் அதிகமாயிருக்கின்றன வென்ருல், இந் நாட்டு நாகரிக வளர்ச்சியைக்

காண்பிக்குமேயன்றி வேறல்ல. கிராமங்களை எடுத்துக் கொண்டால், தமிழ் நாட்டை விட 11832 கிராமங்கள், ஆந்திரர்களுக்கு அதிகமாக இருக்கின்றன. அடித்தபடி சதுர மைல்களைப் பார்த்தால், தமிழ் நாட்டைவிட ஆந்திரர்களுக்கு 34,055 சதுர மைல்கள் அதிகமாக இருக்கின்றன. ஜனத் தொகை தமிழ் நாட்டை விட ஆந்திர தேசத்தில் குறைவே. விஸ்தீரணத்திலும், கிராம எண்ணிக்கையிலும் தமிழ் நாட்டைவிட ஆந்திர தேசமே விஞ்சியுள்ளது. நிலப் பரப்பை அதிகமாக வைத்துக் கொண்டும், ஜனத் தொகையில் குறைவாயுமிருக்கும் ஆந்திரர்கள், தமிழ்நாட்டை ஆக்கிரமிக்க நினைப்பது பேராசையேயாகும்.

தென் கன்னடம், மலையாளம் ஆகிய இரண்டு நாடுகளையும் சேர்த்துப் பார்த்தால், சென்னை ராஜதானியின் விஸ்தீரணம் 142,276 சதுர மைல். அதில் உள்ளவை, 51487 கிராமங்களாகும். இவைகளில் 83,258 சதுர மைல் ஆந்திர தேசமாகும். அஃதாவது சென்னை மாகாணத்தின் மொத்த விஸ்தீரணத்தில் ஏறத் தாழ மூன்றில் இரண்டு பாகம் ஆந்திர நாடாக இருக்கின்றது, மற்ற ஒரு பாகத்தில் கன்னடர்கள், மலையாளிகள், தமிழர்களிருக்கின்றார்கள். ஜனத் தொகை வீதாசாரப்படி பார்த்தாலும் 32 லட்சம் பேர் அதிகமாயுள்ள தமிழர்களுக்குத் தக்கபடி நிலப் பரப்பு அதிகமாக இருக்க வேண்டுமல்லவா? ஆனால், தமிழர்களுக்கோ ஆந்திரர்களுக்குள்ள நிலப் பரப்பில் சரிபாதிதானிருக்கிறது. இவ்வளவு குறைவான

நிலப்பரப்பைக் கொண்ட தமிழ் நாட்டை ஆந்திரர்கள் ஆக்கிரமிக்க நினைப்பது அநீதியாகும்.

சென்னை மாகாணத்தில் தென் கன்னடம் மலையாள ஜில்லாக்கள் உள்பட மொத்த கிராமங்கள் 51,487 ஆகும். இதில் ஆந்திரர்களுக்கு 30,389 கிராமங்களிருக்கின்றன. தமிழர்களுக்கு 18,557 கிராமங்களிருக்கின்றன. கிராமங்களைப் பார்த்தாலும், தமிழர்களைவிட ஆந்திரர்களுக்கு அதிகமாகக் கிடைத்துள்ளன. எப்படிப் பார்த்தாலும், ஆந்திரர்களுக்கு அதிகமான நிலப் பரப்பும், கிராமங்களும் கிடைத்திருப்பதால், சென்னையைக் கனவிலும் கருதமுடியாது. அடுத்தபடி சித்தூர் ஜில்லாவையும் தமிழ் நாட்டோடு இணைத்துவிடவேண்டுமென்பதற்குப் போதுமான ஆதாரங்கள் நமக்கு இருக்கின்றன.

ஆந்திர தேசத்திலிருக்க வேண்டிய பெரும்பான்மையான தெலுங்கர்கள் ஆதியில் தமிழ்நாட்டில் வந்து குடியேறித் தமிழர்களோடு தமிழர்களாகக் கலந்துவிட்டார்கள். இவர்களின் இன்பதுன்பங்கள் தமிழர்களைச் சார்ந்தனவேயன்றி ஆந்திரர்களை அல்ல. ஆகவே, இவர்களை ஆந்திர தேசத்தலைவர்கள் கணக்கெடுத்துக்கொண்டு இவர்களுக்காகப் பரிந்து பேசவேண்டிய வேலையை நிறுத்துவார்களாக. ஆதியில் தலைநகராயிருந்த வாரங்கல் தேசத்தைக் கைப்பற்றி, ஐதராபாத் சமஸ்தானத்தை ஆந்திர மாகா

ணத்தோடு இணைத்துக்கொள்ளட்டும். வடவேங் கடத்திலிருந்து வடக்கே இமயகிரி வரையில் ஆந்திரர்கள் தங்கள் மாகாணத்தோடு இணைத்துக் கொண்டு செங்கோல் ஓச்சட்டும். அதுபற்றி நாம் ஒன்றும் கூறப்போவதில்லை. தமிழர்களுக்குக் கிடைத்துள்ள 49203 சதுர மைல்களும் சித்தூர் ஜில்லா சதுரமைல் 5901-ல் பாதியான 2950 சதுர மைல்களும் சேர்ந்து 52153 சதுர மைல்களாகின் றன. இதில் ஆந்திரர் பங்கு கேட்பது நியாய மாகாது. ஆந்திரர்களுக்கு 80 ஆயிரம் சதுரமைல் கள் கிடைத்திருக்கின்றன. ஐதராபாத் சமஸ்தா னத்தையும் சேர்த்துக்கொண்டால் 160 ஆயிர சதுர மைல்களாகும். எனவே, இந்த வேலையில் முனைவார்களானல் நாம் தடை செய்யப் போவ தில்லை.

மாகாணப் பிரிவினைக்கு பாஷை மாத்திரம் போதாது. அந்நாட்டிலுள்ள பூர்விக சின்னங் கள், ஆலயங்கள், இலக்கண ஆசிரியர்கள் கூறிப் போந்த எல்லை அளவு, பழக்க-வழக்கங்கள், கலா சாரம் முதலியவைகளைக் கொண்டும் எல்லையை நிர்ணயிக்கவேண்டும். மேற்கூறிய அவ்வளவும் வட வேங்கடம் வரையில் தமிழர்களுக்குரித்தானது என் பதில் பொருந்தியுள்ளன என்பதை நாம் இதுகாறும் கூறியவாற்றால் ஒருவாறு நண்பர்கள் அறிவார்கள். ஏதோ வோட்டர் ஜாபிதாவைத் தெலுங்கில் பிரசு ரித்துவிடுவதாலும் மாகாண காங்கிரஸ் கமிட்டியை ஆந்திர நாட்டிலிருந்து சென்னைக்கு மாற்றிக் கொண்டு வந்து விடுவதாலும் சென்னை ஆந்திரர்

களுக்குச் சொந்தமாகிவிடாது. ஆகவே, ஆந்திரத் தலைவர்கள் ஆத்திரப்படாமல் அர ஆமர யோசிப் பார்களாக!

ஆனல் தமிழர்களே! ஆர அமர யோசிப்ப தற்கு நமக்கு இது காலமல்ல. நமக்குரிய நாட்டுப் பங் கைப் பெற அனைவரும் ஒன்று கூடுவோம் தமிழர் என்ற உணர்ச்சியில். பண்டைய தமிழ் ஏற்றத்தினை மீண்டும் கண்டு ஆனந்திப்பதே தமிழ் நாட்டில் பிறந்த ஒவ்வொரு தமிழனுக்குமுள்ள கடமை யாகும்.

தமிழின் உயர்வுக்கு எது தேவை? தமிழரசு தேவை. தமிழரசு நிறுவ நமக்கு நாடு வேண்டும்' அந்த நாடு எது? அது தான் 'வட வேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம். இதனை யடையக் கிளர்ச்சி செய்வோம். கட்சி, மத, இன வேறுபாடுகளைக் களைந்து அணி அணியாக நிற்போம். வீறு கொள்வோம். தமிழ் முரசை முழக்குவோம். எவர் வரினும் வெல்வோம்.

தமிழர் வாழ தமிழ் நாடு வாழ்க!